R. Ruth

THAYAGAM

8 . 10 . 93

75¢

# தாயகம்

உண்மை:5
தோடல்:14

# முன்னேறிய இராணுவம் முகாமுக்கு பின்வாங்கியது

## கிளாலிப்படகுத்துறை தாக்கப்பட்டது

இரத்தினபுரியில் மண்சரிவு
பஸ்,வீடுகள் மூடப்பட்டன

புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரவில்லை, அதனல் தான் தாக்குதல்

ஜனதிபதி கூறுகிறர்

இந்திய பூகம்பம் பற்றி ஆருடம் கூறிய சோதிடர்

செம்பியன்பற்றில் மோதல்

# EVERGREEN

## IMPORT & DISTRIBUTORS

**(416) 964-8601**
**324-9345/ 968-9545**

இலங்கை,
இந்தியப்
பத்திரிகைகள்,
சஞ்சிகைகளை
உடனுக்குடன்
பெற்றுக் கொள்ளலாம்.
நேரடி விநியோகமும்
உண்டு.



**வர்த்தகர்களுக்கு
விசேட கழிவுகள்
உண்டு**

தலைநகை, தலைப்பாகை
வாடகைக்கு கிடைக்கும்

**சிவசங்கரி, பாலகுமாரன்,
அனுராதா ரமணன், சுஜாதா,
புஷ்பா தங்கத்துரை, லேனா
தமிழ்வாணன், மு.கருணாநிதி,
கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா
உட்பட தமிழகத்தின்
பிரபல எழுத்தாளர்களின் புத்தகங்கள்
மலிவு விலையில் கிடைக்கும்.**

வவுனியா,
யாழ்ப்பாணம்,
கொழும்பு, இந்தியா,
சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கும்
உடனுக்குடன்
பணம் அனுப்பி
வைக்கப்படும்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

- மங்கையர் மனம் விரும்பும் நவநாகரீக ஆடைகள்
- ஆண்களுக்கான ஜீன்ஸ், ரீ சேட் வகைகள், சாரங்கள், பட்டு வேட்டி வகைகள்
- சாறி வகைகள்
- அலங்காரப் பொருட்கள், பரிசுப் பொருட்கள்
- மற்றும் எவர்சில்வர் பாத்திரங்கள்

*அனைத்தும் மலிவான விலையில்
எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**566 A Parliament St (Parliament/Wellesley)**

Second class mail Registration No:8435

தாயகம்

'உண்மையைத் தேடி'

# கிளாலியைக் கைப்பற்றிய இராணுவம் பின்வாங்கியது துறைமுகம், படகுகள் நிர்மூலம்

**ஆனையிறவில் இருந்து முன்னேறிய இராணுவம் கிளாலிப் பகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின்னர் தற்போது மீண்டும் முகாமுக்குப் பின்வாங்கியுள்ளது. ஒரு வார கால தாக்குதல் நடவடிக்கைகளில் 118 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 260 பேர் காயமடைந்ததாகவும் 350 புலிகளைக் கொன்றதாகவும் அதில் 74 பேர் பிரதேசப் பொறுப்பாளர்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.**

நான்கு படையணிகளில் சுமார் பத்தாயிரம் இராணுவத்தினர் இந்த தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தனர். தங்கள் தாக்குதலில் பெண்களின் பயிற்சி முகாம் உட்பட ஏழு முகாம்களை அழித்ததாகவும் புலிகளின் தொழில்நுட்பக் கூடம் ஒன்றும் அழிக்கப்பட்டதாகவும் 24 பெண்புலிகளைக் கொன்றதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 120 படகுகளை அழித்ததாகவும் 450 படகுகளை கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிடித்துக் கொண்ட கிளாலிப் பகுதியில் இருந்து இராணுவம் பின்வாங்கியது குறித்து எதிர்க்கட்சிகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த தாக்குதலில் இராணுவத்திற்கு பலத்த இழப்பு ஏற்பட்டது குறித்தும் எந்த பயனும் ஏற்படாதது குறித்தும் பல தரப்புகளிலும் இருந்து கண்டனங்கள் எழுந்துள்ளன.

தங்களது தாக்குதலின் நோக்கம் குடாநாட்டுக்கும் பெருநிலப்பரப்புக்கும் இடையில் புலிகளின் போக்குவரத்தை கட்டுப்படுத்துவதே என்றும் அதில் தாம் வெற்றியடைந்துள்ளதாகவும் இராணுவத் தலைமைப்பீட அறிக்கை தெரிவிக்கிறது.

ஆயினும் இந்த தாக்குதல் தவறாக திட்டமிடப்பட்டதுடன் தவறான நேரத்தில் நிகழ்த்தப்பட்டதாகவும் இராணுவ தரப்பில் சிலர் தெரிவித்துள்ளனர். தாக்குதலுக்கு முன்பாகவே புலிகள் தங்கள் படகுகளை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தி விட்டதாலும் இராணுவத்திற்கு பலத்த இழப்பு ஏற்பட்டதாலும் பிடித்த பிரதேசத்தை கட்டுப்பாட்டில் வைக்க முடியாத நிலை உள்ளதாலுமே இந்த வெற்றி குறித்து கண்டனங்கள் எழுந்தன. அத்துடன் பிடிக்கப்பட்டதாக கூறப்படும் படகுகளும் பாவனைக்குதவாதன என்றும் கூறப்படுகிறது.

வவுனியா வந்து சேர்ந்தவர்களின் கருத்துப்படி புலிகள் கிளாலிக்கு மீண்டும் வந்துள்ளதாகவும் தற்போது அவர்கள் இராணுவம் வைத்திருக்கக் கூடிய கண்ணிவெடிகளைத் தேடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதிய ஆட்பலமும் பொருள் வினியோகமும் இல்லாத காரணத்தினாலேயே இராணுவம் பின்வாங்கியதாக கூறப்படுகிறது. ஆயினும் இவ்வாறான தாக்குதல் ஒன்றுக்காக இவ்வளவு உயிரிழப்பு அவசியமானதா என இராணுவ அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த தாக்குதல்களால் எந்தப் பயனும் இல்லை என்றும் இந்த

2ம் பக்கம் பார்க்க...

# அரசியல் தீர்வு பற்றி ஐ.நாவில் ஹமீது

ஒரு புறத்தில் இராணுவ நடவடிக்கை அதிகரித்த மறுபுறத்தில் 'வடக்கு கிழக்கு அரசியல் நெருக்கடிக்கு அரசியல் தீர்வு காணும் இலக்கிலிருந்து இலங்கை அரசு விலகவில்லை' என்று அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது ஐ.நா சபையில் தெரிவித்துள்ளார். ஐ.நா சபையின் பொதுச்சபையின் 48ம் கூட்டத் தொடரில் உரையாற்றிய அமைச்சர் அரசியல் தீர்வைக் காணும் முயற்சியில் தெரிவுக்குழு ஈடுபட்டுள்ளதாகவும் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரசு அத்தியாவசிய வினியோகங்களை செய்வதுடன் கல்வி, சுகாதார வசதிகளையும் செய்து வருகிறது என்றும் கூறினார்.

புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிக் கூறிய அமைச்சர் வெளிப்படுத்தப்படாத காரணங்களுக்காக அவர்கள் பேச்சுவார்த்தைகளைத் துண்டித்துக் கொண்டதாகவும் அப்பேச்சுவார்த்தை நடந்த போது அமைதி நிலவியதாகவும் கூறினார்.

அத்துடன் பிரேமதாச கொல்லப்பட்ட போது 24 மணி நேரத்துக்குள் சுமுகமாக அதிகார மாற்றம் நடைபெற்றது இலங்கை அரசியலமைப்பினதும் ஜனநாயக முறையினதும் முதிர்ந்த தன்மையைக் காட்டுகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

வடக்கு கிழக்கு பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கத்திலிருந்து அரசாங்கம் விலகவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் நான்கு வருடங்களின் பின் ஐ.நா சபையில் உரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிளாலியை...

தாக்குதலின் நோக்கம் அரசியல் காரணம் என்றும் அடுத்த வருடம் தேர்தல் நடைபெற இருப்பதால் கடந்த ஒரு வருட காலமாக இராணுவம் என்ன செய்கிறது என்று கேட்கின்ற சிங்கள மக்களை சமாதானப்படுத்தச் செய்யப்பட்ட தாக்குதல் என்றும் இளைப்பாறிய விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக தெரிவித்திருக்கிறார். சாவகச்சேரியைப் பிடிக்கும் நோக்கம் இருந்திருந்தால் இன்னமும் அதிகமாகத் திட்டமிடப்பட்டு அதிகளவில் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினர்.

முதலில் தாக்குதலில் ஈடுபட ஆனையிறவில் இருந்து புறப்பட்ட படையினர் கண்டி வீதிக்கும் கடற்கரையோரத்திற்கும் இடையில் புதிய பாதை அமைத்து இராணுவம் முன்னேறியது. இவர்களுக்கு எந்த வித எதிர்ப்பையும் புலிகள் வழங்கவில்லை. முன்னேறிச் சென்ற இராணுவம் மீது புலிகள் நடத்திய தாக்குதலாலேயே பல படையினர் உயிர் துறந்தனர். முன்னேறிச் சென்ற இராணுவத்தினர் கிளாலிப் பகுதியில் பொதுமக்கள் கடலைக் கடக்க பயன்படுத்தப்பட்ட துறைமுகப் பகுதியை கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அங்கு தற்காலிக முகாமை நிறுவி நிலைகொண்ட இராணுவத்தினர் அங்கிருந்து தங்களில் கொல்லப் பட்டவர்கள், காயமடைந்தவர்களை பூனகரியூடாக தென்பகுதிக்கு அனுப்பி வைத்தனர்.

கிளாலிப் பகுதியில் துறைமுகம், மற்றும் படகுகளை நிர்மூலமாக்கிய பின்னர் சாவகச்சேரிக்கு இராணுவம் நகரலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் தொடர்ந்து கிளாலியில் தங்குவதில் பல சிக்கல்கள் எதிர்பார்க்கப்பட்டன. இராணுவத்திற்கான பொருள் வினியோகத்திற்கு சரியான தரைவழி இணைப்புகள் இல்லை. அத்துடன் மாரி காலம் தொடங்கும் பட்சத்தில் அங்கு இராணுவம் நிலை கொள்ள முடியாது. எனவே இராணுவம் பின்வாங்கிச் சென்றது.

# தாக்குதலுக்கு முன்னேடித் திட்டங்கள்

சமீபத்தில் கூட்டுப்படைத் தலைமையகம் கலைக்கப்பட்டு புதிய பாதுகாப்பு செயலாளராக ஹமில்டன் வணசிங்க பதவியேற்ற போது ஜனதிபதி படைத் தளபதிகளை அழைத்து இராணுவத் தாக்குதலில் வெற்றிபெறுமாறு கூறியபோது கிளாலித் தாக்குதல் பற்றித் திட்டமிடப்பட்டது. இதற்கு முன்னேடியாக படைகளும் ஆயுதங்களும் வடக்கில் குவிக்கப்பட்டன. புலிகளின் உயிர்நாடியாக கிளாலிப் படகுப் போக்குவரத்து இருப்பதாகவும் இதை துண்டிப்பதன் மூலம் புலிகளை முற்றாக முடக்கலாம் என்றும் இராணுவம் கருதியது.

வெளிநாட்டு ஆயுதக் கொள்வனவில் அவசரமாக இராணுவம் ஈடுபட்டது. முதல் தொகுதியாக சீன ஆயுதங்கள் வந்ததும் உடனடியாக அவை வடக்கே அனுப்பப்பட்டன. முப்படைத் தளபதிகளும் பலாலி சென்று வடபகுதி தளபதிகளுடன் ஆலோசனை நடத்தினர். இதன் பின்னர் தாக்குதல் ஆரம்பமானது.

# பொருட்கள் செல்வதில் தடை

யுத்தம் தொடங்கப்பட்ட காரணத்தினல் வடபகுதிக்கு கொண்டு செல்லப்பட்ட பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு செல்லவில்லை. ஊரடங்குச் சட்டம் காரணமாக பொருட்களை இறக்க முடியாதுள்ளது என்றும் மூன்று மாதங்களுக்கு தேவையான உணவுப் பொருட்களே களஞ்சியங்களில் இருப்பதாகவும் புனர்வாழ்வு அமைச்சு கூறியது. இரண்டு கப்பல்களில் உரமும் உணவுப் பொருட்களும் அனுப்பப்பட்டுள்ளன.

வடபகுதியில் தற்போது பால்மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# வடக்கில் காலரா

யாழ்ப்பாணத்தில் தற்போது வயிற்ருேட்ட நோய் அதிகரித்துள்ளது. சுகாதாரக் குறைபாடுகள் உள்ள பகுதியில் வைரஸ் கிருமித் தொற்றினுல் ஏற்படும் இந்த வாந்திபேதி நோய்க்கு காரணம் இந்தியாவிலிருந்து வந்த அகதிகள் என்ற வதந்தி யாழ்ப்பாணத்தில் பலமாக அடிபடுகிறது.

ஆயினும் அதிகள் அனைவருக்கும் துறைமுகத்தில் வைத்து தடுப்பூசி போடப்பட்டதாகவும் வந்தவர்கள் யாரும் குடாநாட்டுக்கு அனுப்பப்படவில்லை என்றும் குடாநாடு தவிர்ந்த இடங்களிலேயே அவர்கள் குடியமர்த்தப்பட்டார்கள் என்றும் அப்பகுதிகளில் அந்நோய் வரவில்லை என்றும் கூறிய வைத்திய வட்டாரங்கள் இந்த வதந்திகள் தவருனவை என்று கூறியுள்ளன.

# புதிய முஸ்லிம் இயக்கம்

காத்தான்குடியில் முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஒன்று தோன்றியுள்ளது. முஜாகிதீன் அமைப்பு என்று கூறிக் கொள்ளும் இநத அமைப்பினர் ஆட்களைக் கடத்தி பணம் பறிக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். வர்த்தகர் ஒருவரை ஐம்பதாயிரம் ரூபா தரும்படி மிரட்டிய போது அவர் பொலிசாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அளித்த தகவல்களின் பேரிலேயே புதிய அமைப்பு பற்றி தெரிய வந்துள்ளது.

இந்த அமைப்பின் பிரசுரங்கள், வெடிகுண்டுகள் என்பன இவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்டுள்ளன.

காத்தான்குடிப் பகுதியில் இயங்கி வந்த இந்த அமைப்பு குறித்து பொலிசார் விசாரணை செய்து வருவதுடன் கைது செய்யப் பட்டவர்களுடன் தொடர்பானவர்கள் பற்றியும் பொலிசார் விசாரித்து வருவதாக கூறப்படுகிறது.

# வவுனியா மாவட்ட அபிவிருத்தி சங்கம்-கனடா
# அங்குரார்ப்பணம்

அன்புடன் கனடா வாழ் வவுனியா மாவட்ட தமிழ் மக்களுக்கு!

கடந்த 26-9-93 ஆம் திகதி முன்னுள் வவுனியா நகர சபை தலைவர் திரு ஐ. கேதீஸ்வரன் தலைமையில் வவுனியா மாவட்ட மக்களின் சமூக நலன் மற்றும் அபிவிருத்திக்காக (முன்னேற்றத்திற்காக) வவுனியா மாவட்ட அபிவிருத்தி சங்கம் கனடா (Vavuniya Development Society Of Canada) என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறிய தருகிறோம்.

குறுகிய கால இடைவெளிக்குள் இவ் வைபவம் நடைபெற்றதாலும் போதிய கால அவகாசம் இன்மையாலும் வவுனியா மாவட்ட மக்கள் அனைவருக்கும் அறியத்தர முடியாமைக்கு வருந்துகிறோம். இவ்வறிவித்தல் மூலம் அனைத்து வவுனியா மவாட்ட தமிழ் மக்களிற்கும் அறியத் தருகிறோம்.

சென்ற கூட்டத்திற்கு சமூகம் தந்த உறுப்பினர்களால் 15 பேர் கொண்ட நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கனடா வாழ் அனைத்து வவுனியா மாவட்ட மக்களினது அங்கத்துவம், ஒத்துழைப்பு, ஆலோசனை, அபிப்பிராயங்களை தந்துதவுமாறு பனிவுடன் வேண்டுகிறோம்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| சு.விஜயபாரதி | பா. சண்முகராஜன் | த. பாலசுப்பிரமணியம். |

தொடர்புகளிற்கு

(416) 324-9345 ஜெயா
964-8601 ஜெயா
962-2486 பாரதி
431-3331 காந்தன்
929-2099 பிரபா
292-4723 சந்திரன்

# ஐ.நா தலையீடு தேவையில்லை
## பி.பி.சியில் ஹமீது

பி.பி.சி செய்திச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் இலங்கை அரசு இராணுவத் தீர்வு குறித்து அக்கறை கொண்டிருப்பது குறித்து கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்த அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீது அரசியல் தீர்வு கைவிடப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா தலையீடு தேவையா என்பது பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கையில் 'உள்நாட்டுப் பிரச்சனையாகையினால் ஐ.நா மத்தியஸ்தம் தேவையில்லை, பிரச்சனையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஒரே நாட்டினர், ஒருவரை மற்றவருக்கு அறிமுகப்படுத்த இன்னொரு தரப்பு தேவையில்லை, நாங்கள் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து வைத்துள்ளோம்' என்று அமைச்சர் கூறினார்.

தெரிவுக்குழுவில் சில அங்கத்தவர்கள் மட்டுமே கலந்து கொண்டது பற்றிக் கேட்ட போது 'சிலர் கலந்து கொள்ளாவிட்டால் தெரிவுக்குழுவுக்கு நம்பகத்தன்மை இல்லை என்று அர்த்தம் அல்ல. வடக்கு கிழக்கு இணைக்கப்படக் கூடாது என்பதில் அது கருத்து ஒற்றுமை உள்ளதாக இருக்கிறது. மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது பற்றியும் பேசப்பட்டது. சமஷ்டி பற்றிய பேச்சும் உண்டு, சில தமிழ்க்கட்சிகள் பிரேரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளன' என்று அமைச்சர் பதிலளித்தார்.

புலிகள் தம் தமது வழியில் செல்லலாம் என்று நினைக்கக் கூடாது, அப்படி நினைத்தால் அரசியல் தீர்வு சிக்கலாகி விடும் என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

# இரத்தினபுரியில் மண்சரிவு
## பஸ், வீடுகள் மூடப்பட்டன

இரத்தினபுரியில் இடம் பெற்ற மண் சரிவினால் பலர் கொல்லப்பட்டுள்ளனர். கடும் மழை காரணமாக மலைச்சரிவு ஒன்றில் மண் சரிந்து பஸ் ஒன்றையும் பத்துக்கு மேற்பட்ட வீடுகளையும் முடியுள்ளது. பஸ்ஸிலும் வீடுகளிலும் உள்ளவர்களும் புதையுண்டுள்ளார்கள். எட்டு உடல்கள் மீட்கப்பட்டதுடன் கடும் முறிகாயங்களுடன் ஆறு பேர் மீட்கப்பட்டுள்ளனர். பலர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கொடிகமுவ பகுதியில் பதினைந்து குடும்பங்கள் மண்ணுள் புதையுண்டுள்ளன. நூறு பேர் வரை இறந்திருக்கலாம் என்று பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பஸ் முழுமையாக புதைந்துள்ளதாகவும் ஒரு உடல் மட்டுமே மீட்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகள் உடனடியாகத் தொடங்கினாலும் அதிகரித்து வரும் நீர் மட்டத்தினால் மீட்புப் பணிகளில் தடை ஏற்பட்டுள்ளது. சேறு காரணமாக புல்டோஸர்கள் அங்கு செயற்பட முடியவில்லை. இராணுவமும் தொண்டர்களும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மழை காரணமாக மலையோரமாக பெரும் கல் ஒன்றும் மண்ணும் சரிந்து சுமார் பத்து அடி உயரத்திற்கு பஸ்ஸையும் வீடுகளையும் மூடியுள்ளது. கிராமத்தில் பாதிக்கு மேல் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நேரத்தில் ஆண்கள் வேலைக்கு சென்றதால் பெரும்பாலும் புதையுண்டது பெண்களும் குழந்தைகளுமே. பத்து நாட்களாக தொடர்ந்தும் மழை பெய்வதால் இன்னமும் மண்சரிவு ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

அப்பகுதியிலிருந்து ஐம்பது பேர் வரை வெளியேற்றப்பட்டுள்ளனர். இரத்தினபுரியில் பல இடங்களில் ஆறு அடிக்கு மேல் வெள்ளம் பாய்ந்தோடுகிறது.

# செம்பியன்பற்றில் மோதல்

செம்பியின்பற்றுப் பகுதியில் நடந்த மோதலில் கடற்படைப் படகு ஒன்று இரண்டு புலிகளைக் கொன்றதுடன் மூன்று படகுகளை தகர்த்ததாக இராணுவத் தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

அம்பாறையில் விநாயகபுரத்தில் அதிரடிப்படையினர் புலிகளைத் தாக்கி இருவரைக் கொன்றதுடன் இரண்டு ரைபிள்களையும் நான்கு கிரனெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் நளின் அங்கம்மன தெரிவித்திருக்கிறார்.

# யூரியா கடத்தல் விவகாரம்

வடக்கே யூரியா அனுப்ப முயன்றது தொடர்பாக மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பத்து தொன் யூரியாவை கடந்த செப்டம்பர் மாதம் 900 தொன் அமோனியாவுடன் சேர்த்து அனுப்ப முயன்ற முயற்சி வெளியில் வந்ததை அடுத்து ஒரு வர்த்தகர் ஒருவர் தேடப்பட்டிருந்தார். தற்போது இவர் பொலிசாரிடம் சரணடைந்துள்ளார். அத்துடன் தொடர்பான மேலும் பத்துப் பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சரணடைந்த வர்த்தகருக்கு சொந்தமாக பல லொறிகள் இருப்பதாகவும் இவற்றில் இரு லொறிகளில் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கடத்த இரகசிய அறைகள் இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# 2 தளபதிகள் நிலை

சமீபத்திய தாக்குதலில் முக்கிய பங்காற்றிய தளபதி சரத் பொன்சேகா மோட்டார் தாக்குதல் காரணமாக நெஞ்சுப் பகுதி பாதிப்புற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். ஆபத்தான கட்டத்தை இவர் தாண்டி விட்டார் என்று கூறப்படுகிறது.

இன்னொருவரான கப்டன் மஞ்ஜுலா நாணயக்கார காணாமல் போய் விட்டார். இவர் புலிகளால் பிடிக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுபவங்கள் வாழ்வில் நிறைவைத் தருகிறது.

பிரச்சனைகளுடன் போராடி வெற்றி கொள்ளுதல் என்றால் என்ன, அவற்றின் நின்றும் நழுவிக் கொண்டு தப்பியோடுவது என்றால் என்ன, உயிர் வாழ்தல் அனுபவங்களினால் இலகுவாக்கப்படுகிறது.

சிலவேளைகளில் நிச்சயமாக்கப் படுகிறது.

இது மனித குலத்திற்கு மட்டுமல்ல, சகல ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

தாவரங்கள் கூட தமக்கு ஏற்படுகின்ற சூழல் நெருக்கடிகளில் இருந்தும் தப்பித்துக் கொள்ள அறிவுப் பரிவர்த்தனை செய்து கொள்கின்றன என்று நிபுணர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

நோயினால் பீடிக்கப்பட்ட தாவரங்கள் தங்கள் அயலில் உள்ள பலமான தாவரங்களுக்கு தங்கள் நோய் பற்றி அறிவித்து நோய் பீடிக்குமுன் தடுப்பாற்றலை உருவாக்கிக் கொள்ளுமாறு முன்னெச்சரிக்கையும் செய்து கொள்கின்றன என்றும் இதனால் தான் காடுகள் சோலைகள் நோய் என்ற பேரழிவிலிருந்து தப்பித்துக் கொள்கின்றன என்றும் டாக்டர் டேவிட் சுசுகி சமீபத்தில் செய்துள்ள ஆராய்ச்சி ஒன்றின் மூலம் நிறுவியுள்ளார்.

ஒரு சில தாவரங்களின் அனுபவங்கள் அத்தாவர சமூகத்தையே அழிவுகளிலிருந்தும் காப்பாற்றுகிறது. சமூக வாழ்வின் அடிப்படையே இதுதான்.

அனுபவங்கள் பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும். விளைவு நழுவலா? அல்லது போராட்டமா என்பதை அடுத்தவர்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும்.

சமூகப் பிரக்ஞை உள்ள சகலருக்கும் ஒரு கடமை.

இந்த அனுபவங்கள் இயற்கையானதாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, பரிவர்த்தனை தெரிவுபடுத்தப்பட்டதாகவோ, அல்லது மறைநோக்கம் எதையும் கொண்டனவானதாகவோ இருக்கக் கூடும்.

தாவரங்கள் தங்களை நோய் ஏதும் பீடிக்கவில்லை என்று பொய் சொல்லியிருந்தால் காடு சோலை என்று ஒன்றுமே இருந்திருக்க முடியாது.

கண்டதை கேட்டதை அறிந்ததை

# சிவதாசனின்



# அசை

## தேடுங்கள்! தரப்படும்!

தெரிந்ததை சமூகத்தோடு பரிவர்த்தனை செய்வதில் பிழை ஏதும் இருக்க முடியாது.

அந்த வகையில் தான் 'முகம் தொலைக்கும் மனிதர்கள்' என்ற கட்டுரையை இருவாரங்களுக்கு முன் எழுதினேன். இதற்கு சில எதிர்ப்புகள் கிடைக்காமலும் இல்லை. அது சர்ச்சைக்குரிய விடயம் என்று நழுவிக் கொண்டு விடுவதோ, அல்லது சமூகத்தில் புரையோடப் போகும் பாரிய பிரச்சனை என்று சொல்லி கிளர்ந்தெழுந்து போராட வேண்டும் என்பதோ எனது நோக்கம் அல்ல.

மதவெறியில் கழித்துத் திளைப்பதும் மதுவெறியில் குளித்துக் களிப்பதும் எல்லாமே ஒன்றுதான். இரண்டுமே சிந்தனை சக்தியை அமுக்கி விடுகின்றன. இந்த வெறி மனிதர்களை மட்டுமே தடுத்தாற்கொள்ள முடிகிறது. கடவுள்களை அல்ல. கடவுள்கள் மதவெறிகளை என்றுமே தூண்டியதில்லை.

பக்திக்கு நாமமிட்டு விட முடியாது.

கடவுளைத் தேடுவதற்கு ஆயிரம் காரணம் இருக்கலாம். ஒவ்வொரு மதங்களும் தங்கள் வழிகளில் கடவுளைக் காட்ட முயல்கின்றன. எந்த வழி சரியென்று படுகிறதோ அந்த வழியைப் பின்பற்ற தேடுபவனுக்கு உரிமையுண்டு.

நடுச்சந்தியில் நிற்பவனைப் பிடித்து இது மட்டும் தான் ஒரே பாதை, மற்றதெல்லாம் ஆபத்தானது என்று சொல்வது நீதியல்ல. சில மதமாற்ற முயற்சிகள் இந்த வழியில் நடைபெறுகின்றது என்று தான் சொல்ல முனைந்தேன்.

மதத்தையும் மதம் சார்ந்தவர்களையும் மக்கள் நம்புகிறார்கள். அவர்களது பலவீனங்களை அனுகூலமாகப் பாவித்து வெறும் ஆட்சேர்ப்புப் படைகளாக மதங்கள் பிரிவடைவது சரியல்ல என்கிறேன்.

கற்பிப்பதற்கும் (Teaching) போதிப்பதற்கும் (Preaching) நிறைய வித்தியாசங்கள் உண்டு. புத்தர், யேசுநாதர் போன்ற மகான்களின் அனுபவங்கள் மற்றவர்களுக்குப் படிப்பினைகள். இவ்வாழ்க்கை நெறிகளுக்கு மதநாமம் இடப்பட்டது. இதைக் கற்றுக் கொண்ட மக்கள் இந்த வாழ்க்கை நெறிகளினால் கவரப்பட்டு இம்மதங்களை தழுவிக் கொண்டார்கள். இது ஒருவகையில் அறிவார்ந்த தேடலின் விளைவு. இங்கே மனிதனின் சிந்தனை செயலிழக்கம் பெறாமல் மாறாக ஊக்கம் பெறுகிறது. கற்றலுக்கு இது ஒரு நிபந்தனை.

போதனைகள் முற்றாக எதிர்நோக்கம் கொண்டவை. 'இதுதான் சரி. இதை நீ நம்பு இப்படி அவர் சொல்கிறார். இப்படி இது சொல்கிறது. இதை நீ நம்பு என்றவாறு கற்றல் சிந்தனை வழி விடப்படாது அறிவு மூளைகளில் அறையப்படுகிறது. சிந்திக்கும் பழக்கத்தை செயலிழக்கச் செய்வதன் மூலம் மக்களை என்றும் மந்தைகளாக வைத்திருப்பதே இப்போதனைகளின் நோக்கம்.

மேற்குநாடுகளில் அரசியல் கோட்பாடுகள் பலவும் இந்தப் போதனை வழிப்பட்டவையேதான். தகவல் சாதனங்களை தம் வயப்படுத்தி செய்திகளை திரிபுபடுத்தி பொய்களை அறைந்து கொள்வதன் மூலம் மக்களின் சிந்திக்கும் திறனை மழுங்கடிக்கச் செய்வது அரசுகளின் மறைநோக்கங்களில் பிரதானமான ஒன்று. 'கேள்வி கேட்பது அனுமதிக்கப்பட மாட்டாது.

# 84 புலிகள் கொல்லப்பட்டனர்

இந்த வாரத்தாக்குதல்களில் தமது தரப்பில் 84 புலிகள் கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கும் மேல் பொதுமக்கள் கொல்லப் பட்டதாகவும் புலிகள் தெரிவித் துள்ளனர். கிளாலியை இராணுவத் தினர் கைப்பற்றிய பின்னர் லண்டனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் 125 இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களாலும் ஷெல் தாக்குதல்களாலுமே மக்கள் கொல்லப்பட்டனர் என்றும் எழுபது ஏ. கே 47 துப்பாக்கிகளும் எட்டு இயந்திரத் துப்பாக்கிகளும் மூன்று மோட்டார்களும் நான்கு ரெக்கட்டு க்களால் உந்தப்படும் கிரனெட்டுகளும் நான்கு பிஸ்டல்களும் கைப்பற்றப் பட்டதாக புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதல்களின் போது புலிகள் பெருமளவு தாக்குதலில் ஈடுபடவில்லை என்று செய்திகள் வந்த போது பாரிஸில் இருந்த பேச்சாளர் ஒருவர் 'இது நடந்திருக்கும் என்று நினைக்கிறோம், ஆனால் அதற்கு காரணங்கள் இருக்கும். நாங்கள் தலைமைப்பீடத்திலிருந்து மேலதிக தகவல்களை எதிர்பார்க்கிறோம்' என்று கூறினர்.

கிளிநொச்சிப் பகுதியில் சுமார் மூவாயிரம் பேர் எங்கும் போக முடியாதபடி தடைப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் கொல்லப்பட்ட புலிகளின் உடல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்படுகிறது. சந்திகளில் தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளதுடன் பலர் கொல்லப்பட்டவர்களைச் சென்று பார்வையிட்டனர். இரண்டு பக்கங்கள் நிறைய ஈழநாதத்தில் கொல்லப்பட்ட புலிகளின் படங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

2 டாங்கிகள், 2 கவச வாகனங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் மேலும் இரண்டு சேதப்படுத்தப் பட்டதாகவும் கைப்பற்றப்பட்டவை பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இயக்கத்தில சேரும்படியும் மக்களுக்கு கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

# தாக்குதலுக்கு காரணம் என்ன?

## ஜனாதிபதி விளக்கம்

புலிகள் சமாதான முயற்சிகளை நிராகரித்ததாலேயே இராணுவம் தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார். கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வந்த ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவைச் சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினர். புலிகள் சமாதான முயற்சிகளை நிராகரித்ததாலும் அரசாங்கம் மக்களை பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்க வேண்டியிருந்ததாலுமே இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் கூறிய அவர் புலிகள் தீர்வில் நம்பிக்கை கொண்டிருந்தால் ஏன் அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கு வரவில்லை என்றும் கேள்வி எழுப்பினர்.

ஆயினும் அரசியல் தீர்வு காண்பதில் தான் உறுதியாக உள்ளதாகவும் அவர் ஐரோப்பிய பாராளுமன்ற அங்கத்தவர்களுக்குத் தெரிவித்தார்.

# பூமியதிர்ச்சி பற்றி ஆரூடம் சொன்ன சோதிடர்

கடந்த வாரம் இந்தியாவில் இடம் பெற்ற பூமியதிர்ச்சி நடைபெறும் என்று முன்கூட்டியே ஆரூடம் சொன்ன ஜோஸ்யர் மீண்டும் இந்த மாத இறுதிக்குள் இன்னொரு தடவை பூகம்பம் நிகழும் என்று கூறியிருக்கிறார். சிறீபத் எக்நாத் படக் எனப்படும் ஜோஸ்யர் இந்த மாதத்தின் இரண்டாம், அல்லது இறுதிக் கிழமை மீண்டும் பூகம்பம் நிகழும் என்றிருக்கிறார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் கிலாரிப் பகுதியில் பூகம்பம் நிகழும் என்று இவர் கூறியிருந்தார். காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்றும் இவர் சோதிடத்தை ஒரு பொழுது போக்காக செய்து வருகிறார்.

# தேடுங்கள்..

உங்களுக்காக நாங்கள் சிந்திக்கிறோம். சொல்வதைச் செய்யுங்கள். எங்களை நம்புங்கள்' என்பது தான் போதனைகளின் கோட்பாட்டு மையம்.

ஒரு மனிதனது சுயசிந்தனையும் சுயஅனுபவத் தேர்வுகளும் அவரது பிறப்புரிமைகள். இவற்றினின்றும் அவனை எவ்வகையாயினும் தடுக்க முயல்வது நீதியற்றது மட்டுமல்ல ஒருவகையில் குற்றச் செயலும் கூட. போதனைகளின் மூலம் மூளைகள் கழுவப்பட்டு மனிதர்களை வெறும் நூலிழைப் பொம்மைகள் ஆக்குவதால் சமூகம் ஒட்டுமொத்தமாகவே சிந்திக்கும் திறனை இழந்து விடும்.

செயலிழக்கப்பட்ட சிந்தனைகளும் முடக்கப்பட்ட அனுபவ பரிவர்த்தனைகளும் சமூகத்தின் பொருளாதார ஈடேற்றத்தை மட்டுமல்ல, ஆன்ம ஈடேற்றத்தையும் தடுத்து நிறுத்தி விடும்.

வறுமைப்பட்ட நாடுகளை எடுத்துப் பாருங்கள்.. இங்கு பசி, பிணி மட்டுமல்ல, இயற்கையின் அழிவுகளும் தாண்டவமாடுகின்றன. ஆச்சரியமாக இங்குதான் மதங்களும் ஆட்சி செய்கின்றன.

கடவுள் அருபமானவர். அதனால் காணவிரும்புபவன் வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்டே இருப்பான். இத்தேடலின் போது அவன் சிந்தித்தே ஆக வேண்டும். அதனால் தான் அவன் அனுபவசாலியாகின்றான்.

கடவுளைக் காட்டப்படுபவன் ஏதோ ஒன்றைக் கண்டேயாகுவான். காட்டுபவரை திருப்திப்படுத்து வதற்காக! அவன் மேற்கொண்டும் சிந்திக்கப் போவதில்லை.

கடவுள் ஏன் இன்னும் மறைந்து கொண்டே இருக்கிறார்? காலம் பழுக்கும் போது அவர் காட்சி தந்து தடுத்தாட் கொள்வார். இரட்சிப்பு அப்போது கிடைக்கும்.

அதுவரையில் இளசுகள் அனுபவிக்க நிறைய இருக்கிறது.

விட்டுக்கொடுங்கள்!

## பாதுகாப்பு செலவீனம் அதிகரிக்கிறது

வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 710 கோடி ரூபாய்களை அடுத்த வருட யுத்தத்திற்காக இலங்கை ஒதுக்கியிருக்கிறது. இது மொத்த பாதுகாப்புச் செலவீனத்தில் மூன்றில் ஒரு பங்காகும்.

அரசின் மொத்த பாதுகாப்பு செலவீனம் 2000 கோடி ரூபாய்களாகும். இது இந்த வருடத்தை விட முப்பது கோடி அதிகமாகும்.

ஆயினும் இந்த வருடத்தின் மொத்த செலவீனம் இரண்டாயிரம் கோடியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று வெள்ளிககிழமை இந்த வரவுசெலவுத் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்படும்

## வானொலி நிலையம் பற்றிய தகவல்

பலத்த எதிர்ப்புகளின் பின்னால் வொய்ஸ் ஒப் அமெரிக்க நிலையம் பற்றி இலங்கை அரசு செய்த ஒப்பந்தத்தின் விபரங்களை வெளியிட்டுள்ளது. வருகின்ற சனிக்கிழமை செய்யப்பட இருந்த மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு முதல் இந்த அறிக்கையின் விபரங்கள் வெளியிடப்பட்டன.

இந்த நிலையத்தில் எந்த அமெரிக்க இராணுவ அதிகாரியும் நிலை கொள்ள மாட்டார் என்றும் இலங்கையின் தேசிய நலன்களுக்கு முரணான எந்த நிகழ்ச்சியையும் நிலையம் ஒலிபரப்பாதிருக்க முயற்சிக்கும் என்றும் அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் விபரங்களை பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க சபையில் சமர்ப்பித்தார்.


எதிர்க்கட்சிகளின் ஆட்சேபங்களின் பின்னர் பாராளுமன்றத்தில் இந்த விபரங்கள் வெளியிடப்பட்டன.

## ராஜீவ் அறக்கட்டளைக்கு ஜாக்சன் உதவி

மைக்கேல் ஜாக்சனின் இந்திய விஜயத்தின் போதான நிகழ்ச்சிகளில் சேரும் பணம் பொதுநலன்களுக்கு பயன்படுத்தப்படும். டெல்லியில் நேரு ஸ்டேடியத்தில் நடைபெறும் இந்த இசை நிகழ்ச்சியில் சேரும் பணம் ராஜீவ் காந்தி அறக்கட்டளைக்கு சேரும். குழந்தைகளுக்கு உதவுவதற்காக இந்தப் பணம் பயன்படும்.


குறைந்தது ஐம்பது லட்சம் ரூபாய் இந்த நிகழ்ச்சி மூலம் ராஜீவ் அறக்கட்டளைக்கு உறுதியளிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சிக்கான டிக்கட்டுக்கள் ஐநூறு ரூபாயாகும்.


**WE APOLOGIZE TO ALL OF OUR CUSTOMERS FOR THE SHORTAGE OF VITAMOL**











**DR. ROBERT GLUCOSE**

GLUCOSE IS FOUND IN NATURE IN FRESH FRUITS AND VEGETABLES. DR. ROBERT GLUCOSE IS MADE WITH THE BEST NATURAL INGREDIENTS AND PURIFIED TO ITS HIGHEST QUALITY. DR. ROBERT GLUCOSE IS GOOD FOR QUICK ENERGY. IDEAL FOOD FOR THE BRAIN, RED BLOOD CELLS, LIVER & MUSCLES. EXCELLENT FOR FEEDING CHILDREN AND ADULTS BECAUSE IT IS USED QUICKLY BY THE BODY.

**VITAMOL by DR. ROBERT**

DUE TO THE OVERWHELMING DEMANDS FOR VITAMOL, WE HAVE EXPERIENCED SEVERE SHORTAGES. HENCE, WE APOLOGIZE TO ALL OUR CUSTOMERS. VITAMOL IS A NOURISHING MALTED FOOD DRINK MIX FORMULATED BY DR. ROBERT. IT IS THE ONLY MALTED NOURISHMENT MIX WITH VITAMINS, IRON, CALCIUM AND HONEY. VITAMOL IS AN EXCELLENT FOOD FOR ALL THE TISSUES OF THE BODY ; FOR EXAMPLE CALCIUM FOR THE BONES, VITAMINS & IRON PREVENTS ANEMIAS, PACKED WITH ENERGY. SO NOURISH YOUR BODY WITH THE BEST. YOU GET MORE IN EACH BOTTLE OF VITAMOL. COMPARE THE QUALITY, SIZE AND PRICE. DON'T SETTLE FOR ANY INFERIOR MALT BEVERAGE MIX. DEMAND VIATMOL, TODAY'S BEST BUY FOR QUALITY AND VALUE. VITAMOL IS RECOMMENDED FOR CHILDREN AND ADULTS.




**NERVOGEN NERVE FOOD**

NERVOGEN NERVE FOOD: EXCELLENT FOR HARD WORKING TISSUES OF THE BODY, SUCH AS THE BRAIN, IMMUNE SYSTEM, KIDNEY, LIVER, GUT AND HEART. ONLY NERVOGEN IS BETTER TASTING AND PROVIDES A BETTER PROTEIN PROFILE THAN SANATOGEN. FOR GOOD MENTAL AGILITY DON'T SETTLE FOR LESS, DEMAND THE BEST.




**CHATAK: Curry Excellence**

CHATAK CHATAK MADRAS CURRY POWDER IS THE BEST CURRY POWDER ON THE MARKET TODAY. MADE WITH 475 YEARS EXPERIENCE. IT IS SUPERB AND SO GOOD, NO OTHER CURRY POWDER CAN COMPARE. DEMAND CHATAK CURRY POWDER TO EXPERIENCE MADRAS AS IT'S BEST. ALSO AVAILABLE CHATAK MEAT SEASONING, FISH SEASONING, TANDOORI CHICKEN MIX, SALTED

SUPPLIES CAN BE OBTAINED IN USA, CANADA, AND THE WEST INDIES FROM UNIVERSAL FOODS & MERCHANDISE CO. (416) 535-3118 TORONTO, CANADA.
FOR SUPER VALUE, LOW WHOLESALE & RETAIL PRICES ON GIFT, TOYS, SRI LANAKAN GROCERIES & ALL THE ABOVE ITEMS CONTACT

# வெளிநாடு செல்லும் அமைச்சர்கள்

பிரேமதாசாவின் காலத்தில் பல அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் குறைக்கப்பட்டிருந்தன. பிரேமதாசா கூட மிகவும் அரிதாகவே வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார். தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சிக்காலத்தில் பல அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். இரண்டு மாதங்களுக்குள் மட்டும் எட்டு அமைச்சர்கள் வெளிநாடு சென்றுள்ளனர்.

வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீது லண்டனுக்கும் சிறிசேன கூரே, நந்தா மத்தியூ போன்றோர் வேறு நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.

# கொழும்பில் சிறிநிவாசனுக்கு கால் முறிந்தது

கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினரான சிறிநிவாசன் மாடியிலிருந்து விழுந்து காலை முறித்துக் கொண்டார். இவர் சில நாட்களுக்கு முன்னர் கொலைப் பயமுறுத்தல்களுக்கு ஆளானதாக அவரது உறவினர் ஒருவர் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். தற்போது கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் இவர் சிகிச்சை பெற்று வருகிறார். இருபது அடி உயரத்திலிருந்து விழுந்து இவர் காலை முறித்துக் கொண்டார். இவர் விழுந்ததை கண்ட அயலவர் ஒருவரே இது பற்றி தகவல் கொடுத்ததை அடுத்தே இவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# 1 1/2 வயதுக் குழந்தை மீட்பு

இந்திய பூகம்பத்தின் ஆறும் நாளின் பின்னர் 18 மாதக் குழந்தை ஒன்று மீட்கப்பட்டிருக்கிறது. தனது மகளின் உடலையாவது கண்டுபிடித்துத் தரும்படி கோரிய தந்தையின் வேண்டுகோளின்பேரில் மீட்புப் படையினர் இடிபாடுகளுக்கு இடையில் தேடியதில் குழந்தை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பிரியங்கா ஜவாலகே என்ற இந்தக் குழந்தை மயக்கமுற்ற நிலையில் மீட்கப்பட்டது. சுமார் முப்பது ஆயிரம் பேர் வரை இறந்த பூகம்பத்தின் 104 மணி நேரத்தின் பின்னர் இந்த மீட்பு நடைபெற்றது.

இந்திய இராணுவமும் பிரெஞ்சு உதவிப் பிரிவினரும் இநத மீட்பில்

ம.ப.பா..

# மரண அறிவித்தல்

## திரு. வெற்றிவேலு மகாலிங்கம்

*(கொழும்பு முன்னைநாள் எம். இராசையா அன்சன்ஸ்)*



தோற்றம்
04-08-1927

மறைவு
6-10-1993

*புங்குடுதீவு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட திரு. வெற்றிவேலுமகாலிங்கம் (கொழும்பு முன்னைநாள் எம். இராசையா அன் சன்ஸ்) 6-10-93 மொன்றியால் கனடாவில் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு. ஆ. வெற்றிவேலு திருமதி தங்கம்மா அவர்களின் அன்பு மகனும் திருமதி ரஞ்சிதமலர் அவர்களின் அன்பு கணவரும் திருமதி கமலரத்தினம் இராசையா(இலங்கை), இளைப்பாறிய ஆசிரியர் குணரத்தினம் (இலங்கை) திரு ஏ.வி.எம்.வாசகம் (மொன்றியால்) திருமதி புஸ்பம் முத்துதம்பி (இலங்கை) திரு. பஞ்சலிங்கம் (இலங்கை) ஆகியோரின் சகோதரரும் சியாமளா(சுவிஸ்) ம்கேசன்(A.V.MS) ரொறன்ரோ) எம்.ஆர். மனோகரன் (இதயம்ஸ் உரிமையாளர் ரொரன்ரோ) மகாதேவன் (சுவிஸ்) மஞ்சுளா (மொன்றியால்) மனோரஞ்சன் (மொன்றியால்) பாஸ்கரன் (லண்டன்) மதிவண்ணன் (மொன்றியால்) ஆகியோர் அன்புத்தந்தையும், தம்பிராஜா (சிங்கப்பூர் மிசன் சுவிஸ்) குமுதினி (ரொரன்ரோ) திருமலர் (ரொரன்ரோ) பவானி(சுவிஸ்) விக்கினேஸ்வரராஜா (மொன்றியால்) ஷோபனா (மொன்றியால்) ஸ்ரீவித்தியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனுரும் பிரஷா, நிரோஷா (சுவிஸ்) மதுஷா.மாஷா, மாகுலன், மனோஷன், மையூஷா (ரொரன்ரோ) மானுஷா (சுவிஸ்) வினோஷன், ஆதர்ஷன் (மொன்றியால்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல்*

*14370 BOULVD PIERRFONDS, ALFRED VAILAIRE INC FUNERAL HOME ல் திங்கட்கிழமை 11.10. 93 அன்று 9–2pm பார்வைக்கு வைக்கப்படும். அதன் பின் ஈமக்கிரிகைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

தகவல் பாலசுப்பிரமணியம் (மைத்துனர்)
416-531-5106
514-620-3190

★ கட்டுரைகள் ★ சிறு கதைகள் ★ கவிதைகள் ★ விளையாட்டு

வெளிவந்து விட்டது!

ரோஜா

கலை, இலக்கிய காலாண்டு மலர். இதழ்.2

★ சமயற் கலை ★ சிறுவர் பூங்கா ★ நகைச் சுவை ★ சினிமா...


# ஜேர்மன் தீவிபத்தில் இலங்கையர் குடும்பம் பலி

ஜேர்மனியில் உள்ள இலங்கையர் ஒருவரின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதால் அவரும் அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் கொல்லப்பட்டுள்ளனர். மேற்கு ஜேர்மனியில பாட் வில்டுங்கன் என்ற இடத்தில் வசித்து வந்த 31 வயதான இலங்கையர் ஒருவரும் அவரது 27 வயதான ஜேர்மன் மனைவியும் மூன்று வயதும் ஒரு வயதுமான இரண்டு குழந்தைகளும் இந்த தீ விபத்தில் கொல்லப்பட்டனர். இவர்கள் புகையை சுவாசித்தது காரணமாகவே கொல்லப்பட்டிருந்தனர்.

ஜேர்மனின் உல்லாச நகரான இந்த நகரத்தில் உள்ள வீடொன்றின் மூன்ரும் மாடியில் இருந்த இவர்களின் இருப்பிடம் தீக்கிரையானது. இந்த வீட்டில் வசித்த நான்கு ஜேர்மன் குடும்பங்கள் தப்பித்துக் கொண்டன.

வீட்டுக்கு வெளியே ஒரே நேரத்தில் இரண்டு இடங்களிலும் தீ வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த தீ விபத்திற்கு நாஸிகள் காரணமல்ல என்று பொலிசார் கூறுகின்றனர். அப்பகுதியில் நாஸிகளின் செயற்பாடு குறைவு என்றும் பொலிசார் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட இலங்கையர் தனது மனைவியின் பெயரையே வைத்துக் கொண்டிருந்தார். இதனுல் நாஸிகள் இவரது வீட்டை அடையாளம் காண்பது சிக்கலாக இருந்திருக்கும் என்றும் பொலிசார் கூறுகின்றனர்.

## இலங்கைக்கு பணம் அனுப்ப வசதி

இலங்கைக்கு பணம் அனுப்புபவர்களுக்கு வசதியாக வெஸ்டேர்ண் யூனியன் நிதி சேவை நிறுவனம் புதிய சேவை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. வெஸ்டேர்ண் நிதி நிறுவனத்தின் மூலமாக இலங்கைக்கு அனுப்பப்படும் பணம் சில நிமிடங்களிலேயே அங்கு கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் சீலன் வங்கி மூலமாகவும் மற்றும் முக்கிய நகரங்களில் 52 அலுவலகங்கள் மூலமாகவும் பணம் அனுப்பப்படும். அனுப்பப்படும் பணம் ரூபாய்களில் செலுத்தப்படும். கனடா உட்பட உலகெங்கும் 22 ஆயிரம் நிலையங்கள் மூலமாக வெஸ்டேர்ண் நிறுவனம் பணம் அனுப்பி வருகிறது.

## குழந்தைமீட்பு..

இடம் பெற்றனர். மயக்கமுற்ற நிலையிலும் குழந்தை காயப்படவில்லை. குழந்தையின் தாயார் இன்னொரு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிருர்.

இதற்கு முன்னர் அதே கிராமத்தில் பதினைந்து நாள் குழந்தை ஒன்றும் மீட்கப்பட்டது. அனுதையான இக்குழந்தைக்கு நிவேதிதா என்ற பெயரிட்டு அவ்வூர் வைத்தியசாலை தத்தெடுத்துக் கொண்டது.

இந்த பூகம்பத்தில் இதுவரையும் பத்தாயிரம் உடல்கள் மீட்கப்பட்டன. மீட்புக்கெனவும் புனர்வாழ்வுக்கெனவும் பதினுறு மில்லியன் டொலர்களை இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

# என்று முடியும் இந்த அடிமைகள் ஓலம்



## நிவேதிகா

நித்தம் நித்தம் ஆயுதத்துக்குள் சிக்கிக்கொண்ட என் தேசம் விடுதலையின்றி தவிக்கின்றது. என்ன நடக்கும்? என்ன முடிவு? என்ன தீர்வு? கேள்விகளே இங்கே வியாபித்துக் கிடக்கின்றன. சிங்கங்களும், புலிகளும் போரிட்டுக் கொள்ள நடுவில் அப்பாவி மான்கள் மடிந்து விழும் கொடுமையை யார் அழுது என்ன பயன். அங்கே என்ன நடக்கப் போகின்றது? இனி ஒரு விடிவு வருமா? விடிந்தும் என்ன பயன்? அந்த மண் இரத்தக் கறைகளாலும், சவங்களினாலும், கல்லறைகளினாலும், எலும்புக் கூடுகளினாலும் போர்த்தப்பட்டிருக்கும். நினைவுச்சிலைகளது கைகளிலோ கொடிகள் திணிக்கப்பட்டிருக்கும்.

சிறுவர்களும் சிறுமிகளும் துப்பாக்கிகளுடன் மண் மீது சாய்ந்திருப்பார்கள்.... சமாதான குழுக்களோ எத்தனை வருடங்கள் தான் கையொப்பமிட்டு, கையொப்பமிட்டு, அலுத்துக் கொண்டன. அழிவுக்குப் பின் அந்த தேசத்திற்கு விடுதலை என்றால் யாருக்கு வேண்டும் விடுதலை? சவங்களுக்கா? மண்! அந்த மண்ணுக்குதானே இந்த போர். நித்தம் மண்ணில் அமர்ந்து மகுடத்தை சூட்டிக்கொண்டு வாழப் போவது யார்? மதங்கள் எல்லாம் உயிர்களை கொல்வதை பாவம் என்று சொல்கின்றது. அங்கே துடித்திடும் உயிர்கள், குற்றுயிராய் கிடக்கும் அப்பாவி மக்கள், இந்த பயணம் எங்கே போய் முடியும்? மயானத்திலா?

இனி என்ன செய்ய போகின்றோம்? என்று பரிதவிக்கும் உள்ளங்கள் எத்தனை? பெற்றவர்கள், உற்றவர்களும் அங்கிருக்க அங்கே குண்டுவிழ இங்கே துடித்திடும் உள்ளங்கள் எத்தனை எத்தனை?

"அவர்கள் பிடித்து விட்டார்களாம்"

"எங்கட பெடியளும் விடமாட்டார்கள்"

என்றே காதோரேம் உரசிசெல்லும் வார்த்தைகள்....

ஜே.ஆராலோ, பிரேமதாசவாலோ, லலித் அத்துலத் முதலியாலோ, கொப்பேகடுவையாலோ, எந்த தலைவனாலோ இந்த பிரச்சனையை அழிவுகளை நிறுத்திவிட்டு தீர்த்து வைக்க முடியவில்லை? இனி யார் வருவார்? முன்பெல்லாம் இந்திய தாய் வந்து காப்பாற்றுவாள் என்று கனவு கண்டிருந்தோம். அந்த கனவே கானல் நீராய் போனபின்பு இனியொரு வழி சமைக்க யார் வருவார்? உலகமெல்லாம் தமிழர்கள்....

நாட்டுக்காய் துயரப்படுபவர்கள் எத்தனை பேர்? உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்கள் ஒன்றை மட்டும் மறக்காமல் செய்து வந்திருக்கிறார்கள்.... எந்த விழா தொடங்கினாலும், மௌன அஞ்சலி! செத்தவர்களுக்குத்தான் இந்த மௌன அஞ்சலி செலுத்தப்படுகின்றதே தவிர அங்கே உயிருடன் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு என்ன செய்கின்றார்கள்? என்ன செய்யப் போகின்றார்கள்? கொழும்பை நோக்கி வரும் மக்கள் கொழும்பிலும் நிம்மதியாக வாழ முடியாது தவிக்கின்றனர். நள்ளிரவில் பொலீசார் வீட்டு கதவுகளை தட்டுவதும் சோதனையிடுவதும், கைதுசெய்வதுவும் நாளாந்த கடமைகளில் ஒன்றாகிவிட்டது.

இந்த சதி என்று முடியும்? அழிவுகளிலிருந்தும், கைதுகளிலிருந்தும், கொடுமைகளிலிருந்தும் விடுதலை கிடைக்காதா? அந்த கருப்பு ஜூலையையே இன்றும் நினைவு கூர்ந்து சோகமாய் எழுதி வடிக்கின்றோமோ? இன்று நடக்கும் சோகங்களுக்கு என்று நினைவு கூரப்போகின்றோம்.

கிட்டுவின் மறைவையிட்டு துண்டுபிரசுரங்களும், அஞ்சலி நோட்டீசுகளும், எங்கும் போடப்பட்டன. இன்று ஆயிரக்கணக்கான உயிர்கள் குற்றுயிராக கிடக்கின்றன....

இதற்கு யாரும் துண்டு பிரசுரம் விடவில்லையே! தலைவர்கள் மறைந்தால் மட்டும் தான் இவர்களும் ஊர்வலம் போவார்களோ! துண்டுப் பிரசுரம் விடுவார்களோ! அப்பாவி மக்கள் அழிக்கப்பட்டால் சர்வ சாதாரணமாக இருந்துவிடுகின்றார்கள்....

இந்தியா கிட்டுவை கொன்றதாக பெரும் கோஷங்களுடன் சென்ற ஊர்வலம் இன்று ஏன் மௌனமாக இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் போர் ஆரம்பமாகிவிட்டது...

இந்த நாட்டை பிரிக்க மாட்டோம் இறுதி வரை என்கிற சிங்கங்கள்

கடைசி இரத்தம் இருக்கும் வரை நாட்டை நாங்களும் தர மாட்டோம் என்கிற புலிகள்

நாங்கள் என்ன செய்யபோகின்றோம் தாயே என்கின்ற மான்கள்

ஒரு அங்குல நிலத்தை கூட தமிழருக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று கூவும் சிறிமா அம்மையார்... (நிலவுக்கு சென்று அரிசி எடுத்து வருகிறேன் என்று சொன்னவர்)

எல்லோருக்கும் ஆறடி என்பது இப்போது அங்கில்லை தெருவோரம் கூட போதும்....

ஆனால் மண்ணிருக்கே அந்த மண் வேண்டும்.......

யாராவது ஒரு நல்ல தலைவன் இருந்தால் சொல்லுங்களேன்.... கொலைகளும், அழிவுகளும் இல்லாமல் அங்கு பிரச்சினையை தீர்த்து வைப்பவன் நிச்சயமாக இல்லை...

எல்லைதாண்டி ஓடி வர முடியாமல் எத்தனை உயிர்கள் அங்கே துடித்து மடிந்தனவோ.... மண் வேண்டாம் என எல்லையையாவது தாண்டி ஓட விடுங்களேன்.... அதுவும் இல்லை சிட்டுக்குருவிகளை கூட்டுக்குள் அடைத்து கொலைசெய்வது போலல்லவா இருக்கின்றது...

தமிழ் அழியாது... தமிழர்களை அழித்து விட்டால் தமிழ் அழிந்து விடுமா? நிச்சயம் அழியாது..... அங்கே மொழி சாகாது! தமிழன் தான் செத்துக்கொண்டிருக்கின்றான்....

என்று முடியும் இந்த அடிமைகளின் ஓலம்..... தீர்ப்புகள் திருத்தப்படாதா? இரத்தசாயம் பூசப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்.....

12ம் பக்கம் பார்க்க...

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**

**755 8550**

**CALL**
**MIKE or RAJAN**

**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்


We use
Quaker
State Oil






# GOOD BYE BALDNESS

**முடி உதிர்பவர்களுக்கு ஓர் நற்செய்தி**



ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை வளரச்
செய்கிறது

**பரீட்சித்துப்பாருங்கள்**
**TRY FIRST**

**பலர் இச்சிகிச்சை மூலம்**
**பயனடைந்துள்ளார்கள்**

239 CARLTON STREET
TORONTO, ONTARIO
TEL: 922–0478

# இப்படியும் சேதிகள்

## ஜனமித்திரன்

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான என்.எம்.புஹார்டீன் அவர்கள் ஆடை வர்த்தக உலகில் இராட்சத வியாபாரியாவார். இவர் தனது வர்த்தக விவகாரங்களுக்காக இலங்கை வங்கியிலிருந்து கடனைப் பெற்றுக் கொண்ட சுமார் 35 கோடி ரூபா கடனை திருப்பிச் செலுத்துவதை தவிர்த்துக் கொள்கிறார் எனவும் அக்கடனை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் கூட அரசியல் தலையீடு காரணமாக செயலிழந்து போவதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

திரு.புஹார்தீன் அவர்களது வியாபாரத்துக்காக வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதற்காக இலங்கை வங்கியால் 300க்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும் 1991 தொடக்கம் இன்று வரைக்கும் ஒரு வழக்கையாவது விசாரித்து முடித்து கடனை அறவிடுவதை, அரசாங்கத்தின் தலையீடு காரணமாக இலங்கை வங்கி தவிர்த்துள்ளது.

வழக்குகள் தாக்கல் செய்ய ஆரம்பித்த 1991 காலம் தொடக்கம் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சகல வேளைகளிலும், கடனை மீட்பதற்காக கடனாளியும் வங்கியும் ஓர் இணக்கத்திற்கு வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதால் வழக்கு விசாரணையை இடை நிறுத்தம் செய்யுமாறு நீதிமன்றைத்தைக் கோரும்படி இலங்கை வங்கியால் சட்ட மா அதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

பெரும் தொகைப் பணத்தை வங்கியிடமிருந்து கடனைப் பெற்றவர்கள் அக்கடனை அடைப்பதைத் தவிர்த்துக் கொள்ளும் போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அக்காலத்தில் நிலவிய சட்டம் பலம் குன்றியதாக இருந்த காரணத்தாலேயே 1990 ம் ஆண்டு ஜனவரி மாதம் கடன்களை விரைவாக மீட்கக் கூடிய விசேட சரத்துக்களைக் கொண்ட சட்ட மொன்றை அரசாங்கம் இயற்றியது.

இச்சட்டத்தின் பிரகாரம் கடன் அறவிடுவதற்கான வழக்குகளை மிகவும் குறுகிய காலத்தில் விசாரித்து முடிக்கலாம், ஆனால் திரு புஹார்டீன் அவர்களிடமிருந்து கடன்களை மீட்பதற்காக 1991 ல் இலங்கை வங்கி தாக்கல் செய்த வழக்குகள் எதுவும் 1990ல் இயற்றப்பட்ட புதிய சட்டத்தின் பிரகாரம் தாக்கல் செய்யப்படாமல் அதற்கு முன்னர் நிலவிய பழைய சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் விசேட அம்சமாகும்.

திரு புஹார்டீன் அவர்களிடமிருந்து கடன்களை மீட்பதற்காக கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவே இலங்கை வங்கி ஆரம்ப காலத்தில் முன்வந்தது ஆனால் தீர்க்கமான கட்டங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் என்னும் அடிப்படையின் கீழ் நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்படுகின்றன. கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி திரு புஹார்தீன் அவர்கள் தனது கடன் நெருக்கடிகளிலிருந்து கரையேறுவதற்காக முன்னாள் பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜேரத்ன அவர்களிடமே முதன் முதலாக உதவி கோரியுள்ளார். அவரது நிபந்தனைகளுக்கு திரு.புஹார்தீன் உடன்பட்டதன் பின்னர் இப்பிரச்சனை ஜனாதிபதி பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி தொடர்பாக கடுமையான விரோதத்துடன் அரசியலுக்கு பிரவேசித்ததோடு ஜனாதிபதி முறைக்கும் எதிராகவிருந்த ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டு அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் நிலமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தள்ளப்படுவதற்கு திரு புஹார்டீன் அவர்களது கடன்களுக்காக வழங்கப்பட்ட சலுகைகளே காரணமாகும்.

இவ்வருட ஆரம்பத்தில் நீதி அமைச்சினதும் இலங்கை வங்கியினதும் உயர் அதிகாரிகளும் திரு.புஹார்டீன் அவர்களும் கலந்து கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது திரும்பி வழங்கப்படாத கடன்கள் தொடர்பாக திரு புஹார்டீன் அவர்களுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

திரு புஹார்டீன் அவர்களின் வர்த்தக நிறுவனம் மக்கள் வங்கியிடமிருந்தும் பெருந்தொகையான பணத்தை கடனைப் பெற்றுள்ளதோடு அடைப்பதையும் தவிர்த்துக் கொள்கிறது எனவும் அறிய முடிகிறது. (தகவல் ராவய செப்டம்பர் 26,1993)

---

## என்று தணியும்...

வதைமுகாம்களிலிருக்கும் அப்பாவி கைதிகளும், உயிருக்காய் போராடிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிர்களையும் காப்பாற்றும்படி கடவுளிடம் மன்றாடுவோம்.

எங்கள் மன்றாட்டு ஒரு நாளும் வீண் போகாது....

எமக்கு அழிவு வேண்டாம், எம் தேசத்திற்கு அமைதி வேண்டும்..... வாழ்ந்து கொண்டிருக்கும் கல்லறைகளே போதும்! இனியும் புது புது சவங்கள் வேண்டாம் அங்கே.... குருதி அருவிகள் ஊற்றெடுக்க வேண்டாம் புண்பட்டபோன அந்த பூமியில் இனியும் குண்டு விழ வேண்டாம் மாசுபட்டுபோன வான்வெளியில் இனியும் கறை படிய வேண்டாம். அங்கு அமைதி கிடைக்காதா? எமது ஏக்கங்கள் ஏக்கங்களாகவே தானிருக்குமா? அமைதிவரும் என்று காத்திருக்கும் நாம் இலவுகாத்த கிளிகள் தானா? இடி தான் எமக்கு விடையென்றால் விதியே என்று வாழப்போகின்றோமா? ஒரு பெரும் அழிவுக்குப் பின் அமைதியென்றால் யாருக்கு வேண்டும் அந்த அமைதி கடலுக்கா? வானுக்கா? ஆகாயத்துக்கா? உங்களுக்கு விடைதெரிந்தால் எனக்கும் சொல்லுங்கள்..

# சுந்தர ராமசாமி; சில குறிப்புகள்

**என்.கே.மகாலிங்கம்**

ஏழு கடல் கடந்து, ஏழு மலை தாண்டி பல வீர சாகசங்கள் புரிந்து ஒரு பாரிஜாத மலரை எடுத்து வந்து ஓர் இளவரசியை மணந்து கொள்வான் ஒரு மறத்தமிழ் வீரன். அதேபோல சுதந்திரங்கள் பலவற்றையும் இழந்த நாம், உயிரோடிருக்க வேண்டும் என்ற சுதந்திரம் ஒன்றிற்காகவே எமது தொப்புழ்க் கொடியை பலாத்காரமாக அறுத்துக் கொண்டு இங்கு புலம் பெயர்ந்து வந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வந்த இடத்திலும் நாம் சும்மா சோர்ந்து போய் செத்தனே இவனே என்று இருந்து விடவில்லை. எமது கலாசாரத்தை மறக்காமல் எமது கலை, எமது மொழி, எமது சமயம் எமது சடங்குகளை இங்கு அதிக பிரக்ஞையுடன் நிறைவேற்றி வருகிறோம். அந்தப் பெருமை ஈழத் தமிழனை தலை நிமிர்ந்து நடக்கச் செய்கிறது.

இந்த வேளையில் கன்னியாகுமரியில் இருந்து இன்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருவர் வட அமெரிக்காவுக்குப் பயணம் செய்து இந்தியச் கலாசாரத்தை சிறப்பை அறிவித்தார். இந்திய கலாசாரத்தை உலகம் அறிந்து வியந்தது. 2000 ஆண்டுகளாக தமிழ் வளர்ந்து வருவதற்கும் மறைந்து விடாமல் காத்தவர்கள் தமிழ் எழுத்தாளர்கள். சங்ககாலப் புலவர்களானாலும் சரி, வள்ளுவர் இளங்கோ சம்பர் போன்றவர்களானாலும் சரி, இன்று எழுதுபவர்களானாலும் சரி அனைவருமே எழுத்தாளர்கள் தான். அவர்களால் தான் இன்னும் தமிழர் பெருமையும், சால்பும் எங்களுக்குத் தெரிகிறது. அந்தப் பாரம்பரியத்தில் வந்த இன்றைய எழுத்தாளர் பரம்பரையில் ஒரு கம்பராக இருப்பவர் திரு.சுந்தர ராமசாமி.

சுந்தர ராமசாமி என்ற அவர்தான் இவர் என்று என்னால் அறிமுகம் செய்ய முடியுமே ஒழிய அவரை உங்களுக்கு, தமிழ் வாசகர்களுக்கு தெரியாது என்ற முறையில் அல்ல. ஒரு நீர் வீழ்ச்சியைப் பார்த்து வியந்த, கனவு கண்ட உங்களுக்கு இந்த நீர் வீழ்ச்சியின் பெயர் நயாகரா என்று சொல்ல முடியுமே தவிர அந்த நீர்வீழ்ச்சியை நீங்கள் தான் அனுபவிக்க முடியும் அதேபோல.

இருந்தாலும் தோழனை தோழிக்கு அறிமுகம் செய்து வைப்பார்களே எமது சங்ககாலப் பாடல்களில். அப்படிச் செய்ய வேண்டிய நிலையிலும் தேவையிலும் என்னை இங்கு விட்டிருக்கிறார்கள். வேற்றிடங்களில் இருந்து திருமண வீட்டிற்கு வந்திருக்கிறவர்களுக்கு இந்த மாப்பிள்ளை யார், பூர்வீகம் என்ன, எத்தனை போர்களில் எதிரிகளை புறமுதுகுக் காட்டச் செய்தார் என்பதை எல்லாம் கூற வேண்டி இருக்கிறது.

ஏறக்குறைய 60 ஆண்டுகளாக பிரவகித்து பாய்ந்து வரும் தமிழ் இலக்கிய நதி மணிக்கொடி சரஸ்வதி எழுத்து போன்ற பத்திரிகைகளின் மூலம் பாய்ந்து வந்து இன்று சிறு பத்திரிகை, சஞ்சிகை மூலமும் தனிப் புத்தகங்கள் மூலமும் வளர்ந்து வருகிறது. இதில் புதுமைபித்தன் கு.ப. ராஜகோபாலன், ஜானகிராமன் முக்கியமானவர்கள் அதற்கு அடுத்து எமது நினைவிலும் இலக்கிய வரலாற்றிலும் அருகில் இருக்கும் திரு சுந்தர ராமசாமி. இவர் கவிஞர், சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர் விமர்சகர், கட்டுரை ஆசிரியர், சஞ்சிகை ஆசிரியர்

ஒரு புளிய மரத்தின் கதை, ஜே.ஜே. சில குறிப்புகள் என்ற இரண்டே நாவல்களை எழுதினால் கூட (1966, 1980 ல் வந்தவை) தமிழ் இலக்கியத்தில் இரண்டு மைல் கற்கள்.

நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக என்பவை இரு கவிதைத் தொகுதிகள். இவை புதிய பரிமாணத்தை எடுக்கும் புதுக்கவிதைகள்.

அக்கரைச் சீமையில், பிரசாதம், பல்லாக்குத் தூக்கிகள் பள்ளம் என்பவை நான்கு சிறுகதைத் தொகுதிகள் இவை நான்கையும் வேறு சிறு கவிதைகளையும் சேர்த்து சுந்தரராமசாமியின் சிறுகதைகள் என்று ஒரு தொகுதியாக க்ரியா பிரசுரித்திருக்கிறார்கள்.

சுந்தரராமசாமி தனது விமர்சனக் கட்டுரைகளை இரு புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார். திரைகள் ஆயிரம் என்ற குறுநாவலும் வெளிவந்திருக்கிறது. இவரின் 'காலச்சுவடு' காலாண்டு இதழ் இன்னும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

தகழியின் 'செம்மீன்' நாவலை மலையாளத்திலிருந்து ஆழமாக மொழி பெயர்ந்திருந்தார். தகழியின் ஒரு தோட்டியின் மகள் என்ற நாவலை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். அது நூலுருவம் பெறவில்லை. இவற்றை விட பல கதைகள் கவிதைகளை ஆங்கிலம் மலையாளம் ஆகியவற்றிலிருந்து தமிழுக்கு ஆக்கி இருக்கிறார்.

இவரின் பல கதைகள் மலையாளம் கன்னடம், வங்காளம் ஆங்கிலம், ரஷ்யன், பிரெஞ்சு செக்கோ செலவாக்கிய மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன ஜே.ஜே. சில குறிப்புகள், மலையாளம் ஆங்கிலம் பிரெஞ்சு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. புளிய மரத்தின் கதையும் ஆங்கிலம் பிரெஞ்சு ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

## மோசடி செய்தவர் தேடப்படுகிறார்

இலங்கை இராணுவத்திற்கு பொருட்களை வினியோகிப்பதாகக் கூறி பண மோசடி செய்த நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான பிலிப்பைன்காரர் ஒருவர் தேடப்படுகிறார். இவர் தலைமறைவாவதற்கு முன்னர் தனது வாடகை வீட்டில் உள்ள பொருட்களை கழற்றிச் சென்றதுடன் வீட்டுச் சொந்தக்காரரின் நாயையும் கொன்று புசித்து விட்டாராம். மின்சார, தொலைபேசி நிலுவைகளை ஆயிரக்கணக்கில் இவர் செலுத்தவில்லை.

இலங்கை இராணுவத்திற்கு விளக்குகளை வழங்குவதற்கு இவருக்கு கொந்தராத்து வழங்கப்பட்டிருந்தது. இவர் வேறு சில வியாபார விடயங்களிலும் லட்சக்கணக்கான ரூபாய்களை ஏமாற்றி விட்டார்.

# கிராமிய இலக்கியத்தில் நாட்டுப் பாடல்கள்

**எஸ். பி. கனக்ஸ்** கலைமானி (சிறப்பு)

(எஸ்.பி. கனக்ஸ் அவர்கள் நாட்டுப் பாடல்களுக்கு பெயர் பெற்ற மட்டக்களப்பு வாசியும் கனடா தமிழ் கலாச்சார சங்க தலைவருமாவார்.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி'யாய் மிளிர்ந்த எம் தமிழினம் வளர்த்த அருங்கலைகள் அளப்பில. கிராமிய மக்களின் இதய எழுச்சிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு விதங்களாகப் பொங்கியெழுந்து நவரசங்களும் ததும்பும் பாடல்களாக நயத்தகு நாட்டாரின் உணர்ச்சிக் குமுறல்களாகப் பெருகி வெளிவருகின்றன. இவ்விதம் ஒவ்வொரு திருப்பத்திலும் வெளிவரும் பாடல்கள் யாவும் நாட்டுப்பாடல்கள், நாட்டுக் கூத்துப் பாடல்கள். பிரபந்தங்கள், பள்ளுப் பாடல்கள் என்பனவும் இன்னோரன்ன தாலாட்டு, ஊஞ்சல், கும்மி முதலியனவுமாகத் திகழ்கின்றன. இவை யாவும் சிறந்த ஓசைநயம், கருத்தாளம், எதுகை, மோனை, தாளம், சொல்லழகு முதலிய பல்சுவைகளும் நிரம்பிய ஒப்பற்ற கிராமிய இலக்கியமாகத் திகழ்வதுடன் அக்கால மக்களின் வாழ்க்கை நிலையினையையும் கண்ணாடியன்ன தெட்டத் தெளிவாகக் காட்டா நிற்கின்றன, தமிழ்மொழியின் தனிமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகக் கிராமிய இலக்கியம் திகழ்வதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இத்தகைய இலக்கியங்கள் எழுந்து பரவும் சூழ்நிலையும், அவற்றோடு ஒட்டிநிற்கும் அமைவுகளும் எளிதில் விளங்கமுடியாதன. கல்லாத கவிக்குயில்களாகிய பெண்களும், ஆண்களும் வாழ்க்கைப் போராட்டத்தில் வளைந்து வரும்போது பல அனுபவங்களைப் பெறுவர், அந்த அனுபவம் எந்தத் திருப்பத்தில முனைந்தெழுகின்றதோ அந்த இயல்புக்கேற்றபடியே அவர்களின் இதய எழுச்சிகளும் தமிழின் குழைவுடன் இன்னிசைப் பாடல்களாக வெளிவரும். கிராமியப் பாடல்கள் நவரசங்களையும் கொண்டு மிளிர்வதுடன் இலக்கண எல்லையைக் கடந்திருப்பதையும் காணலாம்.

கிராமிய மக்களின் நாகரிக வளர்ச்சியைக் காட்டும் கண்ணாடி நாட்டுப்பாடல்கள் என்றே கொள்ளவேண்டும். பண்டைக் கலைப்பண்பு தொனிக்கவும், புதுக் கலைப்பண்பு ஓங்கவும் விளங்கும் நாட்டார் பாடல்கள் யாவும் தேனினிமையிலும் திவ்விய மதுரமாகவே இனிக்கின்றன. நாட்டார் பாடல்களைப் பழைய இலக்கியங்கள் சாசனம், சிற்பம், ஓவியம் முதலாம் சின்னங்களுடன் சார்த்தி ஆராய்ந்தால் அப்பாடல்களைப் படைத்த மக்களின் பழைமையைச்,சமூகநிலையை வரலாற்று முறையில் மிகவும் தெளிவாக அறியலாம் என்பது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள இத்துறையில் வல்லுநரான நாட்டார் கலைஞர்களின் முடிபாகும், ஆகவே மேல்நாட்டு அறிஞர்களும், நம்நாட்டு அறிஞர்களும் ஒருமனத்துடன் நாட்டார் பாடல்களில் நல்நயங்கண்டு மகிழ்ந்து அப்பாடல்களைப் பொன்னே போற் போற்றி வருகின்றனர். நாட்டார் பாடல்கள் யாரால் பாடப்பட்டன? எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டன? என்று யாராலும் திடமாகச் சொல்லமுடியாது. எனினும் உணர்ச்சிக் கவிவளம் நிறைந்த நாட்டுப்பாடல்கள் காதல், வீரம், விளையாட்டு உரையாடல் போன்ற இன்னோரன்ன பல்வேறு பிரிவுகளைக் கொண்டதாய் விளங்குவதைக் காணமுடிகின்றது.

'நாட்டுப்பாடல்கள்' என்றதும் ஈழத்து மக்கள் மட்டக்களப்புத் தமிழகத்தினை விசேடமாக முஸ்லீம்

**சகல விதமான மீன் வகைகள், இறைச்சி வகைகள், மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள...**

**Antony Brothers**
**Peoples Market**
**1472 Queen St West**
**Tel:516 3903**

**உடன் மான் இறைச்சி இவ்வாரம் கிடைக்கும்**

**மாபெரும் மலிவு விற்பனை**
**கடலுணவு வகைகள்**

| | | Old price (crossed out) |
|---|---|---|
| முழுகோழி- | 1.99 | 2.99 |
| NIRU தூள் | 6.49 | 6.99 |
| கும்பிளா | 1.99 | 2.49 |
| சீலி | 1.99 | 2.99 |
| திருக்கை | 1.99 | 2.99 |
| Blue fish | 1.99 | 2.99 |
| முரலி | 2.99 | 3.49 |
| விளைமீன் | 3.99 | 3.99 |
| அறக்குளா | 3.99 | 3.99 |
| உடன் நண்டு | 1.29 | 1.99 |

மக்களை உடனே தம் அகக் கண்முன் நிறுத்த வேண்டியவராகின்றனர். கதைகளிற் பல, அதிக ஈடுபாடுடைய முஸ்லீம் மக்களின் முந்தையோர் வாய்த்தோன்றினவையே.

காதல்துறை சார்ந்த பாடல்களே நாட்டுப்பாடல்களில் நம்நெஞ்சை அள்ளுவனவாயத் திகழ்வதைக் காணலாம். இத்துறை சேர்ந்த பாடல்களை நோக்குவோமாயின் கிராமியத் தலைவன் தலைவியின் இன்ப நினைவையும் பருவ வாழ்வையும், அவர்களது தெய்வீகக் காதலின் கனிவையும் ஒவியத்தில் காண்பது போற் கண்டுகளிக்கலாம். ஏர்பிடித்துப் போரடிக்கும் பாட்டாளி சீராளன், வீணில் உண்டு வீணுகக் காலத்தை விரயம் செய்பவனல்ல அவன். காடு, மேடு, களனி யாவும் ஒடியோடி உழைப்பவன், கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளங் கொண்டவன், ஒருநாள் தன் இன்பக்காதலியான மேகலா அவனை அழைக்கவும், அவ்வழைப்பை அறியாதவன் போல பள்ள வயலை நோக்கித் தன் பார வண்டியை ஒட்டிச்செல்லுகின்ருன். குறும்புசெய்ய எண்ணிய மேகலா,

"போகாதே போகாதே நேசமச்சான்
நானும்
பொல்லாத சொப்பனங் கண்டுவந்தேன்
வெள்ளை முயற்குட்டி பாஞ்சுவந்து
உங்க
வில்லுவண்டிலப் புரட்டக்கண்டேன்,
பச்சப்புருவொன்று ஒடிவந்து உங்க
பக்கிள் முழியில் கொத்தக்கண்டேன்,
ஏரியில் நீந்தும் தவளை வந்து உங்க
நாரி எலும்பை முறிக்கக் கண்டேன்,
நாறிப் பிணமான நாகமொன்று சீறித்
தோளிற் கிடந்து துடிக்கக்கண்டேன்'

என்று குறும்புடன் பாடி அழைக்கின்ருள். சீராளன் சீறவில்லை. அவளது குறும்பைக் கண்டதும்,

'பள்ளவயல் விளஞ்சிடட்டும்
பருவக்காற்றுப் பெயர்ந்திடட்டும்
கள்ளி உன்ர குறும்படக்க மஞ்சள்
கயிறு கொண்டு நான்வருவேன்'

என்று சவால் கொடுத்துச் சென்ருன்.

அவளின் நிலையை அவதானித்ததும் எதையும் அறியாதவன்போல,

"சீனத்துச் செப்பே என்சிங்காரப் பூவே
வனத்தைப் பார்த்தழுத
காரணத்தைச் சொல்லு கிளி"

என்று அவளை நோக்கிக் குறும்பாகக் கேட்கின்ருன். தன் காதலனைக் கண்டு கொண்டதால் உள்ளம் நெகிழ்ந்த அவளும்,

"புள்ளிமான் கண்டே
புறநாட்டார் ஈன்றமுத்தே
வங்கி சத்திலுள்ள மச்சான் உங்க
வாக்குத் தப்பிப்போனதென்ன

என்று பதிலுக்குப் புதிர் போட்டாள். இவைபோல இன்னும்

"மான்போல நடைநடந்து
மயில்போற் சிறகொதுக்கித்
தேன்குடி கிளப்பி என்ர
சின்னவண்டு போறதெங்கே

எனத் தலைவன் தலைவியைப் பார்த்தும்

"கடலே இரையாதே
கற் கிணறே பொங்காதே
நிலவே எரியாதே
என் நீலவண்டார் வருமளவும்"

எனத் தலைவனை எண்ணித் தலைவியும் பாடுதலினுல் அக்காதலர்களின் காதலுணர்ச்சியின் உயர்நிலையின் எண்ணி வியக்க முடிகின்றதன்றே! கிராமிய இலக்கியத்தில் நாட்டுப்பாடல் தரும் நயம் நவில்தொறும் இனிப்பது. அந்நாட்டுப் பாடலுள்ளே காதற் கவிகளைப்போலப் பல கிண்டற் கவிதைகளும் குறும்புக் கவிதைகளும் இலங்குகின்றன: இதற்கு,

"அவனிவன் எண்டு சொல்லி
அவதூறு பேசாதே
ஆறு வருஷம் உன்னை
அனுப்பி வைப்பேன் தம்பி என்கிறது.

"பட்டுமணல் மெத்தமேலே
படுக்குஞ்சீமாட்டி அந்த
மொட்டுச் சவுக்குமரத்தின்
கீழே மொழியலாம் வாடி
அன்பில் மூழ்கலாம் வாடி"

என்று ஒரு குறும்புக்காரன் தன் ஜோடிப் புருவுக்குக் குரல் கொடுக்கின்ருன். அதற்கு அக்குறும்புக்காரி:

"கெட்ட பனி தூறுதங்கே
ஒட்டகங்கள் மேயுது முழு
வட்டநிலா காயுமொளியில்
வரிப்புலிகள் பாயுது ஒநாய்
'வள்வள் என்றே குரைக்குது.."

என்று குறும்புடன் பதில் மொழி பகர்ந்தாள், இவ்விதம் காதல் கிண்டல் குறும்பு ஆகிய சுவைகளைச் சார்ந்த நாட்டுப்பாடல்கள் படிப்போருக்கும் கேட்போருக்கும் சொல்லொண்ணு வின்பத்தினை அள்ளியள்ளிச் சொரிகின்றன என்ருல் அது மிகையாகாது.

இவைநிற்க, பூமாதேவியை நம்பி வாழும் உழவர் கூட்டம் பூமாதேவியிடம் பெருவிளைச்சலை எதிர்பார்க்கிறது. ஆம்! சூடாகக் குவித்த செந்நெற் கதிர்களைக் களத்து மேட்டினிலே பரப்பி, மேலே மாடுகளை வாரிக்காலன்களை ஏற்றி வலம் வரும் பொன்னுன தருணத்திலேதான் கிழக்கிலங்கைக் கமக்காரர் களத்துமேட்டுத் தமிழிலே தாயே பொலி தாயே பொலி என்ற அசையுடன் மிகவும் அலாதியாகப் பாடுவார்கள்.

"புள்ளிமயிலேறும் தாயே பொலி
புனித வடிவேலா வள்ளி மணவாளா
தாயே பொலி
வந்தெனக்கு முன் நடவாய்"

என்றவ்விதமாக ஏராளமான பொலிப்பாடல்களைக் கமக்காரர்கள் சூடுபோடும்போது இனிமையாகப் பாடுவார்கள்.

உள்ளுறை உவமம் நிறைந்த பல நாட்டார் பாடல்களையும் கிராமிய இலக்கியத்தில நாட கண்டு களிப்புறலாம்.

கொச்சி பழத்தைக் கிளி
கோதிருக்க தின்றது போல்
பச்சவடச் சேலைமச்சி உனக்குப்
பகட்டான நல்லுடைகா

என்னும் பாடலில் சிறந்த உவமை நயம் காணப்படுவதுடன் இலக்கண இலக்கிய பண்பு தொனிப்பதையும் காண முடிகின்றது. இப்பாடல் சிதைந்தும், கெட்டும், பொருள் வேறுபட்டும் இருப்பதனுல் அறிஞரிடையே வாதங்கள்கூடத் தற்பொழுது எழலாயிற்று. எது எப்படியிருப்பினும் பண்டை நாட்டார் நாவில் உதித்த உவமைகள் உள்ளந்தோறும் உவகை தருகின்றதென்பது வெள்ளிடைமலே.

இவற்ரேடு பள்ளுப்பாடல்கள், கும்மிப் பாடல்கள், வசந்தன் பாடல்கள், குளிர்த்திப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் என்பன போன்ற இன்னேரன்ன பல பாடல்களும், மரபு பிறழாத பழமொழிகளும் கிராமிய இலக்கியத்தில் காணப்படும் சுவைபொதிந்த எழில் மிகுந்த அம்சங்களாக விளங்குகின்றன. அழகும் சுவையும் நல்லறிவும் நிரம்பிய இப்பாடல்கள்

23ம் பக்கம் பார்க்க..

## பிரகிருதிகள்!

நான் பாட்டிற்கு போயிருந்தேன்
கலைவிழா பார்ப்பதற்காய்!
போனதுதான் போயிருந்தேன்
ஏன்தான் பின்வரிசையில் போயிருந்தேன்?

கொஞ்சுதமிழ் கேட்குமிசை
கொஞ்சம்தன்னும் குறையாததும்
சொல்லோவியங்கள் கேட்குமந்த
சொற்பந்து ஆசையாலும்

விற்பன்னர்கள் வந்திடுவர்
வில்லெடுத்து வளைப்பதுபோல்
சொல்லெடுத்து வளைப்பரென்பதாலும்
புல்லினங்கள் எண்ணக் கோலங்களையோ
புதுக் கவிதையாய் வடிப்பரென்பதாலும்

பட்டிமன்றம் கேட்டு நானும்
புத்தியை தீட்டிவிடலாமென்றும்
பாட்டுக்கள் கேட்டென் செவி
பரமசுகம் அடையுமென்பதாலும்

மஞ்சளான மாலையொன்றின்
மயக்குமந்த பொழுதைக்கூட
மனமறிந்து விரயம் செய்து
கலைவிழாவிற்காய் போயிருந்தேன்!

போனதுதான் போயிருந்தேன்
ஏன்தான் பின்வரிசையில் போயிருந்தேன்!

நாட்டுநடப்பு தெரியவில்லை!
நாற்பது மணி வேலையாலோ
நாலுவிழாவிற்கு போகாததாலோ
நாட்டு நடப்பு தெரியவில்லை!

அங்கிருந்து நடக்கும் சில
அவலங்கள் தெரிந்திருந்தும்
இங்கென்ன நடக்குமென்று
இழுத்தடித்துப் போயிருந்தேன்!

போனதுதான் போயிருந்தேன்
ஏன் பின் வரிசையில் போயிருந்தேன்

குட்டை பிடித்த நாயெல்லாம்
நடுவீட்டில் கூடி நின்று
கடிபட்டு குலைக்குமென்று
நானெங்கு கண்டேன் தோழா!

காலமிது காலமைய்யா
கலிகாலமே தானைய்யா!
மதிகெட்டுப் போயிருக்கும்
மிருகங்களின் ராட்ச்சியம்தான்!

தொப்பியைப் பிரட்டிப் போட்டு
கறுவலென்ற நினைப்புக்களும்
காற்சட்டை கிழித்துக் கொண்டு
ஸ்ரைலென்ற மிதப்புக்களும்

நாலுபேராய் சேர்ந்துவிட்டால்
பிஸ்தாவென்ற கனவுகளும்
நாலுபோத்தல் உள்ளே போனால்
மாவீரர் கனைப்புக்களும்

பட்டிகள் போல் நிற்குமிந்த
பரதேசிக் கூட்டங்களிற்கு
மேடையேற லாயக்கில்லை
மேல்வீட்டில் ஒன்றுமேயில்லை!

ஆனந்தம் கொள்ளத்தான் வேண்டும்!
ஆர்ப்பரித்தல் செய்தலும் வேண்டும்!
அதற்குமோர் எல்லை வேண்டும்!
அதற்கேற்ற இடங்களில் வேண்டும்!

மொழி வளர்க்கும் இடத்தில் நின்று
மொளி உடைத்தல் நியாயமல்ல
முழிபிதுக்கும் செய்கையெல்லாம்
நாகரீகத்து வர்க்கமல்ல

காகமெல்லாம் கூவுமென்று
கனவுகண்டு சொல்லவில்லை
காதகர் போலிருக்கும் நீங்கள்
மனிதம் கொள்ளல் நிகழ்தல் வேண்டும்!
பின்வரிசையில் குந்தியிருந்தும் நான்
கொம்புத்தேன் குடித்தல் வேண்டும்!

**அனந்தன்**

## கல்வி

**கடையநல்லூர் ஜமீலா**
**(சிங்கை)**

நலம்கீறி பகைவிரிக்கும்
தீயோர் கூட்டம்
நடமாட முடியாமல்
ஆக்க வேண்டும்
பலம்கூறி எளியோர்முன்
பணத்தைக் காட்டி
பண்பழிக்கும் போலிகளை
ஒழிக்க வேண்டும்
உளம் கீறி சாதிவெறி
ஊட்டு கின்ற
உலுத்தர்களை உலகைவிட்டே
விரட்ட வேண்டும்.
நிலம் பார்த்தால் வெற்றியில்லை
கல்வி என்னும்
சுடர்பிடித்தால் வரும்வெற்றி
நினைவில் கொள்வீர்

மடம் கீறி மறுமலர்ச்சி
காண வேண்டும்
மற்றவரோ டிணைந்தேற்றம்
அடைய வேண்டும்!
அடம்கீறி பணிவன்பை
வளர்க்க வேண்டும்
ஆன்றோர்கள் சொன்னவழி
நடக்க வேண்டும்
புடம்போட்ட தங்கமாக
நமது வாழ்வு
பூவுலகில் ஜொலித்திருக்க
வேண்டுமென்றால்
தடம்புரண்டு ஓடாமல்
கல்வி என்னும்
கீர்த்தி வழி நிற்க வேண்டும்
கற்க வேண்டும்!

## அழகின் சில கோலங்கள்

உடம்பிற்கு உடை அழகு
உணவிற்கு ருசி அழகு
உள்ளத்தில் தூய்மை அழகு
அனுதைக்கு அணைப்பு அழகு
அன்புக்கு பணிவு அழகு
ஆசைக்கு எல்லை அழகு
வள்ளலுக்கு கொடை அழகு
வாழ்க்கைக்கு சுகம் அழகு
வாழும் வரை நேர்மை அழகு
நாட்டிற்கு நீதி அழகு
நண்பர்க்கு நட்பு அழகு
நல்லவர்க்கு புகழ் அழகு
கோபத்தில் பொறுமை அழகு
உறவுக்கு பாசம் அழகு
ஊருக்கு பெயர் அழகு
உண்மையில் வாழ்வு அழகு
மொத்தத்தின் இணைப்பு அழகு

**ப.இந்திரன்**
**(சுவீடன்)**

## "அடிமை"

மானிடா!
உன்னால் உருவாக்கப்பட்டவன்
இன்று
உன்னையே ஆளும்
சர்வாதிகாரி நான்

நான் சடப்பொருள் தான்
உன் ஆறறிவும்
என்னுள் அடிமை

நானே தேவன்
படைத்தல் தொழிலுக்காக
படைக்கப்பட்டவன் தான்
நான் நடத்துவதோ
ஊழிக்கூத்து
உருத்திர தாண்டவன்
அழித்தலே இன்று
என் அவதாரத்தின் விளைவு

நானே அரக்கன்
பஞ்ச பூதங்களின்
புத்திரன்
ஆழிக்கடலிலும் எக்காளமிடுவேன்
வானைக் கிழித்து
வையகத்தை துளைத்திடுவேன்
ஒரு கணப்பொழுதில்
பிரபஞ்சத்தையே பொசுக்கிடுவேன்

பூகோளத்தையே பிளந்து
முளைத்தெழும் விச வித்து
நான்!
உலகையே அரித்து
வளர்ந்து வரும் புற்றுநோய்
நான்!
என்னை அரவணைத்து
ஆள நினைப்பவனையும்
அழித்து விடும் எய்ட்ஸ் மங்கை நான்

இப்போ புரிந்திருப்பாய்
என்னால் ஆக்கப்பட்ட ஆயுதங்கள்
அணு ஆயுதங்கள
நான்
இன்று நீ என்னுள் அடிமை

**திருமாவளவன்**

## எல்லை தாண்டாமல்

அஸ்தமனத்தில் அடிவானம் குளிக்க
அடிவானில் ஹெலிகள் பறக்க
புண்பட்ட பூமியில்
பாதைகள் எல்லாம்
பள்ளம் மேடாய் கிடக்க....

ஒட்டை உடம்மை இழுத்துக்கொண்டு
எங்கே ஓட....
காலிருக்க கையில்லை
கையிருக்க காலில்லை

அமைதி வரும் அமைதி வரும்
என காத்திருந்த எமக்கு
ஆதிகாலத்து குரங்கை போல வந்த
இராணுவமே போதும் எமை அழிக்க....

எல்லைதாண்ட பாசும் இல்லை
தொல்லை தீர வழியும் இல்லை
இந்தப்புறம் ஆழமான கடல்
அந்தப்புறம் கோரமான இராணுவம்

எழுந்திருக்க முடியவில்லை
எலும்புகள் குத்துகின்றன...
நாக்கு வரண்டு வார்த்தைகள்
இன்றி ஊமையானேன்....

என் தேச தாயின் உடம்பெல்லாம்
ஓட்டைகளும் இரத்தக் கறைகளும்
என்மண்ணின் வயல்வெளிகளில்
குருதிகதிர்களை
அறுவடை செய்து கொண்டிருக்கும்
போர் வீரர்களை பார்க்க சக்தியற்றவளாய்.
..

ஆயுதங்களை தாண்டி சவங்களை தாண்டி
அந்த இராட்சத கவசங்களை தாண்டி
எல்லைவரை நடக்க முடியாமல்...
அந்த இடத்திலே உறங்கிப்போனேன்....

**ஜி. மொனிக்கா**

## நல்லதே எண்ண வேண்டும்

எண்ணினான் புத்தனாக
சந்தோசப்பட்டான்
என்ன மாதிரி அனுபவித்திருப்பான்
புத்தன் புத்தன் தான்
இராமன்
ஆ! இவன் அவனை விடவும்
பெரியவன்
வள்ளுவன் சும்மாவா
வசிட்டன் குறைந்தவனா
முழுக்கையும் கண்டவன்கள்
மொத்தத்தில் இவன்கள்
கொடுத்து வைச்சவங்கள்
இன்ப சுகத்தில் மிதந்தவர்கள்
பரமானந்தம் கண்டவர்கள்
சொர்க்கபுரி நுழைந்தவர்கள்
ஆ! ஆ!! எல்லாம்
பார்த்தவங்கள்
குலம் போற்ற வாழ்ந்தவங்கள்
நிலம் போற்ற வாழ்ந்தவங்கள்
முழுதும் பொய் என்ற சித்தர்கள்
ஆனால் எல்லாம் கண்டவங்கள்
ஏனெனில்
யசோதரை, சானகி
வாசுகி, அருந்ததி
எல்லோரும் அழகிகள்
அழகு தேவதைகள்

**சிதம்பரம்**
**ஞா.வடிவேலனார்**



**புதுக்க விதை**

### இவ்வாரச் சிந்தனைக்கு

இயற்கைக் கவர்ச்சியில்லார் முயன்று
செயற்கைக் கவர்ச்சிச் சிறகடிப்பாரே

**கவிஞர் வி.கந்தவனம்**

# இந்திய சீன ஒப்பந்தம்

# இன்னுமொரு அரசியல் சாதனை!

சோவியத் யூனியனின் உடைவுக்குப் பின்னர் உலக அரசியல் அரங்கு பல அதிசயிக்கத்தக்க மாற்றங்களைக் கண்டுவருகிறது. அரசியல் யதார்த்தங்களைப் புரிந்து கொண்ட தலைவர்கள் தமது தேசங்களை யுத்தங்களை நோக்கித் தள்ளாமல் சமாதானத்தை நோக்கி நகர்த்த முனைவது சமீப காலத்திய வரவேற்கத் தகுந்த அம்சங்களில் ஒன்று.

இத்தகைய புரிந்துணர்வே இன்று உலகின் இரு பெரும் நாடுகளான சீனுவையும் இந்தியாவையும் நீண்டகால பகையுணர்வை நீக்கி ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைத்திருக்கிறது. கடந்த செப்டம்பர் மாதம் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மேற்கொண்ட நான்கு நாட்கள் சீன விஜயத்தின்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. "உலகின் ஐந்தில் இரண்டு பங்கு மக்கள் வாழ்ந்து வரும் இந்த இரு நாடுகளிடையே மேற்கொள்ளப் பட்டிருக்கும் இவ்வொப்பந்தமே ஒப்பந்தம் என்ற வரையறையைப் பூர்த்தி செய்கிறது" என சஞ்சிகை ஒன்று வர்ணித்திருக்கிறது.

இந்தியா, சீனு ஆகிய இருநாடுகளிடையேயும் உறவுகள் சுமுகமாக இருந்ததில்லை. இதற்கு முன்னர் 1954இலும் பின்னர் 1992 இலும் இரு நாடுகளும் பங்கு கொண்ட உச்சிமகாநாடுகள் நடந்த போது இம்முறையைப் போல ஆரோக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டதில்லை. ஆனுல் இம்முறை மேற்கொள்ளப் பட்டிருக்கும் ஒப்பந்தம் அமெரிக்க சோவியத் குளிர் யுத்தத்தின் முடிவு ஆசியாவின் வலுமிக்க இருநாடுகளை அரசியல் கணிப்புகளை மீறிய வித்தியாசமான முடிவுகளை எடுக்கவைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

இரு நாடுகளின் உறவுகளும் நீண்டகாலமாக சீர்குலைந்து இருந்தன. இரு நாடுகளிடையேயும் உள்ள எல்லைகளில் தொடர்ந்து பதட்ட நிலை நிலவிவந்தது. 1962 ம் ஆண்டு இருநாடுகளுக்கிடையே நடந்த ஒரு குறுகிய யுத்தத்தில் சீனு வெற்றியடைந்தது. இந்த யுத்தத்தில் ஏறத்தாழ 40 ஆயிரம் இந்தியத் துருப்புக்களை கொன்ற சீனு, இந்தியாவின் கிழக்கு மாநிலமான அருணுசலப் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கு உரிமை கோரியது. அது போலவே இந்தியாவும் காஷ்மீருக்கு அருகிலுள்ள சீனுவின் வட பிரதேசமாகிய சின்சியாங்கிலுள்ள அக்காய்சின் பகுதிகளை உரிமை கோரியது. சீனுவுடனை தனது எல்லைகளில் றிசேவ் துருப்புக்களை சேர்க்காமல் ஒரு இலட்சத்து ஐம்பதிளுயிரம் துருப்புக்களை இந்தியாவும் இதுபோன்ற இரு மடங்கு துருப்புக்களை சீனுவும் நிறுத்தியிருப்பதாகக் கணக்கிடப் படுகிறது.

இரு நாடுகளுக்கிடையேயான சமாதானப் பேச்சுவார்த்தைகள் 1981 இல் ஆரம்பமாகின. "அமைதியையும் சமாதானத்தையும் பேணி இரு நாடுகளின் இறைமைகளையும் மதிப்பது" என்ற சமீபத்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்வரை இருநாடுகளுக்குமிடையில் நடந்த பேச்சுவார்த்தைகள் எந்தவித பயனையும் தரவில்லை. தற்போதைய ஒப்பந்தத்தின் கீழ் எல்லைப் பகுதி பதட்டநிலையை தணிக்கவும், எல்லைப் பிரச்சனைகளை முற்ருக தீர்க்கும் பேச்சுவார்த்தைகளை தொடரவும், இறுதியான முடிவுகள் எடுக்கப்படும் வரை தற்போதைய எல்லைகளை இருநாடுகளும் கடைப்பிடிப்பதென்றும் இருநாடுகளும் தீர்மானித்திருக்கின்றன இத்தகைய தீர்மானம் சாதாரணமான தொன்றல்ல. 1962ம் ஆண்டிலிருந்து தீர்க்கமுடியாமல் இருந்து வந்த பிரச்சனையை இவ்வொப்பந்தத்தின் மூலம் இருநாகளும் ஒரு தீர்வை நோக்கி நகர்த்தியுள்ளன.

12 வருடங்களாக நடந்த பேச்சுவார்த்தைகளில் காணமுடியாமல் போன ஒரு தீர்வு இவ்வளவு விரைவில் எப்படி வந்தது என்ற கேள்விக்கான பதில் சோவியத் யூனியனின் உடைவுதான். இந்த உடைவின் மூலம் இந்தியா, சீனு ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலான வல்லமைப் போட்டி வலுவிழந்துபோய் விட்டது. 1970 களிலும் 1980களின் ஆரம்பத்தில் மத்திய ஆசியாவில் வல்லரசுப் போட்டிகள் வலுத்திருந்தன. சோவியத் யூனியனும், இந்தியாவுடனை அதன் நட்பும் சீனுவுக்கு அச்சுறுத்தலாக இருந்தன. இதனுல் சோவியத்தின் எதிரியான அமெரிக்காவோடு நட்புக் கொண்ட சீனு, மத்திய ஆசியாவில் உள்ள இந்தியாவின் எதிர்ப்பு நாடும், அமெரிக்காவின் விசுவாச நாடாகிய பாகிஸ்தானையும் அரவணைத்தது. பாகிஸ்தானிடமிருந்து தம்மைப் பாதுகாப்பது மாத்திரமல்ல, பாகிஸ்தானை விட தம்மை இராணுவரீதியாக முன்னிலைப் படுத்துவதும் இந்தியாவுக்கு அவசியமாக இருந்தது. இதனுல் இந்தியா, சோவியத் யூனியனுடன் மிக நெருக்கமான இராணுவ உறவுகளை ஏற்படுத்தியது. அமெரிக்காவிலும், பாகிஸ்தானுலும் மூர்க்கமாக எதிர்க்கப்பட்ட ஆப்கானிஸ்தானின் சோவியத் சார்பு அரசை இந்தியா ஆதரித்தது. சீனுவிடமிருந்தும் இந்தியா விலகிக் கொண்டது.

ஆனுல் குளிர் யுத்தத்தின் முடிவு உடனடியாக இந்தியா, சீனு ஆகிய

## சுழலும் உலகம்



**தி. உமாகாந்தன்**

இருநாடுகளையும் நட்பு நாடுகளாக்கிவிடவில்லை. ஆனால் உலகமாற்றங்களும் அடுத்த தசாப்தத்தை நோக்கிய தலைமைகளின் சிந்தனைகளும் இரு நாடுகளும் இணைந்து செயற்படவேண்டிய அவசியத்தை புரிய வைத்தன. அடுத்த நூற்றாண்டில் செல்வமும், வல்லமையும் மிகுந்ததாக விளங்கப்போகும் சீனாவின் எந்த அதிகாரத் திணிப்பக்கும் உள்ளாகாமல் தப்ப இந்தியா புத்திசாலித்தனமாக இந்த ஒப்பந்தத்தின் மூலம் வழிகோலி யுள்ளது.

அதுமட்டுமல்ல தாம் சமாதானத்தையே விரும்புவதாக சீனா பிரச்சாரம் செய்வதற்கும் பொருளாதார அபிவிருத்தியில் சீனா அதிக கவனம் செலுத்தவும் இவ்வொப்பந்தம் சீன தரப்புக்கு வழி வகுக்கிறது.

சீனாவைப் போலவே இந்தியாவும் திறந்த பொருளாதார முறையினை நோக்கி நகர்ந்திருக்கிறது. சீனாவைப் போலவே பொருளாதார வளர்ச்சி, வெளிநாடுகளின் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் என இந்தியாவின் பொருளாதாரத் திட்டங்களும் அமைந்திருக்கின்றன. பாகிஸ்தானின் இராணுவ அச்சுறுத்தல்கள் தொடர்பாக இந்தியாவிடம் இப்போது பயம் ஏதும் இல்லை. யுத்தம் ஒன்று மூளுமானால் பாகிஸ்தான் இராணுவத்தை இலகுவாக முறியடித்துவிடலாம் என இந்தியா கருதுகிறது. சீனா, பாகிஸ்தானுக்கு விற்ற எம். 11 பலிஸ்ரிக் ஏவுகணைகள் கூட இந்தியாவை அச்சமடையச் செய்யவில்லை.

இந்தியாவும், சீனாவும் இப்போது பல விடயங்களைப் பரிமாறிக்கொள்ள வழி கிடைத்திருக்கிறது. ஆசியாவிலேயே இம்முறை இந்தியாவின் இராணுவ ஒதுக்கீடுதான் உண்மையாகவே குறைக்கப்பட்டிருக்கிறது. தனது உறுதியான 1.2 மில்லியன் துருப்புக்களை உயர்ந்த தொழில் நுட்பத்தை கொண்ட படையாக இந்தியா மாற்ற முனைகிறது. இந்த மாற்றத்தை சீனாவின் உதவியுடன் இலகுவாக ஏற்படுத்த இந்தியாவுக்கு வாய்ப்பு வந்துள்ளது. இருநாட்டுத் துருப்புக்களும் பாவிக்கும் ஆயுதங்களின் அடிப்படை வடிவமைப்பு ரஷ்யாவினுடையதாக இருப்பதால் தொழில் நுட்பத்தினையும், உதிரிப் பாகங்களையும் பரிமாறிக் கொள்வது இருநாடுகளுக்கும் இலகுவாக இருக்கும்.

இராணுவரீதியாக மாத்திரமல்ல பொருளாதார ரீதியாகவும் இரு நாடுகளும் பல பரிமாற்றங்களைச் செய்யமுடியும். ஏற்கனவே விவசாயத்துறை குறித்த தொழில்நுட்ப பரிமாற்றங்கள் இருநாடுகட் கிடையேயும் ஆரம்பித்துவிட்டன. இந்தியா ஏற்கனவே விவசாயத் துறையில் சீனாவின் டீசல் இயந்திர தொழில் நுட்பத்தை பயன்படுத்த தொடங்கி யுள்ளது.

இருநாடுகளுக்கிடையேயும் இராணுவ, பொருளாதார பரிமாற்றங்கள் மட்டுமல்ல அரசியல் மாற்றங்களும் ஏற்படலாம். சீனாவுக்கு எதிராகப் போராடும் தலாய் லாமாவுக்கும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் தீபேத்தியர்களுக்கும் புகலிடம் கொடுத்திருக்கும் இந்தியா எதிர்வரும் நாட்களில் சீனாவின் கருத்த நோக்கி நகரலாம். அது போலவே சீனாவும் பாகிஸ்தானுடனும் குறைந்த பட்ச உறவைப் பேணலாம்.

இந்த ஒப்பந்தம் இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கு பல நன்மைகளைக் கொடுத்தாலும் அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் ஒரு பாதக அம்சமாகவே இவ்வொப்பந்தத்தை நோக்குகின்றன. அணுஆயுத உற்பத்தி முயற்சி காரணமாக ஏற்கனவே அமெரிக்க இராணுவ உதவிகளில் வெட்டுப் பெற்று நிற்கும் பாகிஸ்தான் முற்றுமுழுதாக சீனாவை நம்பியிருக்கவேண்டிய நிலையில் இவ்வொப்பந்தம் பாகிஸ்தானை அதிரச் செய்திருக்கிறது.

அதுபோலவே எம்.11 ஏவுகணைகள் விற்பனை தொடர்பாகவும், துணி ஏற்றுமதி தொடர்பாகவும் சீனா மற்றும் அமெரிக்கா விடையே பலத்த முரண்பாடுகள் எழுந்துள்ளன. இதனை சீனப் பிரதமர் லீ பெங் சமீபத்திய இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போதும் அமெரிக்க அரசியல் அதிகார துஷ்பிரயோகம் என வன்மையாகக் கண்டித்துள்ளார். அது போலவே இந்தியாவுக்கு ரஷ்யா விநியோகம் செய்ய வந்த ரொக்கெற் யந்திரங்களை அமெரிக்கா தடைசெய்ததால் இந்தியாவும் அமெரிக்காமீது ஆத்திரமடைந்துள்ளது.

இத்தகை ஒருநிலையில் தம்மீதான அமெரிக்க அதிகார பிரயோகங்களை இருநாடுகளும் இணைந்து எதிர்ப்பதற்கும் அடுத்த நூற்றாண்டின் வலுவான சக்திகளாக தம்மை மாற்றிக்கொள்ள இவ்வொப்பந்தம் இருநாடுகளுக்கும் அடி எடுத்துக் கொடுக்கும்.



# ஏன் தாயகத்தில் எழுதுகின்றேன்?

## தி. உமாகாந்தன்

பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் எம்மவர்களின் திறமையை இணைத்து வெளிப்படுத்தும் ஒரு புகலிடத்துச் சஞ்சிகையாக 'தாயகம்' இருப்பதால் மட்டுமல்ல, அச்சுறுத்தல்களைக் கண்டு ஒடுங்கிவிடாமல் .....ஒதுங்கிவிடாமல் தனது கருத்துக்களை ஆணித்தரமாய் தயங்காமல் வெளியிடுவதனால் மட்டுமல்ல, வேறுபட்ட விடயங்களையும், மாறுபட்ட கருத்துக்களையும் வெளியிட்டு ஆரோக்கியமான விவாதங்களுக்கு இது களம் அமைப்பதால் மட்டுமல்ல, துணிவான சரியான விடயங்களை 'ஏடிட்டோரியலில்' எழுதி அதை வாசிக்கும்போது நாம் நினைத்ததை இவர்கள் எப்படி அச்சில் கொண்டுவந்தார்கள் என பார்த்து பிரமிப்பதால் மட்டுமல்ல, தாயகத்தில் நான் எழுதுவதற்கு உணர்வுபூர்வமான இன்னுமொரு காரணமும் உண்டு.

"எந்தக் கருத்தாயினும் அதை நாம் பிரசுரிப்போம், வேறுபட்ட கருத்துக்களுக்கும் நாம் இடமளிப்போம்" என்று சஞ்சிகை அட்டைகளில் எழுத்துக்களைப் பதித்தவர்கள் "எங்கள் சஞ்சிகைக்கு நீங்கள் எழுதுங்கள் ஆக்கத்தைப் பிரசுரிக்கிறோம் ஆனால் உங்கள் பெயரில் அல்ல, வேறு பெயரில், ஏனென்றால் நீங்கள் இயக்காரர் அதனால் சஞ்சிகை இயக்க முலாம் பூசப்பட்டுவிடும் (ஈராக் பிரச்சனையும், சோமாலியா நிலையையும் ஜோர்ஜியா விஷயத்தையும் பாவித்து எப்படி இயக்க முலாம் பூசுவது என்பது எனக்கு இதுவரை விளங்கவில்லை) என்று இலக்கிய விற்பன்னர்கள் (இவர்கள் முன்னைநாள் இயக்ககாரர்கள் என்பது வேறு) சொன்னபோது வெட்கப்பட்டேன். வேதனைப்பட்டேன். இயக்கத்தோடு உள்ள தொடர்பால் அல்ல. இத்தகையவர்கள் கையில் புகலிட இலக்கியம் அகப்பட்டுவிட்டதே என்று. இந்நிலையில் பாதையில் தெளிவும் நிலைப்பாட்டில் உறுதியும் கொண்ட தாயகம் தொடர்ந்து எனது உலக விமர்சனங்களைப் பிரசுரிக்கின்றது. இது இன்று என்னை மேலும் மேலும் எழுத வைக்கிறது. எழுத்துக்களையும் வளமாக்குகிறது. இவற்றை விட நான் தாயகத்தில் தொடர்ந்து எழுத இன்று என்ன காரணம் தேவையாக இருக்கமுடியும்?

## முல்லாவின் கதைகள்

# பொய்

### ஜெயந்தீஸன்

முல்லா பெரிதாக வறுமைப்பட்டுவிட்டார். ஓர் இரவில் அயல் வீட்டானின் வளவுள் நுழைந்து வெள்ளாடு ஒன்றைத் திருடுகின்றார். அதனது தலையை வெட்டி ஒருபக்கம் வைத்துவிட்டு, பகுதிகளைத் துண்டு துண்டாக்கி வரவிருக்கும் தினங்களில் உண்பதற்காக பதப்படுத்தி வைக்கின்றார். மறுநாள் காலையில் தனது வெள்ளாடு திருடப்பட்ட விஷயம் அயல் வீட்டவனுக்குத் தெரியவருகின்றது. வீட்டு வாசலில் வந்து எல்லோருக்கும் கேட்கும்படியாக இப்படிக் கத்துகின்றான்.
"எனது பிராணியைக் களவெடுத்துவிட்டனர். கள்வன் அழிந்து நாசமாகட்டும். அவனைப் பிடித்து இரண்டு கைகளையும் வெட்ட வேண்டும்!"
சத்தம் கேட்டு ஜனம் கூடியது. அதற்குள் இருந்த ஒருவன்
"பிராணி என்கின்றாயே, அது எந்த வகைப்பிராணி?" எனக் கேட்கிறான்.
"அது ஒரு மாடு, மிகவும் அழகிய மாடு" என்கின்றான்.
வீட்டுக்குள் இருந்த முல்லாவுக்கு இது கேட்கின்றது. அவ்வளவு தான், வெள்ளாட்டின் தலையைக் கையிலெடுத்தப்படி வெளியே வந்து கூட்டத்தைப் பார்த்து இப்படிச் சொல்கின்றார்:
"ஓ! முஸ்லீம்களே! இவன் ஒரு பொய்யன். எனது கையில் என்ன இருக்கின்றது என்பதைப் பாருங்கள், பொய் சொன்ன இவனது நாக்கை வெட்டுங்கள்"
(SUBLIMES PAROLES ET IDIOTIES DE NASR EDDIN HODJA எனும் பிரெஞ்சு நூலிலிருந்து இக்கதை மொழி பெயர்க்கப்பட்டது.)



# அளவுக்கு மிஞ்சினல்......

## திருமாவளவன்

"கீரைக் கடைக்கும் எதிர் கடை வேண்டும்", முதுமொழி. தமிழர் தம் மொழியை, கலாச்சாரத்தை மறந்தாலும் இந்த முதுமொழிகள் காட்டும் பொருளில் இருந்து விட முடியாது. இவை காலா காலமாக கண்ட அனுபவங்களின் வாயிலாக பெறப்பட்டவை.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்பது போல ஒருவனுடைய அல்லது ஒரு பரம்பரை இனத்தின் குணுதிசயங்கள் இலகுவில் விட்டுப் போகாது.

கீரைக் கடைக்கும் எதிர் கடை.... என்பதில் "எதிர்க்கடை" என ஒருமையில் தான் குறிப்பிடப் பட்டுள்ளது. இது பன்மையாகிக் "கடைகள்!".

ஆனல் அதற்கும் பழமொழி உண்டு. "அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சு" இன்று கனடாவின் தமிழர் பெருகி வாழும் பகுதிகளில் "தமிழ் கடை"களின் பெருக்கம் நிறைந்தே வருகின்றது. பண்டைக் காலங்களில் சமுதாய வளர்சியை அவர்கள் வாணிப வளர்ச்சியால் எடைபோட்ட தன்மையையும் மறப்பதற்கில்லை.

கடைகள் பெருகப் பெருக அவற்றின் விளம்பர உத்திகளும் சுவை படத் தொடங்கி விட்டது. குறிப்பிட்ட பெறுமதிக்கு மேல் பொருட்கள் கொள்வனவு செய்தால் இலவச "பொதி நகர்த்தும்" வசதி, இலவச வீடியோப்பிரதி... இப்படிப் பல பல இலவசங்கள்.

இன்றுள்ள விளம்பர உத்திப் போட்டிகளைப் பார்த்தால் "நூறு டாலர்க்கு மேல் பொருட்கள் வாங்கினல் வீட்டில் வந்து சமைத்துப் தரப்படும்" என்ற விளம்பரத்தை வெகுவிரைவில் காணலாம் போல இருக்கின்றது என்று ஒரு எழுத்தாளர் நகைச்சுவை ததும்பக் கூறினர்.

வியாபாரிகள் மத்தியில் தான் இந்நிலை என்ருல் அறிவுஜீவிகள் மத்தியில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் சஞ்சிகைகளின் பெருக்கம் எலி குட்டி போட்டுப் பெருகிய கதையாகி வருகின்றது. இன்று இலங்கை, இந்தியா போன்ற இடங்களில் இருந்து வெளிவரும் சஞ்சிகைகளைப் பத்திரிகைகளை அந்நாட்டின் மக்கள் விகிதாசாரத்தோடு பார்க்கும் போது கனடாவே முன்னிலையில் எனலாம்.

"துப்பாக்கிகளால் தமிழைப் பாதுகாக்க முடியாது, எழுத்தாற்றலால்தான் முடியும்" என்ற சேரனின் நல்ல கருத்தோடு பார்க்கும்போது தமிழை வளர்ப்பதில் கனடா தான் முன்னிலை வகிக்கின்றதா என எண்ணத் தோன்றுகின்றது அந்த அளவிற்கு இங்கு தமிழ் சஞ்சிகைகள் - பத்திரிகைகள் பெருகி வருகின்றன. இது ஆரோக்கியமானதா என்பது ஆராய்ச்சிக்குரியதே. கனடாவின் தமிழ் பத்திரிகைகள் - சஞ்சிகைகளைப் பார்க்கும் போது பல தோன்றி கையை சுட்டுக் கொண்டு மறைந்து போனதும், மாத இதழ்கள் காலாண்டாகி அரையாண்டாகியதும் கியூறியஸ் ஜி சொன்னதுபோல பல விளித்துக் கொண்டு 'உள்ளேன் ஐயா' சொல்லிவிட்டுக் தூங்குவதும் பல நடைப் பிணங்களாக திரிவதுமாக உள்ள நிலை இயல்பாய் போய் விட்டது.

ஈழப் போராட்ட வரலாற்றில் 83-86 க் காலப் பகுதி மிகவும் வித்தியாசமானது. தவளையை விழுங்கியதால் வயிறு வீங்கிய பாம்பு போல இயக்கங்களின் எண்ணிக்கையும் வீங்கிப் பெருத்த காலம். துப்பாக்கி வைத்திருந்தவன் எல்லாம் இயக்கம் தொடங்கிய நாட்கள் அவை. ஒருகால கட்டத்தில் 30க்கு மேற்பட்ட அமைப்புகள் இருந்ததாக வரலாறு. இது விடுதலையின் எழுச்சி போலத் தோற்றமளித்து, அதனல் ஏற்பட்ட அழிவுகளும் சகோதரப் படுகொலைகளும் மறக்கமுடியாத கண்ணீர் கதைகள்.

இதே போலத்தான் இன்று கனடாவின் பத்திரிகை உலகமும் மாறி வருகின்றது. சாத்திரம் தொடக்கம் சரித்திரம் வரை எழுதுவதற்கு பத்திரிகைகள் இருக்கின்ற நிலையிலும் இவையே கனடாவின் தமிழ் மக்கள் தேவைக்கு அதிகம் எனலாம்.

இப்போதிருக்கும் பத்திரிகைகளே தீனி இன்றி தமிழக சஞ்சிகைகளின் கட்டுரைகளை மறுபிரசுரம் செய்து விட்டு நன்றி-சினிமா எஸ்பிரஸ்- நன்றி யூனியர் விகடன் என்று போட்டுக் கொள்கின்ற நிலையிலும் அதே அவர்கள் நன்றி சொல்லும் சஞ்சிகைகள் அவர்களுக்கு மட்டுமன்றி வாசகர்களுக்கும் போதிய அளவில் கிடைக்கின்றதென்பது அனைவரும் அறிந்ததே.

சில சமயங்களில் ஒரு எழுத்தாளரின் ஆக்கங்களால் பத்திரிகைகளின் மூன்று நான்கு பக்கங்களை நிரப்பவேண்டிய பசி கூடப் சில பத்திரிகைகளுக்கு ஏற்படுகின்றது.

இதே வேளை அண்மையில் நடைபெற்ற எழுத்தாளர் கூட்டமொன்றில் இரண்டிற்கு மேற்பட்டோர் புதிய சஞ்சிகைகள் தொடங்க இருப்பதாக அறிவித்து மேலும் பல சஞ்சிகைகளின் வரவுக்கு கட்டியம் கூறுகின்றது. இதைப் பார்க்கும் போது பேனு வைத்திருப்பவெனல்லாம் சஞ்சிகை தொடங்கும் நிலை தோன்றும் போலத் தெரிகின்றது.

கனடாவின் இயல்பு வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கி உள்ள தமிழ் மக்கள் இன்றைய நிலையில் ஒன்று இரண்டு சஞ்சிகைகளுக்கு மேல் வாங்கி படிக்கும் மனநிலையோ குறிப்பாக நேரமோ இல்லை. அதே வேளை முழு நேர டெலிவிஷன் நிகழ்ச்சிகளும் தமிழ் வீடியோ வசதிகளும் குறிப்பாக தமிழக சஞ்சிகைகளும் இவ்விடம் அளவுக்கு அதிகமாகவே கிடைக்கின்றன. எனவே கனடா பத்திரிகைகளின் எண்ணிக்கைப் பெருக்கம் எதிர்பார்த்த வெற்றியை ஏற்படுத்தும் என்றில்லை.

இந்நிலை நீடித்தால் ஒவ்வொரு எழுத்தாளர்களும் அவர்கள் பரிபாசையில் ஒருவர்க்கொருவர் "கடித்துக்" கொள்வதை படிப்பதற்காக அவர்கள் வட்டத்துக்கு மட்டுமே பயன்படலாம். அல்லது "நினைவு

23ம் பக்கம் பார்க்க..

# பாலையிலும் பயிர் வளர்ப்பார்

## சிவசேகரம்

லண்டன் தமிழ்ச் சமுதாயத்தினர் என்று பரவலாக அறியப்படுவோர் இலங்கையினின்று இங்கிலாந்து வந்து தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ குடியேறிய வடக்கு கிழக்கு மாகாணத் தமிழ் மக்களே. தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் இங்கு நெடுங்காலமாக இருக்கிருர்கள். அவர்கள் எண்ணிக்கையிற் குறைந்தவர்கள். லண்டன் தமிழ் சங்கம், கிழக்கு லண்டன் முருகன் கோவில் போன்றவற்றிற்கு அவர்களது பங்களிப்பு முக்கியமானது இலங்கையிலிருந்து வந்தவர்கள் பல வேறு காலகட்டங்களில் வந்தார்கள். இலங்கை சுதந்திரமடையு முன்பே வந்தவர் தொகை அற்பமானது. அதன்பின் வந்தோரில் 1970கள் வரை வந்தோர், பெரும்பாலும், வசதியான வாழ்வு தேடி வந்து இங்கு தம்மை நிலைநிறுத்திக் கொண்ட படித்த, தொழிற்பயிற்சி பெற்ற மேற்தட்டு நடுத்தர வர்க்கத்தினர்.. இவர்களுட் காலத்தாற் பிற்பட்டவர்களிடையே சுய அடையாளத்துக்கான ஒரு தேவையும் தாய்நாடு பற்றிய மன உளைச்சலும் அதிகம். அத்தேவைகள் பலவேறு வழிகளிற் தம்மை வெளிக்காட்டிக் கொள்கின்றன. தமது குழந்தைகட்கு வாரம் ஒரு முறை (கோயிலுக்குப் போகிற மாதிரி!) தமிழ்ப் பயிற்றுவிக்க அனுப்புவது அதில் ஒன்று. மற்றப்படி அவர்கள் தம்மிடையிற் கூடத் தமிழ்ப் பேசுவது குறைந்து வருகிறது. அவர்கள் எதையாவது தமிழில் வாசித்தால், அது நிச்சயமாகக், குமுதம், விகடன், கல்கி, பொம்மை மாதிரி ஒன்ருக இல்லாது போனுல், ஊரிலிருந்து ஆங்கிலம் தெரியாத உறவினர் எவராவது எழுதிய கடிதமாகத்தான் இருக்கும். இதனுலேயே தான் லண்டனிலிருந்து ஒரு உருப்படியான தமிழ் இலக்கியப் பத்திரிகையைக் ஒழுங்காகக் கொண்டுவரும் முயற்சி கடந்த இருபது வருஷமாகவே தோல்வியைத் தழுவி வந்துள்ளது.

தமிழர் தங்களது குழந்தைகட்குப் பரத நாட்டியமும் கர்நாடக சங்கீதமும் பயிற்றுவது அவர்களது கலை ஆர்வத்தை விட அடுத்தவன் அதைச் செய்கிருன் என்ற ஆதங்கத்தாலேயே தான் என்ருலும் உருப்படியாக எதையாவது செய்ய வேண்டும என்ற ஆர்வம் உள்ள கலைஞர்கள் அண்மைக் காலங்களில் இந்த மண்ணில் அடியெடுத்து வைத்திருக்கிருர்கள். இவர்களுட் பெருவாரியானேர் 1983ம் ஆண்டின் இனக்கலவரத்தை அடுத்துப் புலம் பெயர்ந்தவர்கள் எனலாம். லண்டன்வாழ் தமிழ்ச் சமுதாயத்தின் பெருந் தொகையினரும் 1983ன் பின் புலம் பெயர்ந்த தமிழர்களே. இவர்களுட் பெருவாரியானேருக்குப் பலவிதமான சோலிகளாலும் தமது உடனடியான பொருளாதாரத் தேவைகட்கு அப்பால் அதிகம் தேடும் முயற்சி இல்லை. இவர்களது பொழுது போக்குத் தேவைகளை நிரப்ப இந்தியாவிலிருந்து வந்து இங்கு களவாகப் பிரதி செய்யப்பட்ட சினிமா வீடியோ கஸெற்களும் மட்டரகமான சினிமாப் பாட்டுக் கஸெற்களும் உள்ளன. சில இயக்கங்கள் (இப்போது ஒன்று தான் இங்கே செயற்படுகிறது) நிதி, தனிமனிதர்கள் பணம் சேர்ப்பதற்காக ஏற்பாடு செய்யும் சினிமாப் பாடகர்களின் இன்னிசை மாலைப் பொழுதுகளில் மனங் களிப்பவர்களும் பலர் இருக்கிருர்கள். லண்டன் வாழ் தமிழ்ச் சமுதாயத்தின் கலையுணர்வு மனதை நெகிழ வைக்கும்: சோகத்தால்! இப்படிப்பட்ட ஒரு கலாச்சாரப் பாலைவனத்திற் தம்முடைய கலை ஆர்வத்தையும கலைத் திறமையையும் மட்டுமே நம்பி, நல்ல தமிழ் நாடகம் என்கிற பயிரை வளர்க்க முயன்றவர்கள் இருக்கிருர்கள். அவர்களுடைய கதையைத் தான் நான் எனக்குத் தெரிந்த விதமாக உங்களுக்குச் சொல்லுகிறேன். இதை விளங்கிக் கொள்வதற்கு இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றின் பின்னணியை சற்றே எழுதுவது பயன்படும்.

தமிழில், இல்லாதது எதுவுமே இருந்ததில்லை என்று மார் தட்டுகிற பரம்பரை நமது 'இயல், இசை, கூத்து' என அறியப்பட்ட முத்தமிழிற், கூத்தை நாடகம் என்று மாற்றி அதன் பின் தமிழில் இருந்த நாடக நூல்களைக் கடல் கொண்டது, அல்லது காவிரி கொண்டது என்று கதையளக்கும் அளவுக்கு உருப்படியாக எதையும் செய்யும் வகையில் நமது கற்பனை செயற்படவில்லை. சிறுகதை, நாவல், கட்டுரை போன்ற எழுத்து வடிவங்கள் போன்று புதுக்கவிதையும் நாடகமும் நமக்குப் புதியன. புதுக் கவிதை என்பது நம் மரபுக் கவிதையினின்று வேறுபடும் அளவை விடப் பன்மடங்கு பெரிய வேறுபாடு நமது கூத்து மரபுக்கும் நவீன நாடகத்துக்கும் உண்டு. மரபு சார்ந்த கதைகளை மேடையில் நடித்துக் காட்டும் பழைய நாடகங்கள் கூட அயலினின்று உள்வாங்கப் பட்டவை என்பதை நாம் உணர்வதில்லை. இதன் விளைவாகவே நவீன தமிழ் நாடகமும் அதன் முனைப்பும் பற்றிய தெளிவினமும் மிகுதியாக இருந்தது.

இலங்கையில் அவைக்காற்றுங் கலை வடிவங்கள் நெடுங்காலமாகவே இருந்து வந்துள்ளன. கூத்து வடிவங்களை மட்டுமன்றி நடனங்களையும் சடங்காக நடைபெறும் ஆடல்பாடல் நிகழ்ச்சிகளையும் நாம் அவைக்காற்றுங் கலைகளாகவே கருத வேண்டும். போக்கு வரத்து, தொலைத் தொடர்பு வசதிகள் குறைந்த சூழலில், இக் கலை வடிவங்கள், குறுகிய பிரதேச வரையறைகட்கு உட்பட்டும் மாற்றங்கட்கு முகங் கொடுக்க வேண்டிய தேவையின்றியும் நீடித்தன. சாதி அமைப்புப் போன்ற சமுதாய வேலிகளும் கலைகளில் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தடையாகவே இருந்தன. தமிழ் நாட்டில் இந்த நூற்ருண்டின் முற்பகுதியிற் காணப்பட்டது போன்று நாடகத்தை ஒரு வருவாய்க்குரிய தொழிலாக்கிய தமிழ் நாடகக் கம்பெனிகள் இலங்கையில் உருவானதாக எனக்கு நிச்சயமில்லை. ஆயினும் நாடகத்திற்கே தமது முழு நேரத்தையும செலவிட்ட

கலைஞர்கள் இருந்திருக்கிறார்கள் அவர்களது பங்களிப்புகள் பற்றி அண்மைக் காலங்களில் விரிவான கட்டுரைகளும் வெளியாகியுள்ளன. இத்தகைய கலைஞர்களின் நாடகம் பற்றிய அறிவும் புரிதலும் தமிழ்நாட்டில் ஏற்பட்ட விருத்திகளுடன் நெருங்கிய தொடர்புடையன. தமிழ் நாட்டின் கலாச்சாரப் பாதிப்பு (அதன் நல்ல அம்சங்களுடனும் அல்லாதனவற்றுடனும்) இந்த நூற்றாண்டின் இடைப்பகுதிவரை இலங்கைத் தமிழ்க் கலைகளின் விருத்தி மீது ஏறத்தாழப் பூரண மேலாதிக்கஞ் செலுத்தியது.

தமிழ்ச் சினிமா ஒருபுறம் தமிழ் நாடகபாணியிலான கதை, பாடல், தடிப்பு ஆகியவற்றைச் சார்ந்து விருத்தி பெற்றாலும் அயல் நாட்டுத் திரைப்படங்களே, முக்கியமாக ஆங்கில மொழியில் வந்தவை, அதன் வளர்ச்சியின் முனைப்பை பெரிதும் நிர்ணயித்தன. தமிழகத்தில் சினிமா இந்திய சுதந்திரத்தின் பின் கண்ட வக்கிரமான வளர்ச்சிக்கும் தமிழக அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தமை பற்றி நான் விளக்க அவசியமில்லை. இங்கே கவனிக்க வேண்டிய விஷயம் ஏதெனில் நாடகத்தைப் சார்ந்து தன் விருத்தியின் ஒரு பகுதியைப் பெற்ற தமிழ்ச் சினிமா, நவீன நாடகமேடையின் தன்மையை நிர்ணயிக்கும் நிலை ஏற்பட்டது. சினிமாவின் பலவீனங்கள் நாடக மேடையையும் பாதித்தன. இதன் விளைவுகளினின்று தமிழ் நாடக மேடை விடுபட வெகு காலமாகும் என்றே அஞ்சுகிறேன்.

தமிழ் சினிமாவின் பாதிப்பு, முக்கியமாக 50 களில் தி.மு.க. செல்வாக்கிற் குட்பட்ட திரைப்படங்களின் மிகைநடிப்பும் அடுக்கு மொழியும் ஆவேசமான உரைகளும், இலங்கைத் தமிழ் நாடகத்திற் சிறிது காலம் நிலைத்தது, எனினும், இவ்வாறான போக்கு வெகுகாலம் நீடிக்கவில்லை. ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் பாடசாலைகளிலும் கொழும்பிலும் ஆங்கில நாடகங்களுடன் (முக்கியமாக ஷேக்ஸ்பியரின் ஆக்கங்களுடன்) பரிச்சயம் பெற்றிருந்தாலும், இவ்வாறான நாடகங்கள் தமிழ் நாடக இயக்கத்தின் போக்கை நிர்ணயிக்கவில்லை. நாடகம் என்பது 'மரபு'சார்ந்த மேடைவடிவமாகத் தன் பழமையான உள்ளடக்கத்தையுடைய இசை நாடகமாகவும் நவீனமான தோற்றத்தையுடைய, சாரமற்ற பொழுதுபோக்கு முயற்சியாகவும் இழுபட்டது. சமூகப் பிரக்ஞை என்பது அரசியற் பிரக்ஞையுடன் தொடர்புடையது என்பதால் இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் மந்தமான அரசியற் பிரக்ஞை அதன் கலைவடிவங்களின் தேக்க நிலையிலுந் தென்பட்டது. 1956ம் ஆண்டு சிங்கள மொழி அரச கருமமொழியாக்கப்பட்டபோது கிளர்வுற்ற தமிழ் இன உணர்வு ஒரு முழுமையான சமுதாய உணர்வாக விருத்தியடைய முடியாத விதமாகச் சமுதாயப் பிரச்சனையை வெறுமனே மொழிப்பிரச்சனையாகக் காட்டும் அரசியற் போக்கின் ஆதிக்கம் மழுங்கடித்தது.

தொடரும்

## அளவுக்கு மிஞ்சினால்...

மலர்கள்'' "கல்வெட்டுகள்'' போல வருவோர் போவோர்களுக்கெல்லாம் இலவசமாக வழங்க வேண்டிய நிலை கூட ஏற்படலாம். கனடாவின் விளம்பர தாள்கள் போல ஒவ்வொரு வீட்டின் குப்பைக்கூடைகளை நிரப்புகின்ற பரிதாப நிலையையே உள்ளூர் தமிழ் சஞ்சிகைகள் எதிர் நோக்க வேண்டி ஏற்படலாம்.

இதே வேளை சஞ்சிகை பத்திரிகைகளுக்கான தனிக்கடைகள் இல்லாத நிலையில் தமிழ் கடைகளே ஒருபுறத்தை இவற்றிற்காக ஒதுக்கி வருகின்றது. எனவே இவ் எண்ணிக்கை வளர்ச்சி அவர்களின் சிரமத்தையும் வெறுப்பையும் கூட எதிர்நோக்க வேண்டியுள்ளது. பல நல்ல எழுத்தாற்றல் படைப்புக்கள் மக்களை சென்றடையும் தன்மையைக் கூட இந்நிலை பாதிக்கின்ற தெனலாம். எனவே எந்நிலையிலும் இவ் எண்ணிக்கைப் பெருக்கம் கனடாவின் சூழலில் இத்துறையின் வளர்ச்சியைக் காட்ட மாட்டாதென்றே கருதலாம்.

மொன்றியல் நகரத்தில் இருந்து எந்தவித சஞ்சிகைகளும் வெளிவராத நிலையில் அவர்கள் சஞ்சிகை தொடங்கும் முயற்சியில் இருந்து விடுபட்டு எழுத்தாளர்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்று நினைத்த நல்ல நோக்கத்தை கருத்தில் கொண்டால் இப்போதிருக்கும் சஞ்சிகைகளூடே எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிக்கொணரப்பட்டால் அவற்றின் தரம் உயர்வதோடு அவை மக்களை சென்றடையும் தன்மையும் உயரும்.

அதேவேளை மறுபிரசுரம் செய்யப்பட்ட கட்டுரைகளுக்காக அடுத்தவர்களுக்கு நன்றி சொல்லும் அவல நிலையும் அகலும்.


## நாட்டார் பாடல்..

யாவும் படிப்போருக்கும் கேட்போருக்கும் இன்பம் பயப்பனவாய் கிராமிய இலக்கியத்தின் புகழ் பரப்பும் சின்னங்களாய் மதிக்கப்படுகின்றன.

கிராமிய இலக்கியங்கள் உலகம் உள்ளளவும் வைத்துப் பாதுகாக்கப்படவேண்டிய ஒப்பற்ற பொக்கிஷங்களாகும். இன்றைய நிலையில் இவற்றை அறிஞர்கள் பாதுகாக்க முற்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். ஆனால் சிலர் கிராமிய இலக்கியம் என்ற தலைப்பில் சங்ககால இலக்கியச் சொற்கள் அடக்கிய பாடல்களை மிகத்துணிவுடன் எழுதுகின்றனர். வேறுசிலர் உண்மையான கவிதைகளின் கழுத்தை நெரித்து வேறு சொற்களையும், அடிகளையும் சேர்த்துக் கவிதையை மாற்றியமைப்பதுடன், சோகம், வீரம், இரங்கல், அறம் என்பன போன்ற பாடல்களைக் காதற்பாடல்களாக மாற்றியும் எழுதுகின்றார்கள். இத்தகையோர் கிராமிய இலக்கியத்தின் தனித்தன்மையை அறியாதவர்களே! இந்த நிலை நீடிப்பின் கிராமிய இலக்கியமும் அழிந்தொழிந்துவிடும் என்பதிற் சிறிதும் சந்தேகம் இல்லை. எனவே இத்தகைய இழிவுகளுக்குச் சாவு மணி அடித்து இனியும் இந்நிலை தங்காது விரட்டிவிடுவதுடன் நவரசங்களும் ததும்பும் கிராமிய இலக்கியத்தின் இன்சுவையைப் பலரும் படித்துக் கேட்டுச் சுவைத்து இன்ப வெள்ளத்தில் மூழ்க அறிஞர் பெருமக்கள் மேலும் அருள் நோக்கம் செய்து கிராமிய இலக்கியத்தின் தனிப்பெருமையை உலகம் போற்ற செய்யலாம்.

# குறுநாவல்

# வன்னி மண்



வ.ந. கிரிதரன்

எங்கும் தனிமை பரவிக்கிடக்கின்றது. இரவு கவிந்து தூங்கிக் கிடக்கின்றது. இன்று அவ்வளவு பிஸியாக இல்லை. விரிந்திருக்கும் வானில் வழக்கம் போல் நட்சத்திரங்கள்.... இருளை ஊடறுத்தபடி தொலைவில் 'பியர்சன்' விமானநிலையத்தை நோக்கிச் செல்லும் விமானமொன்றின் சிமிட்டல்.... சொந்த மண்ணில் மீண்டும் போர்மேகங்கள்... இந்த நிலை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் தொடரப் போகின்றது. இதற்கொரு முடிவு என்று தான் கிடைக்கப் போகின்றது. என் நிலை எனக்கே சிரிப்பைத் தருகின்றது. வெறுப்பையும் தருகின்றது. திரிசங்கு நிலை என்பது இது தான். இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல், இடையில் கிடந்து உழன்று முடிவதுதான் கடைசியில் கண்ட மிச்சமோ? சொந்த மண் தந்த திருப்தியை புகுந்த மண் தரவில்லைதான். இந்த மண்ணுடன் என்னால் பூரணமாக ஒட்ட முடியவில்லைதான். எந்தப் பிரச்சினைகளை வெறுத்து ஏற்க முடியாமல் பிறந்த மண்ணில் போராட்டம் வெடித்ததோ அந்தப் பிரச்சனைகளெல்லாம் இந்த மண்ணில் ஆழமாக வேரூன்றிப் போய்க் கிடக்கின்றன. அவற்றுடன் இன்னுமொரு விடயம் அதிகமாகச் சேர்ந்து போய்க் கிடக்கின்றது. நிறப் பிரச்சினை. இங்கு வாழ்வின் முக்கியமானதொரு பிரச்சினையாக நிறம் இருக்கின்றது. நிறத்தை வைத்து மனிதர்களை எடைபோடும் பழக்கம்... அங்கு தான் வாழ முடியவில்லையென்றால் ....இங்கும் தான் வாழ முடியவில்லை. திருப்தியாக வாழ முடியவில்லை. ஒரு காலத்தில் சுதந்திரமாக துள்ளித் திரிந்த மண்ணின் சுதந்திரமும் பறிபோய் விட்டது. இன்னொருமுறை அதே மாதிரி துள்ளிக் குதித்துத் திரிய முடியுமா? மூலைக்கு மூலை குறி பார்த்தபடி துப்பாக்கிகள் பலவிதமான துப்பாக்கிகள்.... பல விதமான எஜமானர்கள். புதிய சப்பாத்துக்களின் கீழ் புதிய எஜமானர்களின் கீழ் பழையபடி ... சுற்றிச் சுற்றி சுப்பற்ரை கொல்லை தான். வாழ்க்கையே ஒரு வகையில் பாலையில் தொடரும் போலிருக்கின்றது. தொலைவில் தெரியும் கானல்களை எண்ணி எண்ணிக், கனவு கண்டு கண்டு, செல்ல வேண்டியதாகிவிட்டது. ஒவ்வொரு முறை நெருங்கியதும் தான் தெரிகின்றது கானலென்று. மீண்டும் பழையபடி நம்பிக்கைகளைக், கனவுகளை கற்பனைகளைச் சுமந்து கொண்டு பயணத்தைத் தொடங்க வேண்டியிருக்கின்றது.ஒரு காலத்தில், நான் எழுதிய உரைவீச்சொன்றில் ஞாபகம் வருகின்றது அப்பொழுதுதான் எழுதத் தொடங்கியிருந்தேன்.

நாளையென்ற வசந்தத்தை நாடி
எங்கள் பயணம்
வாழ்க்கை பாலையினூடு
தொடர்கின்றது.
துன்பப் புயற்காற்றுக்களால்
எங்கள் தேகங்கள்
சீர் குலைந்து
துவண்டு விட்டபோதும்
உறுதி குறையவில்லை.
கானல் நீர்களைக் கண்டு
கண்டு எங்கள்
கண்கள்
பூத்து விட்டபோதும், கண்
பார்வையின் ஒளி
பூத்து விடவில்லை
நம்பிக்கைக் கோல் பற்றி
இனியும் தொடரும்
அந்த வசந்தத்தை நாடி.

இதுதான் அந்தக் கவிதை இது கவிதையா? வெறும் வசனக் கோர்வையா? எதுவாகயிருந்தாலும் எதற்கும் சலிக்காத, தோல்விகளால் தயங்கி விடாத எனது இன்றைய மனப்போக்கை அன்றே கொண்டிருந்தேன் என்பதை இக்கவிதை எனக்கு உணர்த்துகின்றது. வாழ்க்கையைப் பாலையாகவும், நிறைவேறாத ஆசைகள், சம்பவங்களைக் கானல்களாகவும் பார்த்துத் தொடர்ந்தும் எண்ண ஓட்டங்களில் பயணம் செய்யும் பண்பை அன்றே என்னையறியாமல் நான் வளர்ந்து விட்டிருந்தேன். அதனால்தான் என்னால் பிரச்சினைகளிற்கு மத்தியிலும் வாழ்க்கையை இன்பமாகக் கழிக்க முடிகின்றது. இன்றைய இந்தத் திரிசங்கு நிலை வாழ்க்கையிலும் சில நம்பிக்கைகள் எண்ணங்கள் தான் எவ்விதம் வாழ்க்கையை இழுத்துச் செல்ல உதவுகின்றன. சிலவேளைகளில் சாண் ஏற முழம் சறுக்கத்தான் செய்கின்றது. அதனால் சோர்ந்து தளர்ந்து விடாமல், சறுக்குவது மீண்டும் ஏறுவதற்கே, முன்னைவிட முனைப்புடன் ஏறுவதற்கே என்ற போக்கினை இத்தகைய எண்ணங்களே தருகின்றன.

இன்றைய போர்மேகங்களிற்கு மத்தியிலும் சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்று தெரிவதும் இதனால் தான் மனித வாழ்க்கை என்பது எத்தனையோ பல லட்சக்கணக்கான ஆண்டுகளைக் கொண்ட வரலாற்றை தன்னகத்தே அடக்கி விட்டிருக்கின்றது. இதில் எங்களது காலகட்டம் சிறிய அற்பமான கணத்துளி மாற்றமென்பது தவிர்க்க முடியாத நியதியாகத்தானே

தெரிகின்றது. சொந்த மண்ணின் வரலாறு மீண்டும் ஒருமுறை சுழலத்தான் போகின்றது. மீண்டுமொரு முறை சுந்திரமாக ஆடிப் பாடித் திரியத் கூடிய நிலை எம் மண்ணில் ஏற்படத்தான் போகின்றது. துப்பாக்கிகளின் ஆதிக்கம் ஒழிந்த நிலை.... இயற்கையை எவ்வித அச்சமுமற்று ரசித்துத் திரியும் நிலை... எந்தவித இனம் பாகுபாடுகளுமற்று கூடித் திரியும் நிலை....

மீண்டுமொரு முறை வன்னிக் காடுகளில் ஓடித்திரிய வேண்டும் போலிருக்கின்றது. துள்ளிப் பாயும் மர அணில்களை, உயரத்தே பறக்கும் ஆலாக்களை, ஓய்வு ஒழிச்சலற்ற ஊர்லாத்திகளை, ஆட்காட்டிச் சந்தேக ராமன்களை, நயவஞ்சகமான சுடலை நரிகளையெல்லாம் மீண்டுமொரு முறை பார்த்து மெய்மறந்து திரியவேண்டும் போலிருக்கின்றது. எந்தவித அச்சமுமற்று, சஞ்சலமற்று, இன்பமாக பரவசமாக ஆடிப்பாட வேண்டும் போலிருக்கின்றது.

சுமணதாஸ பாசுடன் திரிந்த அந்த நாட்கள்.... அந்த பெல்ட்டும், சறமும், குடுமியும், சிரிப்பும்... குழந்தையாகி விளையாடும் சுமணதாஸ பாஸ்.... வேட்டையாடும் சுமணதாஸ பாஸ்... எதற்கும் சஞ்சலப்படாது சிரிக்கும் சுமணதாஸ பாஸ்.....


'தவளைக் குஞ்சுகள் என்ன விநோதம்....' காதில் இன்னமும் சுமணதாஸ் பாஸின் மழலைத்தமிழ் கொஞ்சுகின்றது. நினைவுக் குருவிகள் சிறகடித்துப் பறக்கின்றன பின்னோக்கிப் பறக்கின்றன. ஐன்ஸ்டைனின் காலம் சார்பானது என்பதை அறிந்து கொண்ட நினைவுக் குருவிகள் அதனால் தான் இவற்றால் பின்னோக்கியும் பறக்க முடிகின்றன.

உண்மையிலேயே சுமணதாஸ பாஸ் முற்போக்கானவர்தான். பெருந்தன்மையானவர் தான் அவர் தனது மனைவி நந்தாவதிமேல் உயிரையே வைத்திருந்தார். நந்தாவதி நல்ல வடிவு, ஆனால் நிரந்தர நோயாளி, தொய்வுக் காரி, நந்தாவதிக்கு சுமணதாஸ பாசைக் கட்டுவதற்கு முன் ஏற்கனவேயொரு தொடர்பிருந்தது. சின்ன வயதிலேயே நம்பிக் கெட்டிருந்தாள் வயிற்றில் சுமையுடன் கைவிடப்பட்டிருந்தவளை சுமணதாஸ பாஸ்தான் காப்பாற்றியிருந்தார். அதன் விளைவு தான் மல்லிகா. மல்லிகாவைச் சொந்த மகளாகவே வளர்த்து வந்த சுமணதாஸ பாஸின் பண்பு இன்று நினைக்கும் போது கூட ஆச்சர்யத்தைத் தருகின்றது. தேவையற்ற சந்தேகங்களால் எத்தனை குடும்பங்கள் சீரழிந்து விட்டிக்கின்றன. சுமணதாஸ பாசைப் பொறுத்தவரையில் மனைவியைச் சந்தேகித்ததுமில்லை, குறை வைத்ததுமில்லை. மல்லிகா பெரிய பிள்ளையானபோது எவ்வளவு ஆரவாரமாக அதனை நடத்தி வைத்தார். மூன்று நாட்களாகக் கொண்டாட்டம் எங்களிற்கோ கும்மாளம் பழைய கிராமபோன் ரெக்கார்ட் பிளேயரும், ஸ்பீக்கரும்... சிங்கள தமிழ்ப் பாட்டுக்களை ஒலிபரப்பியது அப்பகுதிமக்கள் அனைவரையுமே அவர் வீட்டிற்குக் அழைத்துவிட்டது. அந்த வயதில் எனக்குப் பிடித்த பாடலிலொன்று தமிழுக்கு அமுதென்று பேர்... பஞ்சவர்ணக்கிளி படத்தில் கே. ஆர். விஜயா பாடுவதாக வரும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பாடல் இந்தப் பாட்டைக் கூட சுமணதாஸபாஸின் வீட்டில், மல்லிகா பெரியபிள்ளையாகிவிட்ட சடங்கின் போது ஒலி பரப்பினார்கள் ஆச்சரியமாகயிருக்கிறதா ஒரு சிங்களவரின் வீட்டில் இப்படியொரு பாடலைக் கேட்க முடிந்த காலமொன்று கூட இருக்கத்தான் செய்ததா? இருக்கத்தான் செய்தது.

பாரதிதாசன் என்றதும் தான் ஞாபகம் வருகின்றது.. பாரதியார்! அப்பா ஒரு புத்தகப் பைத்தியம் அம்புலி மாமாவிலிருந்து கல்கி, விகடன், கலைமகள், தினமணிக்கதிர் தொடக்கம் தினகரன், ஈழநாடு, வீரகேசரி, சுதந்திரன் என்று சகலவற்றையும் வாங்கிக் குவித்தார். அம்புலிமாமாதான் நான் முதன் முறையாக வாசிக்கத் தொடங்கிய இதழ். 'மண்டுக்கோட்டை மந்திரவாதியும் கானகச்சிறுவனும்' நான் விரும்பி வாசித்தவை. வேதாளம் சொன்ன கதையில் இடையில் வரும் கதையை மட்டும் விரும்பி வாசிப்பேன். ஆரம்பத்தில் சற்றும் மனந்தளராத விக்கிரமனைப் பார்த்து வேதாளம் எள்ளி நகைப்பதும், இறுதியில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொள்வதும் எனக்குப் பிடிப்பதேயில்லை. வேதாளம் இரவு நேரங்களில் ஒருவித பயத்தினையும் அருவருப்பையும் தருவதால் அப்பகுதியை இரவுகளில் நான் தொடுவதில்லை. அந்தச் சமயத்தில் தான் எங்கள் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த மாணவனொருவனை நள்ளிரவில் 'முனி' அடித்துக் கொன்று விட்டிருந்தது. 'ஒன்றுக்'கிருக்க வெளியில் போனவன் மூக்காலும் வாயாலும் இரத்தம் வரச் செத்துப் போயிருந்தான். இது முனியின் வேலையில்லை. இரத்தக் காட்டேரியின் வேலைதான்' என்றும் சிலர் கூறிக்கொண்டார்கள்.

அப்பா எங்களிற்கென்று குடும்பத்திற்கென்று சில புத்தகங்கள் வாங்கி வந்தார். பாரதியார் பாடல்கள், ராஜாஜியின் வியாசர் விருந்தும் சக்கரவர்த்தித் திருமகனும், இது தவிர சிலப்பதிகாரம் மணிமேகலை. இவையெல்லாம் வீட்டில் எந்த நேரமும் இருக்க வேண்டிய புத்தகங்களென்பது அப்பாவின் எண்ணம். வியாசர் விருந்தும் (மகாபாரதம்) சக்கரவர்த்தித் திருமகனும் (இராமாயணம்) தமிழ் மக்களின் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய இரு பெரும் இதிகாசங்கள் என்று அடிக்கடி அப்பா கூறுவது வழக்கம். அடுத்தது ஐம்பெருக்காப்பியங்கள் சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்றவை கிடைக்காததால் கிடைத்த சிலப்பதிகாரம், மணிமேகலையை வாங்கித் தந்தார். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்க் கவி பாரதியும் முக்கியமான தமிழ்க்கவி என்பது அப்பாவின் உறுதியான எண்ணம். அம்மா நல்லாப் பாடுவா ஏன் அப்பாவும் தான் இருவரும் சேர்ந்து மிஸியம்மா படத்தில் வரும் பாடலென்று நினைக்கின்றேன். 'பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' என்ற பாடலைப் பாடக் கேட்டிருக்கின்றேன்.

தொடரும்



ராஜேஸ்வரி

பாலசுப்பிரமணியம்

# "அரை குறை அடிமைகள்"

ராமநாதனின் தகப்பன் ரத்தினபுரியில் அப்போது ஆசிரியராக இருந்தார். ராமநாதனின் குடும்பம் ரத்தினபுரியிலிருந்தது. கலவரம் தொடங்கியதன் பிரதிபலிப்பு ரத்தினபுரி எங்கும் தெரிந்தது.

சிங்களக் காடையர்கள் பயங்கர ஆயுதங்களுடன் தமிழர்களின் வீட்டைத் தேடி ஆவேசத்துடன் திரிந்தார்கள். தேடியலைகிறார்கள், இந்தியத் தமிழர்களைத் தேடவில்லையே என்று ஆறுதலுடன் ராமநாதன் குடும்பம் பக்கத்திலுள்ள தோட்ட பகுதிக்குத் தஞ்சம் புகுந்தார்கள்.

ஆனால் அங்கு கண்ட பயங்கரக் காட்சி. ..சண்முகலிங்கம் லண்டனுக்கு வர முதல் ராமநாதன் இலங்கையில் தமிழரின் நிலைப்பற்றி கதைத்தான். தான் அனுபவித்த கண்ணால் கண்ட கோரக் காட்சிகளை விபரித்த போது பிணங்களையும் இரத்தத்தையும் தொட்டு அளையும் சண்முகலிங்கத்தின் உடம்பே பயத்தால் சிலிர்த்தது.

இலங்கையின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பானவர்கள் இந்திய வம்சா வழியினரான தமிழ்த் தோட்டத் தொழிலாளிகள். ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலையோ அகில உலகமும் அறிந்த கீழ்த்தரமான நிலையானது. கடந்த நூற்றி ஐம்பது வருடங்களாக இலங்கை அரசாங்கத்தால் அரை குறையடிமைகளாக நடத்தப் படுபவர்கள் அவர்கள்.

அவர்களுக்கு எந்த விதமான உரிமையுமில்லை. அடிப்படை மனித உரிமைகள் கூட சிங்கள அரசாங்கத்தால் பறிக்கப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. அவர்களின் உடம்பைத் தவிர இலங்கைப் பொருளாதாதாரத்திற்கு அத்தியாவசியமான முதுகெலும்புகள் சிங்களக் காடையர்களால் உடைக்கப்பட்டன.

தொழிலாளர்களின் மனைவிகள் மக்கள் மானபங்கப் படுத்தபட்டார்கள். உலகத்தில் இதுவரை எந்த நாட்டிலும் நடக்காத கோரமான கேவலமான விதத்தில் இந்திய வம்சாவழித் தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள் எட்டு வயது இளம் இந்தியச் செல்விகளின் பெண்மை மிருக வெறி பிடித்த சிங்களக் காடையர்களால் துவம்சம் செய்யப்பட்டழிந்த கொடுமையை ராமநாதன் நேரில் கண்டான்.

இரத்தினபுரியில் வீடுவாசலிழந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தபோது தான் ராமநாதனுக்கு சண்முகலிங்கத்தின் சினேகிதம் கிடைத்தது. மெடிகல் கொலிஜ் விடுமுறைகளுக்குப் போயிருந்தபோது சண்முகத்தின் சினேகிதன் ஒருத்தனின் சினேகிதத்தின் மூலம் ராமநாதன் பழக்கமானான். முதல் நாளே ராமநாதனைச் சண்முகலிங்கத்துக்குப் பிடித்துக் கொண்டது. சண்முகலிங்கத்துக்குக் கவிதைகளிலும் கலைகளிலும் அவ்வளவு ஈடுபாடு இல்லாவிட்டாலும் ராமநாதனின் கவிதைகளை ரசித்துப் படிக்குமளவுக்கு ராமநாதன் தன் கருத்துக்களையும் சிந்தனைகளையும் தன் கவிதைகளால் புகுத்தியிருப்பான்.

கவிதையில் தொடங்கிய கதை சிலவேளை அரசியலில் வந்து முடியும் இலங்கையில் தமிழரின் நிலைபற்றிக் குமுறுவான் ராமநாதன்.

"ஒரு அரசாங்கம் வந்தால் தமிழரின் பிரச்சினை தீரும்" என்று சொன்னான் சண்முகலிங்கம்

"தமிழரின் உரிமைகளை ஆதரிக்கும் தைரியத்துடன் எந்த விதமான சிங்களக் கட்சியும் பதவிக்கு வரமுடியாது. எவன் தமிழனை நசுக்குவதிலும் தமிழ் இனத்தை இலங்கையிலிருந்து அழிப்பதற்கும் அதி தீவிர நடவடிக்கை எடுப்பேன் என்று சிங்கள மகா சனங்களிடம் வாக்குக் கேட்கிறானோ அவன் தான் இலங்கைப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறான். தமிழரை இலங்கையிலிருந்து அழிப்பது தங்கள் புத்த தர்மம் இட்ட கட்டளை என மனப் பூர்வமாக நினைப்பவர்கள் சிங்கள அரசியல் வாதிகள் அவர்களை ஆட்டிப் படைப்பவர்கள் புத்த மதவெறியும் சிங்கள மொழிவெறியும் கொண்ட புத்த மதத் தலைவர்கள் இவர்கள் கையில்தான் இலங்கைச் சனநாயக தர்மம் விலங்கு பூட்டப்பட்டுச் சிறைவைக்கப் பட்டிருக்கிறது அந்த விலங்கு உடைபடாதவரை இலங்கைத் தமிழருக்கு வந்த விமோசனமுமில்லை" ராமநாதன் பெருமூச்சுடன் சொல்வான்.

சண்முகலிங்கம் கொழும்புக்குத் திரும்பி வரும் வரை திருப்பித் திருப்பி இதையே கதைப்பார்கள். தமிழர்கள் அடிப்படை உரிமைகளையிழந்து அல்லறுவதுபோல் சிங்கள மக்களிடையேயும் தங்கள் அரசியல் பொருளாதார உரிமைகளை யிழந்து துயர்படும் எத்தனையோ ஆயிரம் பேரிருக்கிறார்களே ஏன் இரு தரப்பாரும் ஒன்று பட்டு தங்கள் அடக்கு முறைக்கு எதிராகப் போராடக் கூடாது? சண்முகலிங்கம் இது பற்றி எத்தனையோ தரம் யோசித்திருக்கிறான்.

சோசலிசத்தையும் நாட்டு ஒற்றுமையையும் பற்றி தொண்டை கிழியக் கத்தும் இடது சாரிகள் ஏன் இந்த அடிப்படைப் பிரச்சினைகளை மறந்துபோய் அரசியல் புரட்சி கத்துகிறார்கள் என்பதும் அவனுக்கு விளங்காது......

ஒர்தோபீடிக் வார்ட்டுக்கு எட்டாம் மாடிக்குப் போக வேண்டும்.

"லிப்ட்" வரும் வரை காத்திருந்தான் சண்முகலிங்கம் வார்ட்டுக்குப் போக லிப்ட் வரும் போகலாம்.

தமிழர்களின் எதிர்காலத்துக்கு உத்தரவாதமிருக்கிறதா அவன் திரும்பிப் போவதற்கு? அக்காவை ஏயார் போர்ட்டிலிருந்து கூட்டிக் கொண்டு வரும் போது அக்கா இதைத்தான் சொன்னுள்.

"தம்பி சிங்களக் காடையர்களால் வெறிநாய்கள் போல் தமிழர்களை வேட்டையாடித் திரிகிருர்கள். தயவு செய்து திரும்பி வராதே" அவள் தன் குடும்பத்தில் பெரும்பான்மையானவர்களையிழந்த துன்பத்தில் பொருமினுள்.

"அக்கா இது என் தாய் நாடில்லே. எப்போதோ ஒரு நாள் நான் திரும்பத்தான் வரவேணும். வானத்துக்குக் கீழ் வீட்டைக் கட்டிவிட்டு மழைக்குப் பயப்படலாமா"

அவன் விரக்தியாகக் கேட்டான்.

அக்கா இவனைக் கண்டமாத்திரத்தில் ஒவென்று அழுதுகொண்டு சொன்ன பயங்கரச் செய்திகளை இவன் குமுறும் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கேட்டான். ஆடி மாதம் 24ம் திகதி கொழும்பில் தமிழர்களைக் கொலே செய்யத் தொடங்க முதலே யாழ்ப்பாணத்திலும் திருகோணமலேயிலும் நடந்த பாதகங்களைச் சொன்னுள்.

திருகோணமலேயில் ஒரு பஸ்சை நெருப்பூட்டி அதிலிருந்த தமிழர்களைக் கொழுத்தினுர்கள் சிங்களவர் என்பதை லண்டன் பத்திரிகையொன்றில் வாசித்திருந்ததை அக்காவிடம் கேட்டான்.

"அது மட்டுமா தம்பி செய்தார்கள் யாழ்ப்பாணத்தில் டியூட்டரிக்குள் புகுந்து தமிழ் பாடசாலே மாணவிகளையும் கடத்திக் கொண்டு போய் ராணுவ முகாம்களில் வைத்துக் கற்பழித்தார்கள் அதில் சம்பந்தப்பட்ட ராணுவத்தினரைத் தமிழர்கள் தாக்கிய படியால்தான் இலங்கையில் எல்லா இடங்களிலும் சண்டையும் அக்கிரமும் கூடியது." அக்காவுக்குத் தெரியாமல் எத்தனையோ நடந்திருக்கலாம். கொழும்பிலிருந்தவர்களுக்கோ கொழும்பில் என்ன நடந்தது என்று தெரியாதாம்.

ஊரடங்கு சட்டம் போட்டுத் தமிழரை வீடுகளுக்குள் இருக்கப் பண்ணி விட்டு ராணுவத்தினரும் காடையர்களும் வீடுகளுக்குள் புகுந்து தாக்கினுர்களாம். கொலே கற்பழிப்பு....... நடந்தவைகளை நினைத்தும் வருத்தப் பட்டும் என்ன பிரயோசனம் இனி என்ன செய்ய வேண்டும்? இலங்கையில் இப்போது தமிழருக்கு என்ன நடக்கிறது? இலங்கையில் தற்போது தமிழரின் நிலே என்ன?

அக்காவைப் பார்க்கப் போகவேண்டும். ஊரில் நடந்த விடயங்களை உற்ருர் உறவினர் பட்ட கஷ்டங்களைக் கேட்டறிய வேண்டும் என்று எத்தனையோ யோசனைகளுடன் லீவு எடுத்திருந்தான்.

இந்தப் புது நோயாளி வந்து எல்லாவற்றையும் கெடுத்து விட்டான். யாரிந்த மண்டைக் கனம் பிடித்த மடையன்? வெள்ளைக்காரனிடம் வாய்த் தர்க்கம் போடும் தைரியம் வெள்ளைக் காரருக்கு எண்ணெய் கொடுக்கும் அராப் காரரைத் தவிர யாருமிருப்பதாகச் சண்முகலிங்கத்துக்கு தெரியாது. பணமிருந்தால் பிணமும் பேசும் என்பார்களே

பணக்காரனு அல்லது பைத்தியக்காரனு?லிப்ட் எட்டாம் மாடியில் இவனை இறக்கி விட்டது

புரட்டாதி மாதம் இலேயுதிர்காலம் தொடங்கி விட்டது என்பதன் அறிகுறி கீழே மொட்டையாய்த் தெரியும் மரங்களில் தெரிகிறது.

எட்டாம் மாடிஜன்னலால் உலகத்தைப் பார்க்க ஏதோ பொம்மை நாடகம் பார்ப்பது போலிருக்கும்.

விளையாட்டுக் கார்களில் ஊர்ந்து திரியும் விளையாட்டு மனிதர்களை நினைத்துக் கொள்வான். இப்போது அப்படி ஒரு கற்பனையுமில்லே.

டெலிவிஷனில் காட்டிய இலங்கைத்தலேநகரமான கொழும்பு மனக்கண்ணில் தெரிந்தது. லண்டன் "ரைம்ஸ்" பிரசுரித்திருந்த ரேட்டில் உயிரோடு எரியும் தமிழ் மனித உடம்பு மனதில் படம் போட்டுக் குமுற வைத்தது.

பாதுகாப்பற்ற குழந்தைகள் பெண்கள், பாதுகாக்கப்படவேண்டிய நோயாளிகள் எல்லோரையும் ஈவிரக்கமில்லாமல் கொலே செய்தார்களாம்.

அக்காவின் மைத்துனரை குற்றுயிருடன் வைத்தியசாலேக்குக் கொண்டு போனபோது கொழும்பு பெரியாஸ்பத்திரியில் ஏற்க மறுத்து விட்டார்களாம். சிங்கள நோயாளிகளுக்கே உணவில்லே. "பறைத்தமிழனுக்கோ உணவும் பாதுகாப்புமோ" என்று துரத்தி விட்டார்களாம் அக்காவின் மைத்துனரின் குற்றுயிரை ஆஸ்பத்திரி ஊழியர்களே தாக்கிக் கொலே செய்தார்களாம்.

லண்டனில் ஆஸ்பத்திரியில் என்ருல் தான் விரும்பிய டொக்டரைத் தான் பார்ப்பேன் என்று அடம் பிடிக்கிருனும் யாரோ ஒரு அந்நியன்.

யாராயிருக்கும்?

வார்ட்டில் உடைந்த எலும்புகளை தூக்கிக் கட்டியபடி தோரணங்களாகவும் காவடிகளாகவும் கட்டில்களில் நோயாளிகள் படுத்திருக்கிருர்கள்.

மருமகள் கமலினியை சண்முகலிங்கம் மேலே யோசிக்கவில்லே.

எட்டு வயதுச் சிறுமிகளையும் விட்டு வைக்காத புத்த மதக் காடையர்களின் கையில் பருவப் பெண்ணுன கமலினியின் கற்பு......

அக்கா கதறியழுதாளாம். அடித்தார்களாம் உதைத்தார்களாம். உடம்பில் கிடந்த ஒவ்வொரு நகையையும் பறித்தும் பியத்தும் எடுத்தார்களாம். மாமியின் காதிலிருந்து தோடு கழட்டப்படவில்லே. பிய்த்தெடுத்தார்களாம். கண் தெரியாத மாமியின் காது அறுந்து தொங்குகிறது.

........."ஹலோ டொக்டர் சண்" அந்தப் புது நேர்ஸ் அழகாகச் சிரிக்கிருள். இவள்தான் தற்போது ஸ்ரீவனின் கேர்ள் பிரண்ட் என்று கேள்வி. இவள்தான் இந்த Week end முழுதும் வேலே செய்யப் போகிறவள் என்ருல் ஸ்ரீவன் என்ன பாடு பட்டும் வார்ட்டை வளைய வந்து கொண்டிருப்பானே.

"யாரந்தப் புது நோயாளி" எரிச்சலுடன் முனு முனுக்கிருன் சண்முகலிங்கம்.


"ஒ, போய்ப் பாருங்களேன். வேடிக்கையை" அவள் புது நோயாளியிருந்த அட்மிஷன் அறையை சுட்டிக் காட்டுகிருள்.

வெள்ளைக்கார இனத்தையே தூக்கியெறிந்து பேசிய மகா வீரனே யார்?

*அடுத்த வாரம் முடியும்...*

# இருட்டில் அழு(கு)ம் உடல்கள்

பவான்



ஆஸ்பத்திரி மணமென்ருல் அருவருப்பவர்களுண்டு. நானும் அவர்களாக இருந்த ஒரு காலமிருந்தது. இன்று பழ்க்கமாகப் பழசாகிப் போன மருந்து மணங்களும் மானிடரணங்களும்! மரத்துப் போனது நாசித்துவாரமும் மனித மணங்களும் என்னைப் போல கிழவனதும் குழந்தையதும் அழுகுரல்கள் ஒன்ருய் ஒலிக்கும் ஒரே இடம்! மாடிவீட்டுச் சீமானும் தெருவோரப் பிச்சைக்காரனும் பக்கத்துக் கட்டில்களில் சமரசம்! வெளியில் உலாவுதோ என்னவோ இங்கே படுத்திருக்கிறது. கண் வாய், மூக்கெனச் சிதைந்த மனித முகங்கள் இங்கே விகாரமாய் தெரிவதில்லை கால் கைகள் சிதைந்த, துண்டிக்கப் பட்டவர்கள் இங்கே நொண்டிகள் முடங்களில்லை. மற்றவனைப் பார்த்து தன் அங்கங்களை எண்ணிக்கொள்ளும் சுயதிருப்தி யாரையும் யாரும் பழக்கமுடியாத பரிதாபிக்கமுடியாத பரிநிர்வாணங்கள். இங்கே மீளப் பிறப்பெடுத்தவர்கள், வீட்டுக்குப் போனவர்கள், விதவையானவர் என நீளும் பட்டியலில் அரை, கால் முழு உயிர்களோடு வந்து உடல்களாய்ப் போனவர்களும் உண்டு.. வெளியிலே திரிகையில் தெரியாத இரத்தம் சதை, நிணநீர் என ஆன சேதன விலங்குடல் இங்கே வெளிப்படும். மைகள், ஆடைகள் அலங்காரமெல்லாம் கழுவப்பட்ட முழுநிர்வாணங்கள். மானுட சமூகம் தொட்டு எந்த இயலைக் கற்பவரும் இங்கு வந்து போனுல் கற்கையின் முழுமையைத் தரிசிக்கலாம். உலகம், உடம்பு, நிலையாமை, மாயையைச் சொல்வதற்கு ஞானிகளோ, தத்துவப் புத்தகங்களோ தேவையற்றவை. வாழ்க்கையின் முழுமையும் இங்கே தொட்டிலிலும் கட்டிலிலும் கிடங்கிலுமாக கொட்டிக் கிடக்கிறது. நாளுக்குக் குறைந்தது ஒரு மனிதப்பிணம் அப்புறப்படும். களைத்தது. சலித்தது, நலிந்தது மட்டுமல்ல போராடியது கனவ ,கண்டது, காத்திருந்தது. அவாவோடு அலைந்ததுடன் அன்று வந்தது அழுததோடு அன்றே இருப்பிளப் பவையுமுண்டு பார்க்கப்போனுல் துறவி, ஞானி, பரதேசியெல்லாம் இங்கிருந்து தான் புறப்படவேண்டும்.

இந்த உடலகளைக் கழுவித் துடைப்பவர்களும் அறுத்துத் தைப்பவர்களும் லௌகீகம் செய்கிருர்களென்ருல், முரண்பாடுகளில் பெரியது அது தான்.


இந்தத் தனி உலகத்தில் இவர்களோடு நானும், ஆரம்பத்தில் நிறையவே அழுதேன். கண்ணீர் காய்ந்த பின்னும் அழுதேன் சிதைந்து கிடந்த போது சாகப் போகிறேன் என்னைக் காப்பாற்றுங்கள் அழுதேன். மயக்கம் தெளிஞ்சு "என்ர கால ஏண்டா வெட்டினீங்கள்" எண்டு அழுதேன். இப்ப ஏண்டா என்னச் சாக்காட்டாம விட்டனீங்கள் எண்டழுகிறேன். அழுது கொண்டே பிறந்தனெண்டு அம்மா சொன்னுள், அப்புறம் அவள் முலைக்கு அழுதன், அதைத்தா இதைத்தா எண்டு பிடிவாதம் பிடிச்சழுதன், அடிச்சழுதன் அடிச்சு அழுவிச்சன், அசுத்தஞ் செய்து வயிறு வீங்கி மடி கிழிஞ்சு மார்பு நொந்து எனக்காய் சதைகள் தொங்கி அழகிழந்து கிழடியாகிக் குருடியானவள் பாடையில் போனபோது அழுதன். கூடக் குடலில் கிடந்து, தலையில் குட்டி, மண்ணில் சோறு கறி சமைச்சுத் தந்தவள், கழட்டி எறிஞ்ச மூத்திரக் கழுசானிலிருந்து வேர்வை நாறும் உள்ளாடையெல்லாம் கசக்கித் தோச்சு உலர்த்தித் தந்தவள் புரியாத மொழி பேசும் பச்சை விலங்குகளின், வாயிலும் கையிலும் காமத்தசை வெறியிலும் நிர்வாண உடல் கிழித்து கோடரியால் கொத்திக் கிடந்த போது அழுதேன். பெத்து வளர்த்தவனும் கூடப் பிறந்தவனும் விட்டுப் பிரிந்த போது நான் அழவில்லை.

ஒவ்வொரு காலத்திலும் என்னுடன் சேர்ந்து அழ ஒவ்வொருத்தர் இருந்தார்கள் இன்று எனக்காக அழ யாருமில்லை. என்னேடு அழவும் யாருமில்லை. முடவனுய் மூளியாய், உறவுகளற்ற. உணர்வுகள் அழிந்த இந்த ஜடத்துக்கும் கடந்த கால இனிய இம்சைகளின் நினைவுத்தடங்கள் உறக்கத்திலாவது தட்டுப்பாடமலில்லை.

அந்த நிலாமுற்றம், பாட்டி மடி, ஓழிச்சுப்பிடிச்சு, ஒரு மினிபஸ் நிறைய குடும்பமே கதிர்காமம் போனது, அங்கு புரியாத மொழியில் பேசியவர்கள் என்னை பார்த்து சிரித்ததும், அப்பாவும் அவையளோட அவையள் மாதிரி சிரிச்சுக்கதைத்ததும் பொட்டயளப் பத்தித்தானே கதைச்சனீங்களென்று அம்மா அப்பாவைக் கோவிச்சதும், சிவனெளிபாத மலையில் பண்டாமாமா குடும்பத்தோட சுத்திப் பாத்து, அவையள் கொண்டு வந்த பெரிய பெரிய துண்டுகள் போட்ட பண்டியிறைச்சிக்கறியும் சோறும் சாப்பிட்டதும், காப்பி சாப்பிடுங்க எண்டு பண்டா மாமி சுடுதண்ணிப் போத்தலிருந்து தேத்தண்ணி ஊத்தித்தந்ததும், தொப்பியும் முக்காடும் போட்ட கன ஆம்புளயளும் பொம்புளயளும் சந்தோசமான எங்களுக்குப் பக்கத்திலிருந்து சாப்பிட்டதும் சின்னவனுய் இந்த ஆஸ்பத்திரியில் இருந்த போது சிற்றி பேக்கறியில் அப்பா வேண்டித் தந்த ஸ்பெஷல் பாணும் இன்னுமின்னும் பழஞ்சோறும் பழங்கறியும், முற்றத்து முல்லைமரமும் கொல்லைப்புற கறுத்தக் கொழும்பானும், அம்மா அவிச்சுத்தந்த பனங்கிழங்கும் இன்னமும் வந்து போகிறது பகலில் தூங்கும் போதாவது.

...

# ஃபாக்ஸ் இயந்திரங்கள்....



விஞ்ஞானப்பிரகாசன்

ஒரு காலத்தில் யாருமே கேள்விப்பட்டிராத ஃபாக்ஸ் இயந்திரங்கள் எனப்படும் தொலைநகல் இயந்திரங்கள் தற்போது பலராலும் பயன்படுத்தப்படுகின்றன. படங்கள், பத்திரங்களை உடனுக்குடன் அனுப்புவது குறித்து வாயைப் பிளந்திருப்பீர்கள்.

Facsimile என்ற பெயரின் சுருக்கமே Fax. இது எப்படி செயற்படுகிறது என்பது பலருக்கு மர்மமானது. அப்படி ஒன்றும் பெரிதான விடயம் அல்ல அது. போட்டோக்கொப்பி இயந்திரம் கண்டிருப்பீர்கள். இதில் இரண்டு கருவிகள் உள்ளன. ஒன்று Scanner எனப்படும் கருவி.. இது உங்கள் பத்திரத்தைப் படம் பிடிப்பது.. மற்றது Printer.. இது படம் பிடித்ததை அச்சிடுவது... இதைப் போன்று படம் பிடிப்பதுவும் அச்சிடுவதும் ஒரே இடத்தில் இல்லாமல் இரண்டும் தொலைபேசி மூலம் இணைக்கப்படுவது தான் ஃபாக்ஸ். அதாவது உங்கள் இயந்திரத்தில் உள்ள ஸ்கனரில் பத்திரத்தை வைக்க.. அது படம் பிடித்து தொலைபேசி இணைப்பு மூலமாக மற்ற இயந்திரத்துக்கு அனுப்பி அங்கே அச்சிடுகிறது. இதற்காக விசேட வகை காகிதம் பயன்படுத்தப்படுகிறது. இது Thermal paper எனப்படும். இதில் எந்த விதமான மையோ, பவுடரோ பாவிக்கப்படுவதில்லை. தற்போது சாதாரண காகிதத்தில் அச்சிடக் கூடிய "டயயஉேிநச கயஓ இயந்திரங்கள் வந்து விட்டன.

தொலைநகல் ஒன்றும் புதிய கண்டுபிடிப்பு அல்ல. 1842 இல் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த அலக்சாண்டர் பெய்ன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. நீர், சல்பூரிக் அமிலம், பொட்டாசியம் போன்றன பூசப்பட்ட கடதாசியில் மின்சார ஏற்றங்களை செலுத்துவதன் மூலம் படம் தொலைபேசி இணைப்புகளால் அனுப்பப்பட்டது. பின்னர் 1855 இல் பாரிஸிலிருந்து மற்ற நகரங்களுக்கு வர்த்தக தொலைநகல் இணைப்புகள் உருவாக்கப்பட்டன. 1905 இல் வானொலி அலைகள் ஊடாக படங்கள் அனுப்பப்பட்டன. 1922 இல் பிரான்சிலிருந்து நியூ யோர்க்கிற்கு முதன் முதலாக படம் அனுப்பப்பட்டது.

நாளடைவில் புதிய திறன்களைக் கொண்ட இயந்திரங்கள் உருவாகின. புதிதாக தொலைநகல் வாங்கினால் இலங்கையில் உள்ளது போல, விசேட அனுமதிப் பத்திரம் மேற்கு நாடுகளில் தேவையில்லை. அதற்கு தனியான தொலைபேசி இணைப்பு அவசியமேயில்லை. சாதாரண தொலைபேசி இணைப்பிலேயே பொருத்தி பயன்படுத்தலாம். தற்போதைய கருவிகள் மனிதக் குரல்களையும் பாக்ஸ் சமிக்ஞைகளையும் அடையாளம் காணக்கூடியன. ஆனாலும் தங்கள் தொலைபேசிகளில் call waitin உள்ளவர்களுக்கு ஃபாக்ஸ் வந்தால், இடையில் யாராவது அழைக்கும் போது ஃபாக்ஸ் செயற்பாடு நிறுத்தப்படுகிறது. இதைத் தவிர்க்க, யாருக்காவது ஃபாக்ஸ் அனுப்பும் போது #70 என்ற இலக்கத்தை அழுத்திய பின்னர் நீங்கள் அனுப்ப வேண்டிய இலக்கத்தை அழைப்பது மூலம் இந்த சிக்கலை தவிர்த்துக் கொள்ளலாம். ஆனால் யாராவது உங்களுக்கு ஃபாக்ஸ் அனுப்பிக் கொண்டிருக்கும் போது இடையில் யாராவது அழைத்தால் நிச்சயம் ஃபாக்ஸ் இணைப்பு தடைப்படும்.

ஃபாக்ஸ் வாங்கும் போது அவதானிக்க வேண்டிய அதன் திறன்கள் என்ன?

முதலாவது அதன் வேகம்... அதிவேகமான இயந்திரங்கள் குறைவான நேரத்தில் பத்திரங்களை அனுப்பும். இதனால் தொலைதூர தொலைபேசிக் கட்டணங்கள் குறைவாக இருக்கும். Half tone/ Grey Scale திறன்கள் என்பன இருப்பின் படங்களை அனுப்பும் போது தெளிவாக இருக்கும். Delayed Transmission திறன் இருந்தால், குறித்த ஒரு நேரத்தில் பத்திரங்களை அனுப்பும்படி இயந்திரத்தை program செய்ய முடியும். குறிப்பாக இரவு நேரங்களில் தொலைதூர தொலைபேசிக் கட்டணங்கள் குறைவாக இருக்கும் போது அனுப்பும்படி பகலிலேயே program செய்து விட்டு நீங்கள் வேறு வேலைகளைக் கவனிக்க, குறித்த நேரத்தில் இயந்திரம் செயற்பட்டு பத்திரங்களை அனுப்பும். Auto dial திறன் இருந்தால் அடிக்கடி அழைக்கும் இலக்கங்களை ஞாபகத்திறனில் வைத்து வெறுமனே ஒன்றிரண்டு இலக்கங்களை அழுத்துவதன் மூலம் தொடர்பை ஏற்படுத்த முடியும். Broadcast திறன் இருந்தால் ஒரு பத்திரத்தை பலருக்கு அனுப்ப வேண்டியிருந்தால், ஒரு தடவை பத்திரத்தை இயந்திரத்தினுள் செலுத்திய பின்னர், அழைக்க வேண்டிய இலக்கங்களை ஞாபகத்திறனில் வைத்து செலுத்தி விட்டால் தானாகவே அனைத்து இலக்கங்களையும் அழைத்து இந்த பத்திரத்தை அனுப்பும். Auto paper cutter திறன் இருந்தால் பத்திரங்களை நீங்கள் பெறும் போது முடிவில் இயந்திரமே பத்திரத்தை வெட்டித் தரும். Memory திறன் உள்ள இயந்திரங்கள் உள்ளே paper roll முடிந்து போனால் ஞாபகத்தில் வைத்து பின்னர் அச்சிடும்.

(பத்திரிகை தொடங்கும் எண்ணமுள்ளவர்களுக்காக..) Polling திறன் இருப்பின் நீங்கள் இன்னொரு இலக்கத்தை அழைத்து அங்கிருந்து பத்திரங்களை பெற முடியும். இதனால் தொலைபேசிக் கட்டணத்தை நீங்களே செலுத்துவீர்கள். எனவே சஞ்சயனுக்கும் அஞ்சயனுக்கும் Polling உள்ள இயந்திரங்களை வாங்கிக் கொடுத்தால், யுத்த முனையிலிருந்து நேரடியாகவே அவர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்ணன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

## தமிழாக்கம்; செ. லோகநாதன்

### ஜேவிபி மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில்

லயனல் போபகே ஜேவிபி யிலிருந்து இராஜினாமா செய்வதற்கு முன் படிப்படியாக வேலைகளிலிருந்து ஒதுங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் பலமாதகாலமாக மௌனம் சாதித்து வந்த ஜேவிபி மீண்டும் அரசியல் வேலைகளில் அடிஎடுத்து வைக்கிறது. "ஜேவிபி மீதான தடையை நீக்கு" என்னும் போஸ்டர்களை ஒட்டியதன் மூலம் தாம் மீண்டும் அரசியலில் ஈடுபடுவதை நாட்டுக்கு வெளிக் காட்டினர். ஜேவிபி இரகசியமாக அரசியல் வேலைகளைச் செய்ய ஆரம்பித்ததோடு அதன் தொழிற்சங்க பிரிவைச் சார்ந்த ஊழியர்கள் அகில இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் என்னும் பெயரில் செயல்பட்டனர். இத் தொழிற்சங்க சம்மேளனம் "மாலிமா" (திசை காட்டி) என்னும் பெயரில் பத்திரிகை யொன்றையும் வெளியிட்டது. தடைசெய்யப்பட்ட கட்சி உடம்பு இரகசியமாக செயல்படும்போது ஜேவிபியின் ஒரே ஒரு அவயவமான தொழிற் சங்க சம்மேளனம், அச்சம்மேளனத்துடன் இணைந்திருந்த தொழிற்ச சங்கங்கள் 'மாலிமா' பத்திரிகை மட்டுமே வெளிப்படையாக செயல்பட்டது. கட்சி தடைசெய்யப'பட்டிருந்த போதிலும் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் மேதினம் நடாத்தும் நிலமைக்கு அவர்கள் தமது சக்தியை ஒன்று திரட்டியிருந்தனர்.

அரசியல் வேலைகளை மீண்டும் 1984 ல் ஆரம்பிக்கும் போது தற்காலிக அரசியல் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. றோகன விஜேவீர, கமணநாயக, சுமித் அத்துகோரால, பியதாச ரணசிங்க, குணரத்ன வனசிங்க, P.R.B. விமலரத்ன, நந்த திலக கலப்பதி ஆகிய ஏழுபேருமே இத்தற்காலிக அரசியல் குழுவின் உறுப்பினர்களாவர்.

முன்னர் 11 அங்கத்தவர்களைக் கொண்டிருந்த மத்திய கமிட்டிக்கு 1984 ல் மேலும் புதிதாக 20 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டு மத்திய கமிட்டி அங்கத்தவர் எண்ணிக்கை 31 ஆக உயர்த்தப்பட்டது. 1984ம் ஆண்டு மே மாதம் அளவில் அரசியல் குழு, மத்திய கமிட்டி இரண்டையும் சார்ந்த 38 பேரைத் தவிர 314 முழுநேர ஊழியர்கள் நாடு பூராவும் பரந்து செயல்பட்டனர்.

மீண்டும் வேலைகளை ஆரம்பித்தபோது அரசியல் குழுவால் தயாரிக்கப்பட்ட சுயவிமர்சனம் போன்ற அறிக்கை யொன்று வினியோகிக்கப்பட்டது. ஜனாதிபதி தேர்தலின் போது கூடுதலான சக்தி பிரயோகிக்கப்பட்டது எனவும் இதனால் தீங்கு விளைந்தது எனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டது. 1984ல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல ஊழியர்களுக்கு மாவட்ட ரீதியில் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. 8 மாவட்டங்களில் அவ்வாறு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப் பட்டதோடு அம்மாவட்டங்களுக்கான அடிப்படைப் பொறுப்புகள் அரசியல் குழு உறுப்பினர் இருவர் மீது சுமத்தப்பட்டன.

இவர்கள் கட்சியை மீண்டும் இரகசியமாக கட்டி எழுப்ப ஆரம்பித்ததோடு அம்பலமாகி யிருந்தவர்கள் அவர்கள் ஏற்கனவே இயங்கிய பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு வேறு பிரதேசங்களுக்கு முழுநேர ஊழியர்களாக அனுப்பப்பட்டனர். இக் காலகட்டத்தில் ஜேவிபியை கட்டி எழுப்புவதற்காக ஐந்து அரசியல் வகுப்புகள் பயன் படுத்தப்பட்டன. அவையாவன 1) முதலாளித்துவ சமூக அமைப்பின் நெருக்கடிகள், 2) நெருக்கடிகளின் போது பழைய இடதுசாரிக் கட்சிகளும் அவற்றின் செயல்முறைகளும், 3) இவ் நெருக்கடிகளை நாம் எவ்வாறு தீர்ப்பது, 4) ஜேவிபியின் வரலாறு 5) இலங்கையில் சோஷலிசத்தை அடைவதற்கான பாதை என்பவையேயாகும்.

இவ்வாறு செயல்படும்போது கட்சி மீதான தடையை நீக்குவதற்காகவும் தொடர்ச்சியாக முயன்றனர். 1984 ம் ஆண்டு மார்ச் மாதம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, நவசமசமாஜக் கட்சி மீதான தடை நீக்கப்பட்டது. அத்தோடு நவசமசமாஜக் கட்சியின் தலைவர்கள் சட்டவல்லுனர்கள் மூலமாக பொலிசார் முன் தெரிவுபட்டு விடுதலையும் பெற்றனர். ஆனால் ஜேவிபி மீதான தடை நீக்கப்படவில்லை. ஆனால் ஜேவிபி தலைவர்களை தெரிவுபடுமாறும் அதற்குப் பின்னர் கட்சி மீதான தடையை நீக்குவது பற்றி கவனத்தில் கொள்வதாகவும் அரசு கூறியது, எவ்வாறாயினும் ஜேவிபி மீதான தடையை நீக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இருக்கவில்லை.

தமது கட்சி மீதான தடையை நீக்குவதற்கான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுமாறு ஜேவிபி ஏனைய அரசியல்கட்சிகளிடம் கடிதம் மூலம் கோரியது. ஜேவிபி மீதான தடையை நீக்கக் கோரி நவசமசமாஜக் கட்சி முன்னின்று செயல்பட்டதோடு பல அரசியல் கட்சிகளும் வெகுஜன அமைப்புகளும் ஒன்றிணைந்து ஜேவிபி மீதான தடையை நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம் செய்தன. இக் கோரிக்கைக்கு அனேக கட்சிகள், அமைப்புகள், நிறுவனங்கள் மட்டுமன்றி தனி நபர்களும் ஆதரவு அளித்தனர்.

ஜேவிபி தடைசெய்யப்பட்டிருந்த இக்காலத்தில் வெளிநாட்டுத் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காகவும் பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். இதற்காக சோமவன்ச அமரசிங்கவை வெளியிலும் அனுப்பினர்.

இக்காலகட்டத்தில் விஜேவீர "தமிழ் ஈழ போராட்டத்திற்கு தீர்வு என்ன?" என்னும் நூலை எழுதுவதிலேயே தனது

காலத்தின் பெரும் பகுதியை கழித்தார். மீண்டும் மீண்டும் மாணவ இயக்கத்தை நோக்கியே பிரதான கவனம் செலுத்தப்பட்டது

பத்திரிகை ஒன்றை வெளியிட்டும் ஒரு விதத்தில் முன்னுக்குத் தெரியக் கூடியவாறு செயல்பட்டதை தொழிற்சங்க துறையில் காண முடிந்த போதிலும் உந்து சக்தியாக ஜேவிபி கூடுதலாக செயல்பட்டது மாணவர் இயக்கத்துள்ளேயாகும். என்றைக்கும் போராட்ட தன்மை கொண்ட அரசியலின் நல்ல விளைநிலமாக காணப்பட்டது மாணவர் இயக்கமேயாகும்.

1984 ன் இறுதி அரைப்பகுதியில் பல்கலைக் கழகங்களில் இயங்கிய மாணவர் மன்றங்கள் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டதோடு மாணவர்களின் அரசாங்க விரோத நடவடிக்கைகளை அடக்கும் கடுமையான முயற்சியிலும் அரசாங்கம் ஈடுபட்டது.. .. பல்கலைக் கழகங்களில் இயங்கிய மாணவர் மன்றங்கள் மீது தடைவிதிக்கப்பட்ட காரணத்தால் மாணவர் நடவடிக்கை குழு என்னும் பெயரில் மாணவர்கள் செயல்பட்டனர். தொடர்ச்சியாக தீவிரமடைந்து வந்த மாணவர் போராட்டங்களை நசுக்குவதற்காக அரசாங்கம் திட்டவட்டமான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்தது. இத் திட்டத்தின்படி பல்கலைக்கழக வரலாற்றிலேயே முதல் தடவையாக பேராதனை பல்கலைக் கழக பூமியில் 1984 ம் ஆண்டு ஜூன் மாதத்தில் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. இதனால் நிலைமை மேலும் மோசமடைந்தது. பல்கலைக்கழக பூமியில் பொலீஸ் நிலையம் திறக்கப்பட்டதற்கு எதிராக மாணவர் எழுச்சியுற்றனர்.

பொலீஸ் நிலையம் திறந்ததை கண்டித்து எதிர்ப்பு ஊர்வலம் நடாத்திய மாணவர் மீது 1984 ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி பொலீசார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். பொலீசாரின் துப்பாக்கி சூட்டுக்கு இரையாகி பத்மசிறி அபேசேகர என்னும் மாணவன் உயிர் இழந்ததோடு பல மாணவர்கள் காயமுற்றனர். பேராதனை பல்கலைக்கழக மாணவன் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக ஏனைய பல்கலைக்கழகங்களில் போராட்ட அலைகள் பாயத் தொடங்கியதுடன் கூடவே இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது. கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்பட்ட கண்டன ஊர்வலங்களின் மீது 1984 ம் ஆண்டு ஜூன் மாதம் 21 ம் திகதி பொலீசார் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இதனால் ரேகன ரத்னயக என்னும் மாணவன் உயிரிழந்தான்.

இவ் மாணவர் போராட்டங்களில் அரசாங்கத்துக்கு விரோதமான அனைத்து மாணவர் பகுதியினரும் செயல்பட்டதோடு இப் போராட்டங்களுக்கு அரசாங்கத்துக்கு எதிரான சகல கட்சிகளும் அமைப்புகளும் ஆதரவு அளித்தன. தயாபத்திரன என்னும் மாணவனால் தலைமை வழங்கப்பட்ட சுதந்திர சங்கமே கொழும்பு பல்கலைக் கழக மாணவர் போராட்டத்தை வழி நடாத்தியது. சகல பகுதியினரும் ஐக்கியப்பட்டு போராட்டத்தை முன்னெடுத்த போதிலும் இப்போராட்டத்தால் ஏற்படப் போகும் நன்மைகள் வேறுபகுதியினரையும் சென்றடையலாம் என எண்ணிய ஜேவிபியினர் சிற்சில இடங்களில் போராட்டத்தை பின்தள்ள செயல்பட்ட போதிலும் இப்போராட்ட நடவடிக்கைகளின் போது தமது தலைமையை மாணவர் இயக்கத்துள் உறுதிப்படுத்துவதில் அனேக இடங்களில் ஜேவிபியினர் வெற்றி கொண்டனர். ஆயினும் இக்காலகட்டத்தில் மாணவர் போராட்டங்களின் போது கூடுதலாக செய்யப்பட்டது ஜேவிபி அல்லாத மாணவர்களேயாவர்.

ஒப்புநோக்கில் வளரும் போராட்டத் தன்மையை காண்பிக்கக் கூடிய அரசியல் கட்சியுடன் தொடர்பான மாணவர்களுக்கே பெரும்பாலும் பல்கலைக் கழக மாணவ இயக்கத்துள் சக்திவாய்ந்த அத்திவாரத்தை இட முடிகிறது. இடதுசாரி இயக்கம் சீரழிந்தும், இடதுசாரி இயக்கத்தின் ஸ்தானத்தை ஜேவிபியினர் "நெருங்கிக் கொண்டும்" இருந்த பின்னணியின் கீழ் இக்கால கட்டத்தில் மாணவர் இயக்கத்துள் ஜேவிபியினருக்கு தமது சக்தியை கட்டி எழுப்பக் கூடியதாகவிருந்தது. 1985 அளவில் கொழும்பு பல்கலைக் கழகம் தவிர்ந்த ஏனைய சகல பல்கலைக் கழகங்களிலும் ஜேவிபி யினரால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது.

அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் பேரவை உண்மையிலேயே ஜேவிபியின் மாணவர் பேரவையாகவே செயல்பட்டது.

1983 ஜூலைக்கு பின்னர் இனப்பிரச்சனையானது இலங்கையின் ஒட்டுமொத்த அரசியலின் முக்கிய பிரச்சனையாக மாறியது. இப்பிரச்சனைக்கு ஏற்பவே அரசியல் சக்திகள் நெறிப்படுதலும் இடம் பெற்றது. இலங்கை அரசியலில் இரு பிரதான முகாம்கள் தோன்றின. மாணவர் இயக்கமும் இதற்கமைய இரண்டு முகாம்களாக பிளவுபட்டது. இவ் இரு முகாம்களில் ஒன்று தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு சரியானதும் நீதியானதுமான தீர்வு வழங்கப்படவேண்டும் என்னும் கருத்தை கொண்டிருந்த சக்தியாகும். மற்றது அதற்கெதிரான சக்தியாகும். ஒவ்வொரு முகாமிலும் இனப்பிரச்சனை தொடர்பாக அம் முகாமுக்கு உரித்தான பொது விருப்பு பெருமளவில காணப்பட்ட போதிலும் ஏனைய அனேக பிரச்சனைகளில் அவ்வாறான பொது விருப்பு காணப்படவில்லை. எந்த வாக்கியங்களை சோடித்துக் கூறினாலும் சரி இனப் பிரச்சனை தொடர்பாக ஜேவிபி இரண்டாவது முகாமிலேயே இருந்தது. ஜேவிபி மாணவர் இயக்கம் தனது சக்தியை கட்டி எழுப்பவும் தமது பலத்தை விரிவு படுத்துவதற்குமான பிரதான கருத்தியல் ஆயுதமாக "ஈழப் போராட்டத்திற்கு" எதிரான கோஷத்தையே பாவித்தது. கொழும்பு பல்கலைக் கழகத்துள் சுதந்திர மாணவர் சங்கம் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை உறுதியாக ஆதரித்துச் செயல்பட்டது. ஜேவிபி இதற்கு எதிராகவே இருந்தது.

விஜேவீர ஒழிந்திருந்த சமயத்தில் எழுதப்பட்ட "தமிழ் ஈழப்போராட்டத்திற்கு தீர்வு என்ன?" என்னும் நூலில் மெருகூட்டி முன்வைக்கப்பட்ட கருத்துகள் ஜேவிபியை நோக்கி பல்வேறு சக்திகளையும் வென்றெடுப்பதற்கான பிரதான ஆயுதமாக மாறியது.

*34ம் பக்கம்பார்க்க..*

# எம்மதமும் Sum மதமோ?

## அறுஞர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

சிவதாசன் எழுதிய மதம் பற்றிய விடயம் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டது. ஆனால் ஆச்சரியமான விடயம், இந்த மத ஆதரவாளர்கள் கொண்ட கோபம் தான்.. புலிகளுக்கு எதிரான எதையாவது எழுதினால் எப்படி புலிகள் கோபிப்பார்களோ, அதே போல சிலர் கோபம் கொண்டார்கள். சிலர் பேசிய பாணி பெரிய சிலுவைப் போருக்கே வழிவகுக்கும் போலிருந்தது.

சத்தம் போட்ட பெரும்பாலானவர்கள் கட்டுரையை வாசிக்கவில்லை. வாசித்த பலரும் அதனை விளங்கிக் கொள்ளவில்லை. ஒரு கட்டுரையை விளங்கிக் கொள்வதே கஷ்டமான நிலையில், முழுமையான பைபிளை இவர்கள் விளங்கியிருப்பார்கள் என்றே நம்புகிறேன்.

அடிக்கடி பைபிளை மேற்கோள் காட்டும் இவர்களுக்கு.. நானும் பைபிளையே மேற்கோள் காட்டுகிறேன்..

உங்களை பகைவர்களை அன்பு செய்யுங்கள்!

★ ★ ★

மதப் பிரசாரம் பற்றி அந்தக் காலத்தில் யாழ்ப்பாண வைபவ மாலையை 1884 இல் பதிப்பித்த வி.வி.சதாசிவம்பிள்ளை எழுதியது இப்படித்தான்...

சில லாட்டைக் கொடுங் கோலரசினராகிய பறங்கிக்காரர், உலாந்தாக்காரர் காலங்களிலும் இங்கிலீஷ் அரசினர் காலத்திலும் ஐரோப்பா, அமெரிக்கா கண்டங் களிலுள்ள கிறிஸ்து மதச் செல்வர்கள் தம்மத விருத்தியைக் கருதி, நாடு நாடாய் சென்று தம் மத போதனை செய்யுங்களென்று வேதனம் கொடுத்தனுப்ப ஈண்டு வந்த பாதிரிமார் கீழ்மக்களாகிய பள்ளர், நளவர், கரையார், முக்குவர் முதலியோருக்குங் கல்வியுணர்ச்சியில்லாத மிடி மிடைந்த ஏழையர்க்கும் சூனியோபாதன சிருட்டியைக் கூறும் விவிலிய நூலை வீடுகடோறும் கொண்டு சென்று முற்றத்திலே உரலே ஆசனமாகக் கொண்டிருந்து போதிக்க, அவர்கள் பாதிரிமார்களின் உடல், உடை, வாக்கு என்னும் வேற்றுமைத் தோற்றங்களை காண்பது கருதிக் கேட்டு வருவாராயினர். பாதிரிமார் போதித்து மீளுங்காலெல்லாம் அவர்கள் வந்திருந்து போன தம்மில்லிடத்தை சாணத்தால் சுத்தி செய்து வருவாராயினர்.

இப்படியாகச் சொல்லுகின்ற வைபவமாலையில்... இரு தரப்பினரும் தங்கள் முயற்சியில் சலிக்க, பாதிரிமார் மக்கள் மதம் மாறுததால் தங்களுக்கு வருமானம் கிடைக்காது என்று நினைத்து சூழ்ச்சி செய்து அங்குள்ளவர்கள் சிலரை போதகர்களாக்கி, அவர்களுக்கு விவிலியம் கற்பிக்க என்று கூறி பணம் பெற்று அந்தப் பணம் மூலம் சிலரை மதம் மாற்றி அவர்கள் மூலமாக மதமாற்றம் செய்தார்களாம். அவர்கள் போய் 'மெய்யான தேவனை நம்புங்கள்' என்று கூறி போதித்து.. யாராவது கேள்வி கேட்டால் தங்களிடமுள்ள துண்டுபிரசுரங்களைக் கொடுக்க, வாங்குபவர்கள் வெற்றிலை, பாக்கு, புகையிலை மடிக்கலாம் என்றும் வன்னக்கடதாசியாயின் பிள்ளைகளின் விளையாட்டுக்கு உதவும் என்றும் கூறி வாங்கினார்களாம்.

ஒரு பெண்ணை போதகர் கூப்பிட்டு உனக்கு மாதாமாதம் பணம் தருகிறேன், நீ இனிமேல் விபூதி பூச வேண்டாம், எனது கோவிலுக்கு வா என்று பணம் கொடுத்தாராம். பின்னர் பெண் அவ்வூர் அம்மன் கோவிலில் பொங்கல் வர, வருடாந்தப் பொங்கலை பொங்கா விட்டால் தனக்கு ஆபத்து வரலாம் என்று பொங்க, போதகர் அடுத்த மாதம் பணம் கொடுக்கவில்லையாம்.

இந்த போதகர்கள் தங்கள் பாதிரியார் வரும் நாளை அறிந்து சபைப்பொலிவு காட்ட தம் சினேகிதர்களை அழைத்து வருவார்களாம்.

யாழ்ப்பாண வைபவமாலை சரித்திர நூல் என்று சொல்வதற்கில்லை என்றாலும், நூறு வருடங்களுக்கு முன்னால் அந்தக் காலத்திலேயே மத மாற்றங்கள் குறித்த அபிப்பிராயங்களை பிரதிபலிக்கின்றது எனலாம்.

★ ★ ★

இந்த தபால் மூலம் மதம் கற்பிக்கின்ற விடயங்களில் Seventh Day Adventist மதமும் ஒன்று. இப்படியாக தபால் மூலம் மதப்பிரசாரங்கள் பின்னர் 'இல்லம் தோறும் நற்செய்தி' வந்தவுடன் நின்றனவோ என்னவோ? இதில் இல்லம் தோறும் நற்செய்திக்கு பொறுப்பாக இருந்தவர் கியூறியஸின் பேத்தியாரின் சகோதரன் முறையானவர். இவர்கள் நடத்திய ஒரு மாநாட்டிற்கு சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குச் சென்று ஓசியில் 'அன்னதானம்' (மதிய உணவு மேசையில் உட்கார்ந்து) சாப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

கியூறியஸின் பேத்தியாரின் மகள் முறையான ஒருவரின் மாமனார் ஒரு தடவை ஜெகோவாக்கள் பற்றி ஒரு புத்தம் எழுதியிருந்தார். இதை வாசித்த வண.கருணாகரன் என்ற கத்தோலிக்க குருவானவர் காரசாரமாக அதை



விமர்சித்து 'சத்திய வேத பாதுகாவலன்' என்ற வார இதழில் எழுதியிருந்ததை இற்றைக்கு பதினைந்து வருடங்களுக்கு முன் வாசித்திருக்கிறேன். ('இவ்வாறு எழுதுவதன் மூலம் தானும் ஒரு நூலாசிரியராகப் பார்க்கிறார்' என்று குருவானவர் கடுமையாக விமர்சித்திருந்தார்)

★ ★ ★

சிறிய சிறிய பல சபைகள் தோன்றி மதம் மாற்ற முயன்று கொண்டிருந்தன. இதற்காக இந்தியாவில் இருந்து பிரசங்கிகளும் வந்து பிரசங்கம் செய்தார்கள். ஒரு தடவை ஒரு போதகரின் கூட்டத்திற்கு போன போது, அவர் தான் ஒரு இந்து என்றும் தனது தந்தையின் பெயர் அமாவாசை என்றும் தாத்தா பெயர் ஆடி என்றும் சொன்னார். உண்மை பொய் தெரியாது.

இந்த பிரசங்கிகளில் பலர் 'தெய்வீக குணமளிக்கும்' செயல்களில் ஈடுபட்டார்கள். பலர் குணமாகிக் கொண்டதாகவும் சொன்னார்கள். அவ்வாறான நிகழ்ச்சி எதற்கும் நான் சென்றதில்லை.

★ ★ ★

இந்த மதம் பரப்புகின்றவர்களில் நான் பார்த்துச் சிரித்தது, ஹரே கிருஷ்ணக்காரர்களைத் தான்.. அவர்களின் காவியும் மொட்டையும் அந்த வயதில் எனக்கு சிரிப்பு.. என் அண்ணனுடன் படித்த ஒருவரின் சகோதரர் அந்த காலத்தில் ஜேர்மன் சென்று அங்கு தன் கல்வியை விட்டு சாமியாரானார். ஏதோ ஒரு ஆனந்தா... இவர் பிற்காலத்தில் எழுபதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வந்து சமய பிரசாரத்தில் ஈடுபட்டார். இவரது பூர்வீகத்தை அறிந்த கியூறியஸ் இவரை தெருவில் தனியாக மறித்து, அவரது சமயம் பற்றிக் கேட்ட போது, நல்லூரில் உள்ள தங்கள் நிலையத்திற்கு வந்து கொள்கை விளக்கம் பெறுமாறு கூறினார். இறைவன் திரு அடி மீதுள்ள பக்தியோ, தன் முடி மீதுள்ள பக்தியோ என்னவோ, கியூறியஸ் போகவில்லை.

★ ★ ★

யேசுவின் மரணத்தின் பின்னர் கிறிஸ்துவ மதத்திற்கு அதிகம் பேரை மனம் திருப்பியவர் பவுல் என்கின்ற சின்னப்பர். இவர் சவுல் என்கின்ற பெயரில் கிறிஸ்தவ மதத்தினரை கொடுமையாக தண்டித்து பின்னர் மனம் மாறி பலரை மனம் திருப்பினார். இதைப் போலத் தான் கொங்கணிப் பிராமணரான ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் மன்னார் பக்கம் வந்து நிறையப் பேரை மதம் மாற்றினார். சுவாமி ஞானப்பிரகாசர், ஜி.ஜியின் சகோதரரான பாலசுந்தரம் ஆகியோர் இந்து மதத்திலிருந்து மதம் மாறியவர்கள்.

தன் சகோதரருக்கு ஸ்டாலின் என்ற பெயர் வைக்க பெற்றோர் சித்தம் கொண்ட போது கம்யூனிஸ்ட்டின் பெயரை வைக்க மாட்டேன் என்று பாலசுந்தரம் சுவாமியார் ஜோசப் பேர்ணண்டோ என்று பெயர் வைத்தாராம், இப்போது அவரும் சுவாமியாராகி விட்டார் என்று தாயகம் ஆசிரியர் சொன்னார்

★ ★ ★

இந்த மிஷன்கள் மதப் பிரசாரம் என்பதை விட யாழ்ப்பாணத்தில் கல்விக்கு நிறையவே சேவை செய்திருக்கின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கான அரச கூலிகளை உருவாக்கும் தொழிற்சாலைகளாக இந்த பாடசாலைகள் இருந்ததாக புத்திஜீவிகள் கூறலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் பல முக்கியமான கல்லூரிகள் இந்த நிறுவனங்களால் நடத்தப்பட்டவை தான். பல இந்துப் பாடசாலைகளில் தீண்டத்தகாதவர்கள் சேர்த்துக் கொள்ளப்படாத சூழலிலும் இந்த மத நிறுவனங்கள் தான் அவர்களில் பலருக்கு கல்வி அறிவூட்டின

★ ★ ★

இந்தச் சபைகளில் சில பிற்காலங்களில் மற்ற மதங்களிலிருந்து ஆட்களைச் சேர்க்க முயன்றன. கிறிஸ்துவை அறியாத ஒருவருக்கு கிறிஸ்துவைப் பற்றிச் சொல்வது நியாயம், ஏற்கனவே கிறிஸ்தவராயிருப்பவரை மதம் மாற்ற முயல்வது எந்த அடிப்படையில் என்பது எனக்குப் புரியவில்லை. ஏற்கனவே வேரூன்றியுள்ள சபைகள் தங்களது 'செம்மறிகளை மேய்க்க' நேரமில்லாமல் கஷ்டப்படுவதால் புதியவர்களை சேர்ப்பதில் அக்கறை காட்டுவதில்லை. யாராவது விரும்பி வந்தாலும் ஏதோ இயக்கத்தில் சேர்ப்பது மாதிரி பல பரீட்சைகளை வைத்துச் சேர்ப்பார்கள். இந்த புதிய சபைகள் ஆட்சேர்ப்பில் அக்கறை காட்டுவதன் காரணம் என்ன? ஆன்ம ஈடேற்றமா? அப்படியாயின் ஏற்கனவே கிறிஸ்தவராக இருந்தவர்களை சேர்க்க வேண்டிய அவசியமில்லையே! இங்கே ஆளுக்காள் சங்கம் வைத்து அரசாங்கப் பணம் பெறுவது மாதிரி... மேலிடங்களிலிருந்து பணம் பெறும் நோக்கமோ? அல்லது வருமானத்தில் பத்து வீதம் என்று வாங்கும் முக்கோணச் சீட்டு முறையோ தெரியாது.

எந்த மனிதனும் மதம் மாறுவது என்பது அவனது உரிமை.. அதில் யாரும் தலையிட முடியாது. ஆனால் பொருளாதாரக் காரணங்களைக் காட்டி மதம் சேர்ப்பதோ, மதம் மாறுவதோ பக்தி என்ற ஆன்மீக ஈடேற்றத்துக்கான வழி அல்ல. இது முக்கோணச் சீட்டு போன்ற ஒரு ஏமாற்று வித்தையாகத் தான் இருக்க முடியும். பலர் ஆரம்பத்தில் பொருளாதார லாபங்களை எதிர்பார்த்து போய் வந்து பின்னர் எதிர்பார்த்த நலன்கள் கிடைக்காமல் நின்று போனதும் உண்டு.

சில நேரங்களில் இவை ஒரு கட்டத்தில் ஹிப்னோடிச முறை போன்று ஒரு வித மதப் பைத்தியக காரத்தனத்துக்கும் வழிவகுப்பதுண்டு. (Fanaticism) மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள் போன்று பேசுவதும் வேறு அதீத நம்பிக்கைகளும் உருவாகி சாதாரண மனிதருக்கு உரிய நடைமுறைகள் அற்றுப் போயும் விட்டதுண்டு. ஒரு குறிப்பிட்ட சபை ஒன்றின் ஸ்தாபகர் ஒரு பைத்தியக்கார வைத்தியசாலையில் இருந்தவர்.

கியூறியஸின் பேரனார் பேத்தியாரைக் கிண்டல் பண்ணும் விடயம் ஒன்று... (யாரையும் புண்படுத்துவதற்கில்லை) கொஞ்சம் கோபம் வந்தால்.. அதுதான் உன்ரை ஆட்கள் ஆரும் கிணத்துக்குள் விழுந்தால் இறங்கி எடுக்காமல்,' சுத்த வர இருந்து செபித்துக் கொண்டிருப்பினம் என்று கிண்டுவார்.

சில சபைகளில் நகை அணியக் கூடாது. நல்ல விடயம். ஆனால் அதை மதத்தை காரணம் காட்டி நடைமுறைப்படுத்தும் போது அதன் தாற்பரியம் அற்றுப் போகிறது. சில சபைகளில் நோய் வந்தால் வைத்தியசாலைக்குச் செல்லக் கூடாது. இரத்தம் மாற்றக் கூடாது. அமெரிக்காவில் இவ்வாறு நோய் கண்ட தங்கள் குழந்தையை வைத்தியசாலைக்கு

கொண்டு செல்லாமல் இருந்த தம்பதிகள் மீது அரசாங்கமே வழக்குத் தொடர்ந்தது.

★ ★ ★

பிற்காலத்தில் ஜேர்மனி வந்த போது இன்னொரு சுவாரஸ்யமான விடயம் ஒன்றைக் காணக்கூடியதாக இருந்தது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அங்கு சிலர் கோட் சூட் அடித்து புறப்பட்டு நிற்க, கார்களில் வெள்ளையர்கள் வந்து அவர்களை ஏற்றிச் சென்றார்கள். இதென்ன காலமடா? வெள்ளையன் எங்களை காரில் ஏற்றிச் செல்கிறான் என்று பார்த்தால்... புதிய அப்போஸ்தலிக்க சபை என்ற ஒரு சபை 'வழி தவறி வந்த இந்த மந்தைக் கூட்டத்தை' இரட்சித்து வழிநடத்திச் செல்ல முயற்சிப்பது தெரிந்தது. போனால் காட் கிடைக்கும் என்று நம்பியவர்கள் ஒருபுறம், அவர்களின் முகத்தை முறிக்க மாட்டாமல் சென்றவர்கள் ஒருபுறம், அங்கு சென்றால் ஜேர்மன் பெண்களைக் காணலாம் என்ற நம்பிக்கையில் வேறு சிலர்.. என்று பல கிறிஸ்தவர்களைக் கண்டேன். ஒரு தடவை அவர்களின் பிராந்திய மாநாடு நடந்த இடத்திற்கு சென்ற போது அந்த மாநாட்டில் பெரும்பாலானவர்கள் நம்மாளுங்க தான். சிலர் போதகராகக் கூட இருந்தார்கள். நாகலிங்கம் என்ற பெயரில் கூட.. இவர் பைபிளும் கையுமாக பிரசங்கத்தில் ஈடுபட்டிருந்தார். மதத்தில் சேர்ந்தால் கோட் சூட் கிடைக்கும், போனால் எல்லாரும் எல்லாருக்கும் கைகுலுக்குவார்கள்.

★ ★ ★

இந்த நிலையில் நான் இருந்த இடத்தில் மூன்று புத்திஜீவிகள் இந்த மதத்தினரை எவ்வாறு ஏமாற்றினார்கள் என்பது பெரிய கதை..

## ஜே.வி.பி...

தெற்காசியாவில் தமது ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதற்கு இந்தியாவை துண்டு துண்டாக சிதறடிப்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கம் எனவும் இலங்கையில் தனிநாடு அமைப்பதற்காக நடைபெறும் போராட்டமானது இந்தியாவை சின்னாபின்னப்படுத்துவதற்கான பிரதான படி எனவும் இதற்கமைய இலங்கையில் தனி நாடு கோரி தமிழ் பயங்கரவாதிகளால் நடாத்தப்படும் போராட்டம் இந்தியாவை சிதறடிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது முயற்சியின் ஒரு அங்கம் எனவும் ஆதலால் வடகிழக்கில் தனிநாடு கோரி நடாத்தப்படும் போராட்டத்திற்கு எதிராக போராட வேண்டும் எனவும் இப்போராட்டத்திற்காக தன்னை அர்ப்பணித்துள்ள ஒரே ஒரு மாக்சிஸ லெனினிஸ அமைப்பு ஜேவிபி யே எனவும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது. இக் கருத்துக்களை மிக உறுதியாக மாணவர் இயக்கத்துள் புகுத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது. நாட்டைப் பாதுகாக்கும் போராட்டத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது இக் கருத்துகளுக்கமைய 1986 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் "தேசபக்த மாணவர் இயக்கம்" என்னும் பெயரில் மாணவர் அமைப்பொன்றை ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் உருவாக்குவதில் தடைசெய்யப்பட்ட நிலையிலும் ஜேவிபி வெற்றி கண்டது. இதன் பின்னர் ஏனைய பல்கலைக் கழகங்களிலும் தேசபக்த மாணவர் இயக்கத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. ஜேவிபியின் இம் முயற்சி ஏனைய பல்கலைக்கழகங்கள் கைகூடிய போதிலும் கொழும்பு பல்கலைக் கழகத்தில் இது சாத்தியப்படவில்லை. தயாபத்திரன தலைமை வழங்கிய சுதந்திர மாணவர் சங்கம் அவ்வாறான மாணவர் இயக்கத்தை உருவாக்குவதற்கு இடமளிக்கவில்லை இதன் விளைவாகவே ஜேவிபியின் வழிகாட்டலின் கீழ் இயங்கிய படுகொலைக் கோஷ்டியால் சுதந்திர மாணவர் சங்கத்தின் தலைவனான தயா பத்திரனவை 1986 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி கடத்திச் சென்று கோரமாக படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஜேவிபி மாணவர்களுக்கும் சுதந்திர மாணவர் சங்கத்துக்குமிடையே நீண்டகாலமாக இடம் பெற்றுவந்த மோதல்களின் தீர்க்கமான திருப்பமாக அமைந்தது.


**This newspaper is published by**

**A member of Ethnic Press Council Of Canada.**

**Editor: George R.Ckrhushchev**

**P.O.Box 1031, Station "F", Toronto, Ont, M4Y 2T7.**

**Tel: (416) 920 9081**
**Fax: 963 5738**
**E mail:71650,3216 Compuserve**

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்



உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும்.படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.



**தாயகம்**
**சந்தா விபரம்**

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**

... உங்கள் அனைத்து இலங்கை,
... ய உணவுப் பொருட்
... நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 Queen St West**
**(Queen/Lansdowne),**
**Toronto, Ont. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும்
காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

✪ தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

உடன் மீன், இறைச்சி,
பழவகைகள்
மலிவு விலையில்


✪ முத்திரை, சிகரெட், TTC Tickets,
Lottery Tickets
✪ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள் வாடகைக்குப்
பெறலாம்

✪ லேசர் இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உடைகள்,
பரிசுப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**

**588 0310**

## SIVA'S TRADING CO LTD

321-2739

உலகெங்கும் செல்வதற்கான
விமானச்சீட்டுக்களை மலிவுவிலையில்
பெற தொடர்பு கொள்ளுங்கள்
சுந்தரலிங்கம் (சுந்தரி)

**தோசை, இடியப்பம், அப்பம்**
**சுடச்சுடக் கிடைக்கும்**

... வகையான இலங்கை,
... உணவு வகைகள்,
...க்கு வகைகளை மலிவு
விலையில் பெற்றுக் கொள்ள

## சிவாஸ் ரேடிங் கோ

**3852 FINCH AVE EAST**
**KENNEDY/FINCH**

இலங்கையிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடன் இறால், நண்டு,
கணவாய், மீன் மற்றும்
கடலுணவு வகைகள்
மலிவு விலையில்

இந்தியா ருடே, பேசும்படம்,
சினிமா எக்ஸ்பிரஸ், ராசி பலன்,
பொம்மை தவிர்ந்த
அனைத்து தமிழக சஞ்சிகைகளும்
89 சதங்கள் மட்டுமே

## P.S.S.T

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு
வகைகளின் மொத்த விற்பனையாளர்

**Tel:609-0141**

| | |
|---|---|
| எக்கோ, தொம்சன் கசட்டுகள் | 1.99 |
| 8 லேசர் இசைத்தட்டுக்கள் | 29.99 |
| வீடியோ பிரதி வாடகைக்கு 99 சதம் | |
| Video Transfer (Any system) | 8.99 |

$40 க்கு மேல்பொருட்கள் வாங்கினால்
இரண்டு வீடியோப் பிரதிகள்
வாடகைக்கு இலவசம்
$75 க்கு மேல் கொள்வனவு செய்தால்
ஒரு தமிழ்ப்படம் இலவசம்

**5210 Finch Ave East #23**
**(Finch/Middlefield)**

சகல தமிழ், இந்தி, மலையாளப்
படங்கள் வாடகைக்கு கிடைக்கும்